தமிழரசு

மலர்: 5) 1.1.'75 (இதழ்: 13

சட்டப் பேரவையில் முதல்வர் உரை

தமிழ்நாட்டின் தன்னேரில்லாச் சுற்றுலாத் தலங்கள்
— படத் தொகுப்பு

இந்த இதழுடன் இலவச இணைப்பு

சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் பேட்டி

1975 ஆம் ஆண்டு நாட்காட்டி

எஸ். எஸ். தென்னரசு எம். எல். சி.
எழுதும்
புதிய தொடர்கதை

கோகிலம் கோயிலைத் தேடுகிறாள்

நம்பிக்கைக்கு ஏற்ப

ஏந்த முறையும் இல்லாத அளவிற்கு, இந்த முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் ஆகிய இரண்டு தீர்மானங்களும் முன்மொழியப்படுவதற்கு முன்பாகவே மிகுந்த பரபரப்புக்காட்டப்பட்டது. கடந்த பல நேரங்களில் இந்த அவையில் நம்பிக்கையில்லாத்தீர்மானங்கள் அரசின் மீது கொண்டு வரப்பட்டிருந்தாலும் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பு இவ்வளவு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது கிடையாது.

இந்தத் தடவை ஏற்பட்டதற்குக் காரணம், மதிப்பீட்டுக் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கோப்பு இங்குள்ள எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் அல்லது தலைவர்களுக்குக் காட்டப்படவேண்டும் என்ற வகையில் அந்தப் பரபரப்பு எழுந்தது.

இதைப் போன்ற ஒரு பரபரப்பு — ஒரு அறிக்கையை உறுப்பினர்களுக்கு அல்லது தலைவர்களுக்குக் காட்ட வேண்டும் என்ற ரீதியில் டெல்லி நாடாளுமன்றத்திலே எழுந்தது. அங்கே அந்த அறிக்கை — புதுவை மாநில லைசென்ஸ் ஊழல் என்கிற தலைப்புள்ள நிலையில் தயாரிக்கப்பட்ட சி.பி.ஐ. அறிக்கையாகும். அந்த அறிக்கையை அனைவரும் பார்க்க வேண்டுமென்று வாதிட்டு, அதனை அவையில் தருவதாக மத்திய அமைச்சர்கள் அவையிலே உறுதியளித்து, பிறகு உறுதிமொழிக்கேற்ப நடக்காத காரணத்தால், ஐந்தாறு நாட்கள் நாடாளுமன்ற அவையில் பெரிய அமளிகள் ஏற்பட்டு, — மொரார்ஜி தேசாய், இங்கே செழியன் சொன்னதைப் போல சத்தியாக்கிரகம் செய்வேன் என்று அங்கே சொல்லி — (இவர் சொன்னதைப் போல் அவரோ, அல்லது அவர் சொன்னதைப் போல் இவரோ) — சொல்லி, அதற்குப் பிறகு பிரதமரும், சபாநாயகரும், திரு. மொரார்ஜி தேசாயும் மற்றக் கட்சித் தலைவர்கள் ஐந்தாறு முறை கூடிப் பேசி, பத்திரிகைகளில் ஏழெட்டு நாட்கள் அந்தச் செய்திகள் பரபரப்போடு வந்து — கூடிப் பேசிய புகைப்படங்கள் எல்லாம் ஏடுகளில் வந்து — அதன் பின்னால் 'அந்த அறிக்கையைப் பார்க்கலாம், ஆனால் அதனை வெளியே சொல்லக் கூடாது என்று பிரமாணம் எடுத்துக் கொண்டு பார்க்கலாம்' என்று நிபந்தனை விதிக்கப்பட்டு, அதற்குப் பிறகும் குறிப்பெடுக்கக் கூடாது என்று சுட்டிக் காட்டப்பட்டு, ஒருவாறாக பல நாட்களுக்குப் பிறகு இப்போது அந்த அறிக்கையை நாடாளுமன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி இன்று காலையில் அரும்பியிருக்கிறது.

ஆனால் அவ்வளவு சங்கடங்கள் எதுவும் இல்லாமல் — இங்கு அரை மணி நேரம் அது பற்றிய சர்ச்சை எழுந்து, உடனடியாக அது பற்றிய பைலைப் பார்க்கலாம் என்று அரசின் சார்பில் ஒப்புக் கொள்ளப்பட்டு, தலைவருடைய அறையில் அந்தக் கோப்பு பார்க்கப்பட்டிருக்கிறது.

அ.தி.மு.க. உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களும் இங்கே பைலைப் பார்க்கக் காட்டிய இதே அளவு ஆர்வம் — பலமான சர்ச்சை — பிரசித்தி பெற்ற பாண்டிச்சேரி லைசென்ஸ் ஊழல் பற்றிய சி.பி.ஐ. அறிக்கையைப் பார்ப்பதற்கு டெல்லியில் அவர்கள் காட்டினார்களா என்றால்— பத்திரிகையில் அப்படிச் செய்திகள் ஒன்றும் வரவில்லை ; அதை வலியுறுத்தி, அதைக் காட்டித்தான் தீர வேண்டுமென்று அங்குள்ள அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட போராட்டங்களை அங்கே நடத்தியதாகவும் பத்திரிகைகளில் செய்தி கிடையாது.

தங்கமணி : ராஜ்ய சபையில் பூபேஷ் குப்தா இதைப் பற்றி எழுப்பி இருக்கிறார். அந்த பைலைப் பார்க்கவும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சென்றிருக்கிறார்கள். கடைசியில் குறிப்பு எழுதக் கூடாது என்று சொன்னவுடன் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தான் மறுப்புத் தெரிவித்து வெளியே வந்திருக்கிறார்கள்.

முதல்வர் : நான் நாடாளுமன்றத்தைத் தான் குறிப்பிட்டேன். அவர் மாநிலங்கள் அவை பற்றி சொன்னார். அங்கேயாவது கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் அந்த அளவிற்கு வேகமாக நடந்து கொண்டதற்காகப் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மொரார்ஜி தேசாய், இப்படி சத்தியாகிரகம் செய்து ஒரு அறிக்கையைப் பெறுவது முறையா என்று தி.மு. கழகத்தைக் கேட்ட நேரத்தில் அது முறையல்ல என்றுதான் நான்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் ஆகியவற்றின்மீது நடைபெற்றவிவாதத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் 18-12-1974 அன்று அளித்த பதிலுரையை இடநெருக்கடி கருதித் தொகுத்துச் சுருக்கி வெளியிடுகிறோம்.

நடைபோடுவோம்!

சொல்லியிருக்கிறேன். அது முறையல்ல என்று தான் அங்கே உள்ள அ.தி.மு.க.வும் அதிலே கலந்து கொள்ளவில்லை. ஆனால் இங்கே அந்த முறை அனுஷ்டிக்கப்படலாம் என்ற அளவுக்கு அவர்கள் முன் வந்தார்கள் என்றாலும், இங்கே அப்படிப்பட்ட சங்கடங்களுக்கெல்லாம் இடம் இல்லாமல் உடனடியாக அந்த பைல் உறுப்பினர்களுடைய பார்வைக்கு வைக்கப்பட்டு — அது வெளிப்படையாகக் காட்டப்பட்டு எந்த விதமான நிபந்தனைகளும் வைக்கப்படாமல், 'பார்க்கலாம், ஆனால் வெளியே சொல்லக் கூடாது, சிதம்பர ரகசியமாக இருக்கவேண்டு' மென்று நிபந்தனை போடாமல், பார்த்தாலும் குறிப்பெடுக்கக் கூடாது என்று கூறாமல், இந்த அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய முறையீட்டை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பிறகு நம்பிக்கை யில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வந்திருக்கிறது.

எங்கள் மீது நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவிக்கக் கூட இரண்டு நாட்கள் தயக்கம் ஏற்பட்டது. முதல் நாள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்குப் பதிலாக, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அழுத்தந் திருத்தமாக இருந்து, மறுநாளும் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வருவதற்கிடையில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுந்து, இப்படித் தயங்கிக் கொண்டே வந்து இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தில் பேசிய சில கட்சித் தலைவர்கள் என்ன கருத்துக்களை மிக முக்கியமாகச் சொன்னார்கள் என்றால், ஆளும் காங்கிரசைச் சேர்ந்த நண்பர் மாரிமுத்து, தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பெரியவர் மணலி, கோவை செழியன், முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் பேசிய நண்பர் லத்தீப் ஆகியோரும் பேசுகின்ற நேரத்தில், ''இந்தக் கட்சியில் இன்றைக்கு அடிமட்டத்தில் இருக்கிற கட்சிக்காரர்கள், நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்கள், பொறுப்பில் இருப்பவர்கள் அத்தனை பேரும் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும் ; தங்களைத் திருத்திக் கொண்டு இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும்'' என்ற கருத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து சொன்னார்கள்.

அதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், மாரிமுத்து உட்பட அத்தனை பேருக்கும் இந்த ஆட்சி நீடிக்க வேண்டும்; அடிமட்டத்திலிருந்து-இருக்கிற தொண்டர்கள், பொறுப்பில் இருப்பவர்கள் அனைவரும் திருந்திக் கொள்ள வேண்டும் என்ற அந்த உணர்வு அவர்களுக்கு உள்ளூர இருப்பதாக உணர்கிறேன்.

மாரிமுத்து : நான் சொன்னது, ஆட்சியில் இருக்கும்போது தவறு ஏற்படாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தானே தவிர நீடிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

முதல்வர் : இந்த அவையில் யாரும் தெரிவிக்காத பாராட்டை மாரிமுத்து சொன்னார். இந்தக் கட்சி கட்டுப்பாடு நிறைந்தது; கட்டுக்கோப்பாக இருக்கிற கட்சி; இதற்கு கிளைக் கழகங்கள் இருக்கின்றன; முறையாகத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன; அமைப்புகள் ஒழுங்காக இருக்கின்றன என்றெல்லாம் மாரிமுத்து சொன்னார். நானோ, கழகத்தின் பொதுச் செயலாளரோ கூட மேடைகளில் எடுத்துச் சொல்லாத அளவுக்கு, இந்தக் கட்சியின் அமைப்பு முறைகளைச் சிலாகித்து மாரிமுத்து

பேசிய காரணத்தால் தான் — என்ன தான் அவர் இன்றைக்கு இந்த ஆட்சி நீடிக்கக் கூடாது என்று எடுத்துச் சொன்னாலும் கூட — உள்ளூர, 'தொலையட்டும், இவர்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்' என்ற எண்ணத்தோடு இந்தப் பாராட்டுரைகளைச் சொன்னார் என்றே நான் கருதுகிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் இங்கே சொன்ன கருத்துக்களுக்கு நான் ஏறத்தாழ உடன்படுகிறேன். நானோ, நாவலரோ,

இந்தக் கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களோ — மணலி எடுத்துச் சொன்ன வேண்டுகோள்களைப் போன்று நாள் தவறாமல் இந்தக் கட்சியிலே இருக்கிற தொண்டர்களுக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம். ஆனால் ஒரு இயக்கம் என்றால், அந்த இயக்கத்திலே அத்தனை பேரும் நூற்றுக்கு நூறு சரியாக இருப்பார்கள்; எந்தக் குறைபாடும் இருக்காது என்று யாரும் நம்பவும் கூடாது; அப்படி எதிர்பார்க்கவும் இயலாது; அந்தக் குறைபாடுகளை எல்லாம் களைகிற—திருத்துகின்ற தலைமை இருந்திட வேண்டும். ஆகவே மணலி அவர்களுடைய அறிவுரைகளை நான் நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்கிறேன்.

லத்தீப் அவர்களும் அதே ரீதியில் தான் அறிவுரைகளைச் சொன்னார். நண்பர் செழியன் பேசுகிற நேரத்தில் கூட, ஏதோ இந்த அரசின் மீது அவருக்குப் பொல்லாத ஆசை இருப்பதைப் போலவும், அதை யாரோ சிலர் கெடுக்கிறார்கள் என்பதைப் போலவும் சொன்னார். நான் இதை எல்லாம் எடுத்துச் சொல்லக் காரணம், 'நீங்கள் என்ன சொன்னாலும் திருந்த மாட்டோம்; நாங்கள் பிடித்தது தான் பிடி; நாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று சொல்லிக் கொண்டிருக்கிற அரசு இது அல்ல; என்பதை இந்த அரசின் கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் நன்கு புரியும்.

ஆளும் கட்சிச் சார்பில் சொல்லப்படுகிற கருத்துக்களானாலும், தோழமைக் கட்சிகள் சார்பில் சொல்லப்பட்ட கருத்துக்களானாலும்; எதிர்க் கட்சியின் சார்பில் சொல்லப்பட்டாலும், அவைகளில் இந்த அரசால் ஏற்றுக் கொள்ள முடிந்த கருத்துக்களை இயன்ற அளவிற்கு ஏற்றுக் கொண்டு அதை நடைமுறைப் படுத்துகின்ற பணியை நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

ஆலடி அருணா பேசுகின்ற நேரத்தில், 'ஆளுகிறவர்கள் அண்ணாவின் தம்பிகளா? அலிபாபாவின் கூட்டமா?' என்று கேட்டார். அவருடைய பேச்சினில் ஆற்றல், விறுவிறுப்பு இருக்கும் என்பதை இன்றைக்கு அவர் வேறு இடத்தில் இருந்தாலும் நான் மறந்து விடுகிறவன் அல்ல; அவர் இந்த மன்றத்தில் என் பின்னால் இருந்து மாநில சுயாட்சி பற்றிப் பேசிய அந்தப் பேச்சு என் காதுகளில் இன்றைக்கும் ரீங்காரம் செய்து கொண்டு தான் இருக்கிறது. நன்றாகச் சிந்தித்துப் பேசக்கூடிய அருணாவே 'நாட்டை ஆள்வது, அண்ணாவின் தம்பிகளா? அலிபாபாவின் கூட்டமா?' என்று



பேசிவிட்டாரே என்று நான் வருத்தப்படவில்லை.

அலிபாபா கூட்டமா என்றார். அவர் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிற தலைவரே கூட நடித்து வெற்றிகரமாக ஓடிய படம்! (சிரிப்பு). அதிலே அலிபாபா என்ற கதா நாயகன் வேடத்தையே அவருடைய தலைவர் தான் போட்டார். (சிரிப்பு). உங்களுக்குத் தெரியும்; எந்தக் கெட்டவனுடைய பாத்திரத்தையும் அவர் ஏற்று நடிக்க மாட்டார்; கெட்டவனாகவே நடிக்க மாட்டார்; நல்லவனாகத்தான் 'நடிப்பார்'! (பலத்த சிரிப்பு).

ஆலடி அருணா : நான் அலிபாபா கூட்டம் என்று சொன்னது, அலிபாபா கதையில் வருகின்ற கூட்டம் என்ற பொருளில் ஆகும். இந்தி ஒழிக என்று சொன்னால், இந்தி ஒழிக என்று பொருளல்ல; இந்தி ஆதிக்கம் ஒழிக என்றுதான் பொருள்; ஆகவே அலிபாபா கூட்டம் என்றால் அலிபாபா கதையில் வருகின்ற திருட்டுக் கூட்டம், கொள்ளைக் கூட்டம்!

முதல்வர் : இந்தி ஒழிக என்றால், இந்தி ஆதிக்கம் ஒழிக என்று பொருள் என்றால், அலிபாபா கூட்டம் என்றால் அலிபாபா ஆதிக்கம் உள்ள கூட்டம் என்று அர்த்தம்; அலிபாபா ஆதிக்கம் உள்ள கூட்டம் என்றால், அங்கே இருந்த நாற்பது திருடர்களுக்கும் தலைமை வகித்ததாகப் பொருள்; (சிரிப்பு). ஒரு வேளை, நாம் தவறிவிடக் கூடாது என்பதற்காக 'அரேபியன் கதை'களை வாங்கி நேற்று இரவு படித்துவிட்டுத்தான் வந்தேன். அதிலே நாற்பது திருடர்களைப் பிடித்தான் அலிபாபா என்று தான் இருக்கிறது. (கை தட்டல்). ஆகவே அலிபாபா ஒரு வீரன், திருடர்களை, கொள்ளைக்காரர்களைப் பிடித்தவன் ; திருடர்கள் அலிபாபாவைக் கொல்வதற்காக வந்த போது கூட, அலிபாபா தன்னுடைய காதலியோடு சேர்ந்து கொண்டு பீப்பாயில் இருந்த திருடர்களை எல்லாம் பொசுக்கித் தீர்த்து விட்டார்கள் என்று தான் கதை முடிகிறது. ஆகவே அலிபாபா யார்? திருடர்கள் யார்? (கை தட்டல்) என்பதை நம்முடைய எதிர் காலம் உணர்த்தும்.

செழியன் : நீங்கள் சொல்கிற வாதப்படி, அந்தத் தலைவன் நல்லவன்; மற்றவர்கள் மோசம்; என்று சொல்கிற போது, 'நீங்கள் நல்லவர் என்பதையும், உங்களைப் பின்பற்றுகிறவர்கள் மோசம்' என்பதையும் நீங்களே ஒத்துக் கொள்கிறீர்களா?

முதல்வர் : அந்த அலிபாபாவின் எதிரிகள் திருடர்கள்; (கைதட்டல்) அதுதான் கதை. (கைதட்டல்). படம் எடுக்கின்ற தயாரிப்பாளர் செழியனுக்குக் கூடவா கதை தெரியவில்லை. (பலத்த கைதட்டல்).

அலிபாபா என்கிறவன் நல்லவன்; அவனுடைய எதிரிகள் திருடர்கள்; இதுதான் கதை. (பலத்த கைதட்டல்).

பொதுவாக இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானமானாலும், கண்டனத் தீர்மானமானாலும், நடைபெற்ற இந்த நான்கைந்து நாட்கள் விவாதத்தில் மிக உயிர்ப்புள்ள பிரச்சினையான-இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற உணவுப் பிரச்சினை குறித்து

எல்லாக் கட்சியின் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் கூறியிருக்கிறார்கள்.

இதிலே அரசைக் குறை கூறவேண்டும் என்கிற எண்ணத்தோடு அவரவர்களுடைய கட்சியின் அடிப்படையில் பேசியிருந்தாலும்—அனைத்துக் கருத்துக்கள் இடையே இழையோடிக் கொண்டிருக்கிற இன்றையத் தமிழகத்தின் உணவு நிலவரம் குறித்தோ, அல்லது நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பயங்கரமான வறட்சி நிலவரம் குறித்தோ, நாம் மாறுபாடான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை.

பேசியவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போலவும், வானிலை அறிவிப்பின்படியும், தமிழகத்தில் நூறாண்டுக்காலம் இல்லாத பயங்கரமான மழையின்மை இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். 65 சதவிகித மழை இந்த ஆண்டு குறைந்துவிட்டது; 35 சதவிகித மழைதான் நமக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த மழை பொய்த்துவிட்ட சூழ்நிலையை—அதனால் ஏற்பட்டிருக்கிற விளைவுகளை நாம் சந்திக்க, சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எதிர்க் கட்சித் தரப்பில் பேசிய சில பேர் ‘இந்த ஆண்டுதான் மழை பொய்த்துவிட்டது; சென்ற ஆண்டு இவ்வளவு மோசம் இல்லையே; இருந்தாலும் சென்ற சம்பா அறுவடையில் ஏன் விலை ஏறியது, இதற்கு நீங்கள் தருகிற பதில் என்ன?’ என்றெல்லாம் கேட்டார்கள். கேட்டுவிட்டு அவர்களே சொன்னார்கள்; தஞ்சையில் தடையை எடுத்ததுதான் இதற்கு எல்லாம் காரணம்; நீங்கள் தஞ்சை மாவட்டத்தில் தடையை எடுத்தது பெரிய தவறு; அதிலே ஊழல் நடந்துவிட்டது; அந்த ஊழலை நடத்துவதற்காகவே நீங்கள் தடையை எடுத்தீர்கள்; என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. தடையை எடுக்க வேண்டுமென்று நிலக்கிழார்கள் மாத்திரமல்ல; பெரியவர் மணலி போன்றவர்கள் கூட அறிவுரை கூறினார்கள்; அவர் நிலக்கிழார் அல்ல; அல்லது, அவருடைய வரலாற்றைப் புரிந்தவர்களுக்கு அவர் நிலக்கிழார் பக்கம் நிற்கக் கூடியவர் என்கின்ற எண்ணமும் நிச்சயமாக ஏற்படாது. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் கூட, தஞ்சையில் தடையை எடுக்க வேண்டும் என்ற யோசனையை இந்த அரசுக்குச் சொன்னார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலக்கிழார்கள், வியாபாரிகள், மற்ற மாவட்டத்தில் உள்ள வாங்கிப் புசிக்கின்ற மக்கள் அத்தனை பேரும் இந்தக் கோரிக்கையை எழுப்பினார்கள். என்ன காரணம்? மற்ற மாவட்டங்களில் தஞ்சை மாவட்டத்தை விடப் பல மடங்கு அரிசி விலை ஏறிவிட்டது; ஆகவே இங்கே தடையை எடுத்து, மற்ற இடங்களுக்கு உணவுத் தானியங்கள் புழக்கத்திற்கு வருமானால், விலை ஒரு சமநிலைப்படுத்தப்படும். ஆகவே தடையை நீங்கள் எடுத்துவிடுங்கள் என்று அரசுக்கு யோசனை கூறப்பட்டது.

இப்படித் தடையைப் போடுவதோ, எடுப்பதோ என்பது கடந்த ஆண்டு மாத்திரம் சம்பா அறுவடையின் போது நடைபெற்ற சம்பவம் அல்ல; 1970-ஆம் ஆண்டு தஞ்சையில் போக்குவரத்துக் கட்டுப்பாடு விதிக்கப்



பட்டது. 8—1—70-இல் தடை விதிக்கப்பட்டு, பிறகு எட்டு மாதங்கள் கழித்து 15—9—70-இல் கட்டுப்பாடு எடுக்கப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு அங்கிருந்து உணவுத் தானியங்களை அனுப்ப வழிவகை செய்யப்பட்டது. அதைப் போலவே 1—1—71-இல் கட்டுப்பாடு போடப்பட்டு பிறகு 5—10—71 இல் அந்தத் தடை எடுக்கப்பட்டது. 5—11—71-இல் கட்டுப்பாடு போடப்பட்டு, பத்து மாதங்களுக்குப் பிறகு 14—9—72-இல் மீண்டும் கட்டுப்பாடு எடுக்கப்பட்டது. 18—1—73-இல் தடை போடப்பட்டு 6—10—73-இல் எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலத்தான் 15—12—73 தடை போடப்பட்டு 10—6—74-இல் தடை எடுக்கப்பட்டது.

அனந்தநாயகி : இந்த விவரங்களிலிருந்து பார்த்தால் குறுவை அறுவடை செய்த பிறகுதான் அப்போதெல்லாம் தடை நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு மாத்திரம் ஜூன் மாதத்திலேயே அந்தத் தடையை நீக்க என்ன காரணம்?

முதல்வர் : நான் முதலில் விளக்கத்தைக் கூறிவிட்டுத்தான் இந்த விவரங்களைத் தந்தேன். மற்ற மாவட்டங்களில் விலை ஏறிவிட்டது. அதைச் சமநிலைப்படுத்துவதற்காக இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்து அரிசி, மற்ற மாவட்டங்களுக்குச் செல்லுமேயானால், வேகமாக ஏறிவிட்ட விலை குறையக் கூடும் என்பதற்காகத்தான் அந்தத் தடை எடுக்கப்பட்டது.

ஆனால் அரசின் நல்ல எண்ணத்தைப் புரிந்து கொள்ளாமல் சிலர் இடையில் தவறு செய்யத் தொடங்கினார்கள். தடையை எடுத்தவுடன் அரிசி விலை ஏறியதா? இறங்கத் தொடங்கியதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தடையை எடுத்தவுடன் அரிசி விலை இறங்கத் தொடங்கியது என்பதை 13—6—74 தினமணி பத்திரிகை, 14—6—74 இந்துப் பத்திரிகையில் செய்திகள் போட்டிருக்கிறார்கள்.

‘‘தமிழ் நாட்டில் அரிசி விலை குறைகிறது’’ என்று தலைப்பிட்டு, தினமணியில் கட்டாய லெவி முறையும், தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி நடமாட்டமும், கட்டுப்பாடும் ரத்து செய்யப்பட்டதை அடுத்து, தமிழ்நாட்டில் அரிசி விலை குறைய ஆரம்பித்துள்ளது; திருச்சியில் அரிசி, நெல் மூட்டைகள் விலை ரூபாய் எட்டு முதல், ரூபாய் பத்து வரை



குறைந்துள்ளதாகத் திருச்சி வர்த்தக சபைத் தலைவர் மாயாண்டி தெரிவிக்கிறார்; சர்க்கார் இதை முன்பே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். அவர் கொடுத்துள்ள அறிக்கையில் அரிசி சில்லறை விலையில் கிலோவுக்குப் பதினைந்து பைசா குறைந்துள்ளதாகக் கூறியிருக்கிறார். அது மாத்திரமல்ல; சென்னையிலும் விலை குறைந்தது என்ற விவரங்களை, தினமணி பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

கோவையிலும் விலை குறைந்தது என்ற விவரங்களும் தினமணியில் வெளியாகி இருக்கிறது. தலையங்கமே கூடத் தினமணியில் அப்போது வெளியாகி, அதில், ''அண்மையில் அரிசி விலை தமிழ் நாடெங்கும் கணிசமாக உயர்ந்துள்ளது. அரிசி, நெல் மீதான லெவியும், போக்குவரத்துக் கட்டுப்பாடும் தான் இதற்குக் காரணம் என்று வர்த்தகத் துறையினர் கூறினர். இதற்கு மதிப்புக் கொடுத்துத் தமிழ் நாடு முழுவதும் அரிசி, நெல் லெவியை அரசு ரத்து செய்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து வெளியே அரிசி, நெல் கொண்டு போவதற்கு இருந்த கட்டுப்பாடுகளையும் அரசு விலக்கிவிட்டது. எல்லைப்புறங்களில் மட்டுமே கள்ளக்கடத்தலைத் தவிர்க்கக் கட்டுப்பாடுகள் இருந்து வரும், மற்றபடி தாராளப் போக்குவரத்து இருக்குமாகையால் மாநிலம் எங்கும் விலை வீக்கம் ஓரளவு வடிந்து ஏறக்குறைய ஒரே சீரான விலை அமல் ஆவது சாத்தியம் ஆகலாம்'' என்று தலையங்கம் எழுதினார்கள்.

ஆனால் நாம் எண்ணியதற்கு மாறாகக் கொள்ளை இலாபம் அடிக்க வேண்டுமென்று எண்ணிய வியாபாரிகள் இந்த நேரத்தில் நம்முடைய உணவு தானியங்கள் அதிக விலைக்குப் போனால் மெத்த இலாபம் கிடைக்கும் என்ற பேராசைக்கு ஆளான இந்த வியாபாரிகளுடைய நோக்கத்திற்குப் பலியான விவசாயப் பெருங்குடி மக்கள்—இவர்கள் நம்முடைய நல்ல எண்ணத்தைப் புரிந்து கொள்ளாத காரணத்தால் ஆங்காங்கு கொண்டு செல்லப்பட்ட மாவட்டங்களில் இந்த உணவு தானியங்கள் பதுக்கப்பட்டன. சில இடங்களில் இதைக் கள்ளக்கடத்தலுக்கு—வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லவும் முயற்சிகள் எடுக்கப் பட்டன.

உடனடியாக இந்த அபாயத்தை உணர்ந்த அரசு, பத்தாம் தேதி தடையை எடுத்த அரசு பதிமூன்றும் தேதியே மீண்டும் சில நிபந்தனைகளை விதித்து கலெக்டர்களுடைய அனுமதி இல்லாமல் மாவட்டங்களுக்குச் செல்லக் கூடாது என்ற ஒரு நிபந்தனையோடு கூடிய தடை விதிக்கப்பட்டு—மற்ற மாவட்டங்களுக்குச் செல்கிற உணவு தானியங்களும் அந்தந்தக் கலெக்டர்களுடைய மேற்பார்வையில்தான் ஆங்காங்கு விநியோகிக்கப்பட்ட வேண்டும் என்ற நிபந்தனையும் போடப்பட்டு—ஏற்படவிருந்த அபாயம் தடைபடுத்தப் பட்டது.

இங்கே பேசுகின்ற நேரத்தில், ஒன்பது இலட்சம் டன் அந்த மூன்று நாளிலே வெளியே போய்விட்டதாக செழியன் போன்றவர்கள் சொன்னார்கள். ஒன்பது இலட்சம் டன் என்பது ஏதோ பேசுவதற்கு அழகாக இருக்கலாம். கேட்பவர்களுக்குப் பீதியை உருவாக்கலாம். ஒன்பது இலட்சம் போய்விட்ட காரணத்தால் தானே இவ்வளவு பெரிய பற்றாக்குறை தமிழகத்தில் ஏற்பட்டுவிட்டது என்று நம்பத் தோன்றலாம். ஆனால் ஒன்பது இலட்சம் டன்னைத் தஞ்சையிலிருந்து கடத்துவது என்றால், யோசித்துப் பார்க்க வேண்டும்; எத்தனை லாரிகள் வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு லாரி ஐந்து டன் அரிசி அல்லது நெல்தான் பிடிக்கும் என்று கணக்கிடுகிறார்கள். செழியனுக்காக வேண்டுமானால் ஒரு லாரி ஒன்பது டன் என்று வைத்துக் கொள்வோம்.

லாரிக்கு ஒன்பது டன் ஏற்றுவதாக இருந்தால் கூட ஒரு லட்சம் லாரிகள் தேவைப்பட்டிருக்கும். தஞ்சை மாவட்டத்தில் ஒரு இலட்சம் லாரிகளைக் கொண்டு போய் நிறுத்துவதாக இருந்தால், ஒன்றின் மேல் ஒன்றாக ஐந்தாறு அடுக்குகளாக நிறுத்தி வைத்தால் தான் தஞ்சை மாவட்டம் முழுவதும் ஒரு இலட்சம் லாரிகளை நிறுத்த முடியும். தமிழ் நாட்டில் உள்ள மொத்த லாரிகளின் எண்ணிக்கையே இருபதாயிரத்துக்கும் குறைவுதான்.

தமிழ் நாட்டில் உள்ள மொத்த லாரிகளின் எண்ணிக்கையே இருபதாயிரம் தான்; ஒன்பது இலட்சம் டன்களை ஏற்றிச் செல்ல வேண்டுமென்றால் ஒரு இலட்சம் லாரிகள் வேண்டும்; ஆகவே இது நம்பத் தகுந்ததா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பழைய காலத்தில் கோயில்களில் பூசாரிகள் பாடுவார்கள். பல்லுக்குப் பல் இரு காதம்; பல்லிடுக்கு முக்காதம் என்று பீமசேனனைப் பற்றி பாடுவார்கள். பக்கத்தில் இருக்கிற சிஷ்யன் 'ஆமாம், ஆமாம்' என்று பம்பை அடித்துக் கொண்டிருப்பான். ஆனால் கேட்க வேண்டும்; காதம் என்றால் பத்து மைல் பல்லுக்குப் பல் இரு காதம் என்றால் இருபது மைல்; பல்லிடுக்கு முக்காதம் என்றால் மொத்தம் ஐம்பது மைல்; இப்படி முப்பத்திரண்டு பற்கள் ஒருவனுக்கு இருந்தால் அவனுடைய வாய் எத்தனை ஆயிரம் மைல் நீளம் இருக்கும்? கிட்டத்தட்ட பத்தாயிரம் மைல் நீளம் இருக்கும்; வாய் மாத்திரம் பத்தாயிரம் மைல் நீளமுள்ள மனிதனுக்கு தலை எவ்வளவு மலை நீளம் இருக்கும்? ஐம்பதாயிரம் மைல் இருக்கும். அவனுடைய உடம்பு எத்தனை மைல் சுற்றளவு கொண்டதாக இருக்கும்? இருபத்து மூவாயிரம் மைல் சுற்றளவு உள்ள உலகத்தில் அந்த மனிதன் எங்கே நின்று கொண்டிருந்தான்? என்று அவன் கேட்காத காரணத்தால் தான் இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளைப் பரப்புகின்ற பூசாரிகள் உற்பத்தியானார்கள். (கைதட்டல்). இவைகளை எல்லாம் மேடை

யிலே பேசியிருக்கிறோம், புராணங்களைக் கண்டிக்கின்ற நேரத்தில் — செழியன் உட்பட! ஆகவே இன்றைக்கு ஒன்பது இலட்சம் டன் வெளியேறிவிட்டது என்று பேசுவதும், அதற்கு எத்தனை லாரிகள் வேண்டும் என்று கூட கணக்கிடாமல் பேசுவதும் அவ்வளவு நல்லதல்ல;

தங்கமணி, தமிழ் நாட்டு அரிசி என்று துபாய் நகரில் போர்டே போட்டிருந்தார்கள் என்று சொன்னார். அரங்கண்ணல் கூட என்னிடம் சொன்னார். லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் 'மெட்ராஸ் ஊறுகாய்' என்று போர்டு போட்டிருந்தார்கள் என்று சொன்னார். மெட்ராஸ் ஊறுகாய் என்று போடப்பட்ட காரணத்தாலேயே சென்னையிலிருந்து யாரோ கடத்திக் கொண்டுபோய் விற்கிறார்கள் என்று அர்த்தம் அல்ல. அங்கே வருகின்றவர்கள், தமிழ் நாட்டைப் பற்றிப் பெருமையாகக் கருதிக் கொண்டிருப்பவர்களைக் கவர, அப்படிப்பட்ட விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கலாம். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நம்முடைய காவல் துறை அதிகாரிகளும், கேரள அரசின் காவல் துறை அதிகாரிகளும் இதைப் பற்றி எல்லாம் சென்ற ஆண்டே கூடிப் பேசி ஒரு முடிவெடுத்தார்கள். அரிசி, மாவு போன்ற வைகளைப் படகுகள் மூலமாகவோ, தோணிகள் மூலமாகவோ கடத்திச் செல்ல முடியாது. காரணம் கடலின் அலைகள் அதிலே ஏற்படுகிற உப்பு காரணமாக அந்த உணவுப் பொருள்கள் கெட்டுவிடும்; ஆகவே இந்தச் செய்திகள் தவறானவை; இருந்தாலும் நாம் அவைகளைக் கண்காணிப்போம் என்ற அளவில் ஒரு முடிவை நம்முடைய அதிகாரிகளும், கேரள அதிகாரிகளும் (அதைச் சொன்னால் தான் கே.டி.கே. நம்புவார்) . . . . .

தங்கமணி : முதலமைச்சரின் வாதம் தமிழகத்திலிருந்து அரிசி கேரளா மூலமாகவோ வேறு மாநிலங்கள் மூலமாகவோ வெளியே போகவில்லை என்று சொல்கிறாரா? இது பேச்சிற்கு வேண்டுமானால் நன்றாக இருக்குமே தவிர, உண்மையாகாது. இங்கேயுள்ள கடத்தல்காரர்களுக்கும், அங்கேயுள்ள கடத்தல் காரர்களுக்கும் தொடர்பு இருந்து போகலாம்.

முதல்வர்: நான் சொல்லும்போதே காவல் துறையினர் அப்படிப் பேசி முடிவெடுத்திருக்கிறார்கள் என்றாலும், மேலும் கண்காணிக்கப்படும் என்றும் கூறியிருக்கிறேன். இல்லவே இல்லை என்று தட்டிக் கழிக்கவில்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு குற்றத்தைக் கற்பனை செய்து கொள்ளத் தேவையில்லை. அப்படியே வாதத்திற்காகப்போய் இருப்பதாக வைத்துக் கொண்டாலும், கடல் கடந்து அரிசி செல்கிறது என்றால் அதற்குப் பொறுப்பு மாநில அரசா? மத்திய அரசா?

மத்திய அரசுதான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். 'துபாய்க்கு அரிசி போய் விட்டது, அதைக் கண்டுபிடியுங்கள்' என்று பாராளுமன்றத்தில் இதுபற்றிப் பிரச்சினை எழுப்பி மத்திய சர்க்கார் அதைக் கவனிக்க வேண்டும், மாநில அரசுக்கு அந்தப் பொறுப்பு கிடையாதா என்றால், பொறுப்பு இருக்கிறது. ஆனால் எதற்கெடுத்தாலும் மாநில சர்க்காரைக் குற்றம் சாட்டுகின்ற முறையை அனுபவம் மிக்க தங்கமணி போன்றவர்கள் வைத்துக் கொள்ளக் கூடாது.

யாசின் எங்கே போய்விட்டார்? என்று தங்கமணி கேட்டார். ஏதோ தமிழ் நாட்டு சர்க்கார் அவரை மறைத்து வைத்திருப்பதைப் போலவும், அவரைப் பிடிக்காமல் இருப்பதைப் போலவும் ஒரு உணர்வு தோன்றும் விதத்தில் அவரைப் போன்றவர்கள் பேசுவதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. யாசினைப் பிடிக்க வேண்டுமென்று, மாநில அரசுக்கு மத்திய அரசு அனுப்பிய முதல் பட்டியலில் அவருடைய பெயர் இல்லை. முதல் பட்டியலில் யாசினுடைய பெயரோ, ரகுமானுடைய பெயரோ இல்லை. இரண்டாவது பட்டியல் வருவதற்கு முன்பாகவே அவர் போய்விட்டார். ஆக அதற்கு யார் காரணம்? முதல் பட்டியலில் இவ்வளவு பிரசித்தி பெற்றவராக இருக்கிற யாசினோ, ரகுமானோ, அன்றைக்கே இணைக்கப்படாததற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டுமேயல்லாமல்,— ஏதோ யாசின் பல்லவா போக்குவரத்து பஸ்ஸில் ஏறி வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டார் என்று மாநில சர்க்காரைக் குற்றஞ்சாட்டுவது முறையல்ல; எந்த விமானத்தில் போனார்? யார் பாஸ்போர்ட் கொடுத்தார்கள்? பாஸ்போர்ட் கொடுக்கின்ற அதிகாரம் மாநில சர்க்காருக்கா? அல்லது மத்திய சர்க்காருக்கா? யாசின் போவதற்கு யார் துணை இருந்தார்கள்? என்பதை எல்லாம் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறதே அல்லாமல் மாநில சர்க்காருக்கு இல்லை.

தங்கமணி : யாசினுடைய பெயர் முதல் பட்டியலில் இல்லாவிட்டால் கூட அவர் தமிழ் நாட்டில்தான் அப்போது இருந்திருக்கிறார்; தமிழ் நாட்டு அரசுக்கு அவர் கள்ளக்கடத்தல்காரர் என்பது தெரியாதா? ஏன் இவர்களே போய்ப் பிடித்திருக்கக் கூடாது.

முதல்வர் : யாசின் மாத்திரமல்ல; இன்னும் சில கறுப்புப் பணக்காரர்கள் தமிழ் நாட்டில் இருப்பது தமிழக அரசுக்குத் தெரியும். ஆனால் அவர்களைப் பிடிக்கும் அதிகாரம் எங்களிடம் இல்லையே? அந்த அதிகாரம் இருந்திருந்தால் அவர்கள் எங்களிடம் அல்லவா இருப்பார்கள்; வெளியே போய் இருக்க மாட்டார்களே (சிரிப்பு).

தங்கமணி : நம்முடைய அரசாங்கமே பிடித்திருந்தால் மத்திய அரசிடம் நல்ல பெயர் வாங்கியிருந்திருக்கலாமே?

முதல்வர் : பிடித்திருக்கலாம். அந்த அதிகாரங்கள் நமக்கும் வேண்டுமென்றுதான் இன்றைக்கு நாம் மத்திய சர்க்காரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் என்னென்ன பட்டியல் அனுப்பி வைக்கிறார்களோ

அவர்களைத்தான் பிடிக்க வேண்டுமேயல்லாமல் நாமாக கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடிக்கலாம் என்று ஒரு தீர்மானத்தைத் தங்கமணி அவர்கள் கொண்டு வருவார்களானால், அதை நிறைவேற்றித் தர ஆளும் கட்சியில் இருக்கிற அத்தனை பேரும் தயாராக இருக்கிறோம். அதனுடைய விளைவுகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த விளைவுகளைக் கழக அரசு ஏற்றுக் கொள்கிற நேரத்தில் தங்கமணி எங்களோடு இருப்பதாக உறுதி கூறுவார்களானால் நிச்சயமாக அந்தத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வருவதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. முதல் பட்டியலில் யாசின் பெயர் இல்லை. அது எங்களுடைய தவறு இல்லை.

குறிப்பிடப்பட்ட யாசின் கூட வெளி நாட்டில் இருக்கிறார், இங்கே இல்லை என்று தெரிந்த பிறகு கூட, அவருடைய சொத்துக்களை எல்லாம் கூட ஒரு காலக் கெடு கொடுத்து இவ்வளவு நாளைக்குள் வராவிட்டால் அவருடைய சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்படும் என்ற உத்தரவும் நீதிமன்றத்தின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கிறது.

தங்கமணி: பறிமுதல் உத்தரவு சர்க்கார் செய்ததா? நீதிமன்றம் செய்ததா?

முதல்வர்: நான் சட்டம் படிக்கவில்லை. தங்கமணி சட்டத்தில் தேர்ச்சி பெற்றவர்; வெளிநாடு சென்று படித்தவர்; சர்க்கார் உத்தரவு போட்டுத்தான், நீதிமன்றம் அந்த உத்தரவை அங்கீகரித்து, சப்தி செய்ய அனுமதித்திருக்கிறது.

கள்ளக்கடத்தல்காரர்களை மாத்திரமல்ல; தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றல்ல 1973-ஆம் ஆண்டிலிருந்து மத்திய சர்க்காரின் உத்தரவு கள்ளக்கடத்தல் மன்னர்களைப் பிடியுங்கள் என்று வருவதற்கு முன்பே, தமிழகத்தில் உள்ள அரிசிக் கடத்தல் அரசர்களை எல்லாம் பிடிக்கின்ற அந்தப் பொறுப்பை, மாநில அரசு ஏற்றுக் கொண்டு, இதுவரை 'மீசா' உத்தரவைப் பயன்படுத்தி 48 பேரை நாம் பிடித்திருக்கிறோம்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி உணவு தானியப் பதுக்கல்காரர்கள், கடத்தல்காரர்கள், இப்படிப்பட்ட கோர விளையாட்டை நடத்திக் கொண்டிருக்கிற கொடுமைக்காரர்கள் 522 பேரைக் கைது செய்து, வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட உணவு தானியங்களின்



மொத்த மதிப்பு இரண்டு கோடியே இருபத்து எட்டு இலட்சம் ரூபாய்க்கானதாகும்.

உண்மை இப்படியிருக்க பதுக்கல்காரர்கள், கடத்தல்காரர்கள், பணக்காரர்கள் செல்வச் சீமான்கள் எல்லாம் இவர்களுக்கு, இந்த அரசுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

நண்பர் பெ. சீனிவாசன்கூட ரொம்ப வேதனையோடு சொன்னார். இப்படிப் பொன்னப்பநாடார், தங்கமணி போன்றவர்கள் எல்லாம் பேசும்போது, வடபாதிமங்கலம் தியாகராச முதலியார் பெயரை அடிக்கடி இங்கே உச்சரித்தார்கள். யார் தியாகராச முதலியார்?

என்னைப் பொறுத்தவரையில் நான் இளமைக் காலத்திலிருந்து திருவாரூரில் அவரை எதிர்த்து வருகிறவர்களில் ஒருவன்; திருவாரூர் நகர்மன்றத் தலைவராக அவர் வந்துவிடக்கூடாது என்பதற்காக-அவர் சார்பில் இருபது பேர் உறுப்பினர் பதவிக்காக நிறுத்தப்பட்ட நேரத்தில், மற்றவர்கள் எல்லாம் வெற்றி பெற்றாலும் பரவாயில்லை; ஆனால் இவர் தலைவராக வந்துவிடக்கூடாது என்று, நான் மாணவனாக இருந்த அந்தக் காலத்திலேயே—அவர் இரண்டு வார்டுகளில் போட்டியிட்டார்-அந்த இடங்களில் வேலை செய்து ஒரு வார்டில் ஐந்து வாக்குகளில் ராமனுஜம் முதலியாரிடம் தோற்றார்; இன்னொரு வார்டில் 12 வாக்குகள் வித்தியாசத்தில் துரைராசு என்பவரிடம் தோற்றார்; அவர் நிறுத்தியவர்கள் வெற்றி பெற்றார்களே தவிர, இவர் தலைவராக வர முடியவில்லை. அப்பொழுது சென்னைக்கு வந்தவர்தான் திருவாரூரை விட்டு, தியாகராச முதலியார்.

தங்கமணி: அன்றைக்கு அப்படியெல்லாம் எதிர்த்து விட்டு இன்றைக்கு அவருக்கு ஆதரவாக இருக்கிறீர்களே?

முதல்வர்: இல்லை! நாங்கள் என்ன மன்றாடியாருக்கா உங்களைப்போல துணை போனோம்? விவசாயப் போராட்டத்தில் நீங்கள் போனதைப் போல (கைதட்டல்)

தங்கமணி: தியாகராச முதலியார் போராட்டம் நடத்தி ஜெயிலுக்குப் போனால் அவரோடு போகவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

முதல்வர்: அந்தத் தொடர்புகூட எங்களுக்கு இல்லை!. தொழில் அதிபர்கள் எந்தவொரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சியையே எடுத்துக் கொள்ளுங்கள்; கேரளாவில் எல்லா தொழிலையும் அழித்து விட்டார்களா? தொழில் அதிபர்கள் இனிமேல் இருக்கக்கூடாது என்று செய்து விட்டார்களா? என்றால் இல்லை. இந்தியாவில் சோஷலிசம் பேசுகின்ற நம் நாட்டில் இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களும் இருக்கின்றன. அவர்களின் துணையோடு ஆட்சி நடத்தக்கூடிய கேரளா போன்ற மாநிலங்களும் இருக்கின்றன. அங்கேகூட பிர்லாவிற்கு தொழிற்சாலை வைக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தொழில் அதிபர்கள் ஒரு கட்சி ஆட்சிக்கு வரும் நேரத்தில் அவர்களுடைய தொழில் வளர, ஏற்படுகின்ற சாதக பாதகங்களை எடுத்துச் சொல்ல ஒரு அரசோடு தொடர்பு கொள்வது தவறல்ல. அதனால் அவர்களுக்கு அரசு அடிமையாகிவிடுகிறது.

என்ருல் அது தவறு! அப்படி நாங்கள் தவறு செய்திருந்தால், அதைச் சொன்ஞல் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேன். தியாகராச முதலியார் மீதே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொன்னப்ப நாடார், தியாகராச முதலியார் பூர்ஷ்வா, பெரிய பணக்காரர் என்பதை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இந்த அரசைக் குற்றஞ்சாட்டிஞர். யார் அந்தத் தியாகராச முதலியார்? ஆவடி சோஷலிசம் உருவாயிற்றே, அந்த ஆவடி காங்கிரஸ் மாநாட்டை முன் நின்று நடத்தியவரே தியாகராச முதலியார் தான்;

பொன்னப்ப நாடார்: அதே தியாகராச முதலியார் தங்களுக்கு பொன்ஞடை போர்த்தவில்லையா?

முதல்வர்: நான் சொல்வது, இந்தத் தியாகராச முதலியாருக்கு எந்தச் சலுகையாவது நாங்கள் அளித்தோமா? அவர் பொன்ஞடை போர்த்திஞர் என்பதற்காக ஐந்தாயிரம் ஏக்கரா அவருடைய நிலத்தை நீங்கள் விதி விலக்கோடு அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று கரும்புக்கு உச்ச வரம்பு கிடையாது என்று நாங்கள் சொல்லியிருந்தால், நாங்கள் அவருக்கு ஆட்பட்டு விட்டோம். அந்த பொன்ஞடைக்கு மயங்கிவிட்டோம் என்று பொருளாகும். பழகுவது வேறு; நண்பர்களாக இருப்பது வேறு; ஆஞல் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற நேரத்தில் அதற்கு தலைவணங்க வேண்டும்; வடபாதிமங்கலமாக இருந்தாலும், கபிஸ்தலமாக இருந்தாலும், பூண்டி வாண்டையாராக இருந்தாலும், மன்ருடியாராக இருந்தாலும், தி. மு. கழகம் சாமான்யர்களுக்குத் துணை போகுமே தவிர, சீமான்களுக்கு நிச்சயமாகத் துணைப் போகாது.

சீனிவாசன் ரொம்ப வருத்தப்பட்டார். மாதவன் சுப்பராசா வீட்டிற்கு எல்லாம் போகிருர் என்று; என்ன செய்வது? எதற்காகப் போஞர்? சீனிவாசஞல்தான் முதன்முதல் போஞர். சீனிவாசனுக்குப் பெண் கேட்பதற்காகப் போஞர். சீனிவாசன்தான், சுப்பராசா வீட்டின் பெண் இருக்கிறது. பேசச் சொல்லுங்கள்; மாதவனை அனுப்புங்கள் என்ருர்.

சீனிவாசன்: எனக்காக மாதவன் அங்குப் போனதும் இல்லை; யாரும் அதற்காகப் போகவும் இல்லை. தொலைபேசியில்தான் பேசிஞர்கள். அது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல. அதஞல் எந்தவிதமான பாதகமும், சாதகமும் கிடையாது.

முதல்வர்: அவர், மாதவன் போஞர் என்பதை மட்டும்தான் மறுக்கிருர்; நான் பேசியதை மறுக்கவில்லை; ஆக பெண் கேட்டது உண்மை. அவர்கள் பெண் தர மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். ஏனென்ருல் சீனிவாசன் ரொம்ப சோஷலிசம் பேசுகிறவர்; எங்கள் பெண்ணைக் கொடுத்தால் ஒழுங்காக வாழ முடியாது; அப்படிப்பட்ட சமதர்மவாதிக்கு எங்கள் பெண்ணைக் கொடுக்க முடியாது என்று உங்களைப் பாராட்டித்தான் அந்த சீமான் சொன்ஞர்.

சீனிவாசன்: ஆளுங்கட்சி நண்பர்கள் கை தட்டி மகிழ்ச்சி தெரிவிக்கிருர்கள். என்னைப் பற்றி வந்ததால் நான் சொல்ல விரும்புகிறேன்.

நானே ரொம்ப கூச்சப்படுகிறேன். முதலமைச்சர் என்னைப் பல தடவை திருமணம் செய்து கொள், ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று வற்புறுத்திஞர். நான் தான் 'அங்கே பெண்ணிருக்கிறது. பேசச் சொல்லுங்களேன்' என்று கூறினேன். பெண் கொடுக்கவில்லை என்பதற்காக வருத்தப்படவில்லை.

முதல்வர்: நான் சொன்னதைத் தான் திருப்பி சீனிவாசன் சொல்கிருர்; நன்றி; இந்த அரசைப் பொறுத்தவரையில் ஏழைகளுக்காக எதுவும் செய்யவில்லை என்று கூற முடியாது. குடிசை மாற்று வாரியத் திட்டங்கள் நடைபெறுவதைப் பார்த்துவிட்டு, குடிநீர் வாரியத்தால் பயன்பெறுகிறவர்கள் கிராம மக்கள் தான் என்பதைத் தெரிந்த பிறகும், அரிசன வீட்டு வசதி வாரியத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் பயனடைகிருர்கள் என்பதை அறிந்த பிறகும், கண்ணொளித் திட்டம் பயன்தருவது கனதனவான்களுக்கல்ல—கதியற்ற ஏழையெளியவர்களுக்குத்தான் என்பது தெரிந்த பிறகும், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தால் பயன் பெறுகிறவர்கள் ஏழைகள்தான் என்பதைத் தெரிந்த பிறகும், ஊனமுற்ருேர் நல்வாழ்வுத் திட்டத்தால்-கைரிக்ஷா ஒழிப்புத் திட்டத்தால்-அரசாங்க ஊழியர்களின் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தால்-பயன் பெறுகிறவர்கள் ஏழைகள்தான் என்பது தெரிந்த பிறகும், இது சீமான்கள் அரசு என்பது சரிதாஞ? கோவையில் நடைபெற்ற ஆலைத் தொழிலாளர்களுடைய போராட்டத்தில் அவர்களுக்காக வேறு எந்த மாநிலத்தின் முதலமைச்சரும் முன்வராத அளவிற்கு ஆறு இலட்சம் ரூபான் முதலமைச்சர் நிதியிலிருந்து தந்து உதவியது இந்த அரசுதான் என்பதை நாமும் உணர்வோம்; நாடும் நன்கு உணரும்.

சிம்சன் தொழிலாளர்கள் போராட்டம் எந்த அளவிற்கு வளர்ந்தது; யாரும் அதில் பழி வாங்கப்படக் கூடாது என்பதற்காக எழுந்த கோரிக்கையின்அடிப்படையில் கிட்டத்தட்ட 120-க்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டு, சிம்சன் நிர்வாகத்தில் இருப்பவர்களுடைய மனக்கசப்பை இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருப்பதும் இந்த அரசுதான்;

அண்மையில்கூட, நானும் தொழிலாளர் நல அமைச்சரும் கோவையில் காலையிலிருந்து மாலை வரை அங்குள்ள ஆலை அதிபர்கள், நிர்வாகிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகிய



வர்களுடன் பேசியெடுத்த முடிவு, மத்திய சர்க்கார் சட்டத்தால் ஏற்பட்டிருக்கும் பாதகங்களையும் ஊடுருவி எடுத்த முடிவு, அங்கிருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்காக எடுக்கப்பட்ட முடிவே தவிர, சீமான்களுக்காகவோ, பணக்காரர்களுக்காகவோ எடுக்கப்பட்ட முடிவு அல்ல;

தங்கமணி: கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்காக ஆறு இலட்சம் ரூபாய் கொடுத்ததை அனேகமாக அனைவரும் பாராட்டினார்கள். அது இந்த முதலமைச்சர் வருவதற்கு முன்னால் செய்ததாக எனக்கு ஞாபகம்!

முதல்வர்: தங்கமணி அவர்கள் எனக்கு ஒரு பெருமை சேர ஒத்துக் கொள்ளமாட்டார்கள். அவ்வளவு பெரிய பரந்த உள்ளம்! அண்ணா முதலமைச்சராக இருந்தபோது ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தார். நான் முதலமைச்சராக வந்த பிறகு ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்தேன். இது தங்கமணி அவர்களுடைய காதில் விழவேண்டுமென்று உரக்கச் சொல்கிறேன்.

அண்ணா வழியில் நடக்கவில்லை என்று சொல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் பெரிய தலைவர்கூட 'எங்களுக்கு என்ன கோபம் கருணாநிதியின் மீது, நெடுஞ்செழியன் மீதெல்லாம்? அவர்கள் அண்ணா வழியில் நடக்கவில்லை'' என்று பேசியதாகப் பத்திரிகைகளில் படித்தேன். அது உண்மைதான். 1967-இல் அண்ணா மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்களைச் சேர்த்துக் கொண்டார். நாங்கள் 1971-இல் அண்ணா வழியில் நடக்காமல், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டோம். அந்தத் தவறுக்கான தண்டனையை, '' அண்ணா! இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எங்களை மன்னித்து விடு அண்ணா! '' என்று அண்ணா அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. (கைதட்டல்)

தங்கமணி: அண்ணா வழியில் நீங்கள் நடக்கவில்லை என்று நாங்கள் சொன்னது கிடையாது.

முதல்வர்: அண்ணா வழியில் நாங்கள் நடக்கவில்லை என்று அவர் சொன்னதில்லை என்று கூறுகிறார். ஆகவே நாங்கள் அண்ணா வழியில் நடக்கிறோம் என்பதை அவர் ஒத்துக் கொண்டிருக்கிறார். அதற்காக நன்றி.

உரம் பற்றி இங்கு ஒரு விவாதம் நடைபெற்றது. நண்பர் குருசாமி பேசும்போது கூட்டுறவு சங்கங்களுக்கு உரம் வரவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார். அப்போது வேளாண்மைத்துறை அமைச்சர் எந்தெந்த சங்கங்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அந்தச் சங்கங்களுக்கு உடனடியாக உரம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார். அந்த விவரங்களை நான் பார்த்த பிறகு, குருசாமி குறிப்பிட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு, சிப்பலாபுரம், ஆண்டிப்பட்டி, ரங்கசமுத்திரம், என்றெல்லாம் இருக்கிற 14 கூட்டுறவு சங்கங்களில் செப்டம்பர், அக்டோபர் மாதம் வரை உரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்ற கணக்கு இருக்கிறது. எந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கும் உரம் வழங்கப்படவில்லை என்ற தகவல் இல்லை. சீனிவாசன் எவ்வளவு உரம் ஒதுக்கப்படுகிறது என்று கேட்டார். அமைச்சர், கூட்டுறவு சங்கங்களுக்கு உரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதிலே தாராளமாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். உண்மையில் நிலைமை என்னவென்றால், நமக்கென்று 1974-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள உரம் மெட்ரிக் டன்களில் காரிப், ராபி ஆகிய இரண்டு பருவத்திற்கும் 2,92,029 டன்; ஆனால் நமக்கு மத்திய சர்க்காரிலிருந்து அளிக்கப்பட்டது 1,30,500 டன்கள்தான்;

ஒரு ஏக்கருக்கு எவ்வளவு தேவை என்று கேட்டார். கிட்டத்தட்ட 75 கிலோவிலிருந்து 100 கிலோ வரை தேவை. இன்றைக்கு அரசு தொகுப்பு, தனியார் தொகுப்பு ஆகிய இரண்டிலிருந்தும் உரத்தை நாம் வழங்குகிறோம்; இது ஒழுங்காக விநியோகிக்கப்பட கார்டு முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். விவசாயிகளுக்குக் கொடுப்பது போதுமா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கு ஏற்ற வகையில் நிலைமைக்கேற்ப 25 கிலோ, 50 கிலோ என்று பிரித்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்கு உரம் கிடைக்கிறது என்று நாம் திட்டவட்டமாக கூற இயலாது.

சீனிவாசன்: விருதுநகர், சாத்தூர் பகுதிகளில் வறட்சி இருப்பதால் உரம் கொடுக்கத் தேவையில்லை என்று விவசாய இலாகாவில் உத்தரவு போட்டு இருக்கிறார்கள். கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்வதற்காவது உரம் கொடுக்கலாம் அல்லவா?

முதல்வர்: விளையாது என்று தெரிந்தால் அங்கே உரத்தை வீணாக்க கூடாது என்ற அடிப்படையில் சொல்லியிருப்பார்கள். உறுப்பினர் சொல்வதைப் போல் அங்கே உற்பத்தி செய்யச் சாத்தியக் கூறுகள் இருந்தால் அதை ஊக்குவிக்கும் வகையில் உரத்தை வழங்க அரசு ஏற்பாடு செய்யும்.

மேலும் நமக்கு 35,000 டன்தான் கிடைக்கும். இப்போது இருக்கிற ஸ்டாக் 25,000 டன் அளவுக்குத்தான் இருக்கிறது. விரைவில் அது சம்பந்தமாக டெல்லியோடு தொடர்பு கொண்டு வறட்சியான இந்த நேரத்தில் ஒதுக்க டெல்லி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்க அரசு தயாராக இருக்கிறது.

உணவுப் பிரச்சினையில் பல கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, தோழமைக்கட்சி ஆகிய கட்சிகளின் சார்பில் எடுத்துச் சொன்ன கருத்துக்

கள்—நான் 12-ஆம் தேதி அன்று இங்கே வைத்த அறிக்கையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் இதை எல்லாம் வைத்துக்கொண்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் இவைகளை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, உணவு நிலை குறித்து ஒரு கொள்கை அறிவிப்பை என்னுடைய இந்தப் பேச்சில் வெளியிட நான் விரும்புகிறேன்.

நடப்புக் குறுவையில், தஞ்சை மாவட்டத்தில் வெளிச் சந்தையில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்பரேஷன் மூலமாக வாங்கிய நெல்லுக்கும், மற்ற மாவட்டங்களில் லெவி முறையில் வாங்கிய நெல்லுக்கும் கீழ்க்கண்ட விலையை நாம் நிர்ணயித்திருந்தோம்.

குவிண்டால் ஒன்றுக்கு ஏற்கனவே இருந்த விலை:—

மோட்டா ரகம்	ரூ. 85/-
நடுத்தரம்	ரூ. 90/-
சன்ன ரகம்	ரூ. 95/-
மிகச்சன்ன ரகம்	ரூ. 98/-

ஆனால் மத்திய அரசு கீழ்க்கண்ட கொள்முதல் விலையை நிர்ணயித்தது.

மோட்டா ரகம்	ரூ. 74/-
நடுத்தரம்	ரூ. 78/-
சன்ன ரகம்	ரூ. 83/-
மிகச் சன்ன ரகம்	ரூ. 86/-

நமது அரசு நிர்ணயித்திருந்த கொள்முதல் விலை 1974-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இறுதிவரைதான் கிடைக்கும் என்றும், அதற்குப் பிறகு மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைதான் தரப்படும் என்று அறிவித்திருந்தேன். அதைத் தொடர்ந்து நான் மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்களிடம் நேரிலேயாகவும், கடிதம் மூலமாகவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாநில அரசு நிர்ணயித்த விலை டிசம்பர் திங்கள் 15-ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டது.

தஞ்சையில் வெளிச்சந்தையில் வாங்கிய நெல்லுக்கும், மற்ற மாவட்டங்களில் லெவி முறையில் வாங்கிய நெல்லுக்கும் மாநில அரசு நிர்ணயித்த விலை டிசம்பர் 15-ஆம் தேதி வரை கொடுக்கப்பட்டு வந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஓரளவு நெல்லை சிவில் சப்ளைஸ் கார்பரேஷனுக்கு விற்ற தஞ்சை விவசாயிகளையும், லெவி முறைக்குக் கொடுத்து உதவிய மற்ற மாவட்ட விவசாயிகளையும் நான் நன்றியுணர்வோடு பாராட்டுகின்றேன்.

இதுவரையில் குறுவையில் நமது மாநிலத்தில் 1,43,000 டன்கள் கொள்முதல் ஆகியுள்ளன. தஞ்சையில் மாத்திரம் சிவில் சப்ளைஸ் கார்பரேஷன் மூலம் ஒரு இலட்சத்து, ஏழாயிரத்து, ஐநூறு டன்கள்; தஞ்சையில் மத்திய உணவுக் கழகத்தின் மூலம் (புட் கார்பரேஷன்) எட்டாயிரம் டன்கள்; மற்ற மாவட்டங்களில் இருபத்தி ஏழாயிரத்து ஐநூறு டன்கள் சிவில் சப்ளைஸ் கார்பரேஷன் மூலமாகவும் கொள்முதல் ஆகியுள்ளன.

16-12-74 முதல் மாநிலம் முழுவதற்கும் மத்திய அரசு நிர்ணயித்த லெவி விலையை நமது அரசு அமல்படுத்தும். இந்த விலையோடு போக்குவரத்துப் போன்ற இடைநிலை செலவுகளுக்கு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சிறு தொகை சேர்த்துக் கொடுக்கப்படும்.

இந்த மாதம் 12-ஆம் தேதி நான் சட்டசபையில் உணவு தானியங்கள் உபரியாக உள்ள பகுதிகளில் மொத்த வாணிபம் செய்யத் தனிப்பட்ட வியாபாரிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், இந்தப் பகுதிகளில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்பரேஷன் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்பட்ட லெவியை வாங்கிக்கொண்டு, உபரியாக இருக்கும் நெல்லைக் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாங்கப்படும் என்றும், மாநிலம் முழுமைக்கும் நெல், அரிசி ஆகியவற்றுக்கு அதிகப்பட்ச விலை நிர்ணயிக்கப்படும் என்றும் கூறியிருந்தேன்.

உற்பத்தியில் ஒரு பகுதியை மத்திய அரசு நிர்ணயித்த விலையில் லெவி மூலம் கொடுத்துவிடுவதால், எங்கெங்கே லெவி அமலில் உள்ளதோ அங்கெல்லாம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வெளிச்சந்தையில் நெல் வாங்கப்படும். இந்த அதிகப்பட்ச விலைகள் பின்வருமாறு:—

இனிமேல் நெல் குவிண்டால் ஒன்றுக்கு.

மோட்டா ரகம்	ரூ. 95/-
நடுத்தரம்	ரூ. 100/-
சன்ன ரகம்	ரூ. 105/-
மிகச்சன்ன ரகம்	ரூ. 110/-

என நிர்ணயிக்கப்படுகிறது.

கூட்டுறவு மூலமாக உபரிப் பகுதிகளில் வாங்கப்பட்ட நெல்லிலே இருந்து கிடைக்கும் அரிசிக்கு அதிகப்பட்ச விலை பின்வருமாறு:—

அரிசி கிலோ ஒன்றுக்கு

மோட்டா ரகம்	ரூ. 1.90
நடுத்தரம்	ரூ. 2.00
சன்ன ரகம்	ரூ. 2.10
மிகச்சன்ன ரகம்	ரூ. 2.20

என நிர்ணயிக்கப்படுகிறது.

தனியார் வாணிபம் செய்ய அனுமதிக்கப்படும் இடங்களில் மேற்கூறிய அதிகப்பட்ச விலைகள்தான் பொருந்தும். இந்த விலைக்கு மேல் வாங்குவதும் விற்பதும் சட்டப்படி குற்ற



மாகும். இந்த ஆணைகளை மீறுவோர் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

'லெவி' முறையில் கொள்முதல் செய்யப் பட்ட நெல்லில் இருந்து கிடைக்கின்ற அரிசிக் குக் கீழ்க்கண்ட உயர்ந்த பட்ச விலைகள் நிர்ண யிக்கப்படுகிறது.

அரிசி கிலோ ஒன்றுக்கு

மோட்டா ரகம்	ரூ. 1.60
நடுத்தரம்	ரூ. 1.70
உயர்ந்த ரகம்	ரூ. 1.80
சன்ன ரகம்	ரூ. 1.90

'லெவி' மூலம் கொள்முதல் செய்யப் பட்டு அதன்மூலம் கிடைக்கின்ற அரிசியைக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்குப் பற்றாக் குறைப் பகுதிகளில் வழங்கப்படும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் இருப்பை அறிவிப்பதற்குள்ள வரம்பு—40 குவிண்டால் நெல்லில் இருந்து 20 குவிண்டால் என்றும், 25 குவிண்டால் அரிசியிலிருந்து 13 குவிண் டால் என்றும் குறைத்து நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நெல், அரிசி (இருப்புகளை அறிவித்தல்) ஆணையின்படி உற்பத்தியாளர் கள், மற்றும் வியாபாரிகள் தேவைக்கு மேல் பதுக்கி வைத்திருக்கும் இருப்பை அரசு கட் டாயமாக எடுத்துக் கொள்ளும்.

அவ்விதம் எடுக்கும்போது அரசு 'லெவிக்கு' நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை தான் அளிக்கும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் இருப்புகளைப் பதுக்குவதாகத் தெரிந்தால் அரசு இந்த விதி யின்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

'லெவி' முறையிலும் கூட்டுறவுச் சங்கங் கள் மூலமாகவும் கிடைக்கின்ற இருப்பை பற்றாக்குறைப் பகுதிகளில் உள்ள பொது மக் களுக்குச் சமமாகப் பங்கீடு செய்வதை உறுதிப் படுத்துவதற்காகத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வரும் ஆண்டில் பெரும் பற்றாக்குறை எதிர்பார்ப்பதால் குறைந்த வருமானம் உள்ள வர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள் கிடைக்கச் செய்வதற்காகவும், பற்றாக்குறையைப் பகிர்ந்து கொள்ளும் வகை



லும் இந்த முறை கையாளப்படுகிறது.

இந்த நெருக்கடியான நேரத்தில் இந்தக் கொள்கைகளை அமல் செய்வதற்கு எல்லோ ருடைய ஆதரவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அறிவிப்புகளைத் தமிழ்நாட்டில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்கள் எல்லாம் இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளை அறிந்தவர்கள்தான். அவர்கள் நம்மோடு ஒத்துழைக்க வேண்டும்.

வியாபாரிகளுடைய கொள்ளை லாப வேட்டைக்குப் பலியாகிவிடாமல் அரசோடு ஒத்துழைக்க வேண்டும். எண்ணிக்கையில் நிலக்கிழார்கள் குறைவு; வாங்கிப் புசிக்கின்ற பொதுமக்கள் அதிகம் என்ற அந்த நிலையை உணர்ந்து—ஓரளவு தியாகம் செய்கின்ற உள் ளத்தோடு இந்தப் பணியில் இந்த அரசுக்கு அவர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். அவர்களுக்கு என்று கூட்டுறவு முறையில் வாங்குகிற நெல்லுக்கு நாம் நிர்ணயித்திருக் கிற விலை குறைவானதல்ல என்பதையும், ஓரளவு அவர்களுக்கு திருப்தி அளிக்கக் கூடிய விலைதான் என்பதையும், உறுப்பினர்கள் அறி வார்கள்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்ட கருத்துக்களை எல்லாம் மனத்தில் கொண்டுதான், விலை ரொம்ப அதிகமாக ஆகி விட்டாலும், வாங்கிப் புசிக்கின்ற மக்களுக்கு கஷ்டம் ஏற்படும்; குறைந்துவிட்டாலும் உற் பத்தியாளர்களுக்குக் கஷ்டம் ஏற்படும்; அவர் களுடையச் சாகுபடிச் செலவுகளுக்குக் கட்டு படி ஆகாமல் போய்விடும். இதையெல்லாம் நடுநிலையில் யோசித்துத்தான் இந்த விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இதிலே கள்ளச்சந்தை, கறுப்புச்சந்தை என்கிற வகையில் விற்க யார் வந்தாலும் தயவுதாட்சண்யமின்றி அரசு சட்டப்படி நட வடிக்கைகளை எடுக்கும். அதற்கு எந்தவித மான நிலையும் உருவாகாத அளவிற்கு விவ சாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசோடு ஒத்துழைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக நான், மிக முக்கியப் பிரச்சினையான வறட்சிப் பகுதிகளில் பாதிக் கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கான சில சலு கைகளை அறிவிக்க விரும்புகிறேன். ஏனென் றால் விவசாயிகள் நம்மோடு ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கின்ற அதேநேரத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நாம் பக்கத்துணையாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் சில சலுகைகளை நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

வறட்சிப் பகுதிகளில் அரசு கடன்களை வசூலிப்பதை உடனடியாகத் தள்ளி வைக்கும் (கைதட்டல்)

வறட்சிப் பகுதிகளில் இந்த ஆண்டு நில வரி வசூலிக்கப்பட மாட்டாது: (கைதட் டல்).

கூட்டுறவு மூலமாகக் கடன்கள் பெற்றவர்களுக்கும் கடன்கள் வசூல் செய்யப் படுவது தள்ளி வைக்கப்படும். (கைதட்டல்)

திட்டத்தினையும் அவர்கள் பொருளாதார ரீதியில் வருவாயினைப் பெருக்கிக் கடனை திருப்பிக் கட்டும் திட்டம் முதலில் தயாரிக்கப்பட்டது. ஆனால் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தைப் பற்றி முடிவெடுக்கும்பொழுது அரிசன மக்கள் கடனைத் திருப்பிக் கட்டும் வசதியுடைவர்கள் அல்லர் என்றும் அப்படி கடன் மூலம் கட்டப்படும் வீடுகள் சமூக நோக்கினை அடைய முடியாது என்று அறிவித்து அரிசன குடும்பங்களுக்கு இனமாக வீடுகள் கட்டிக் கொடுத்து அதன் மூலம் அவர்களுக்குச் சொந்த வீடு இருக்கிறது என்ற உணர்விலே அவர்கள் சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் முன்னேறும் வகையில் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என கூறினர்கள். எனவே அரிசனங்களின் எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய மிகவும் முக்கியமான முடிவின் கீழ் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டு 1-3-1974-லிருந்து பணிகள் துவக்கப்பட்டன. இக்கழகத்தில் 5 அலுவலர்களும், 5 அலுவலர்கள் அல்லாதவர்களும் இயக்குநர்களாகவும் உள்ளனர். அவர்கள் விவரம் வருமாறு:—

அலுவலர்கள், இயக்குநர்கள்.

1. திரு. பு.க. நம்பியார் ஐ.ஏ.எஸ். தலைவர்.
2. திரு. ப.க. கந்தசாமி பி.இ./ எம்.எஸ்சி. மேலாண்மை இயக்குநர்.
3. திரு. டி. வி. வாசுதேவன் ஐ.ஏ.எஸ். அரசு வளர்ச்சி இயக்குநர்.
4. திரு. ஏ. பால்ராஜ் ஐ.ஏ.எஸ். அரிசன இயக்குநர்.
5. திரு. டி.கே. ஓசா ஐ.ஏ.எஸ். சமுதாய நலத்துறைச் செயலர்.
6. திரு. கே. ஆர். ஜானடி, நிதித்துறை துணைச் செயலர்.

அலுவரல்லாத இயக்குநர்கள்.

7. திரு. சி. டி. தண்டபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்.
8. திரு. ஏ.எல். சுப்பிரமணியம் பி.எஸ்சி., பி.எல்.
9. திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன்.
10. புலவர் ஆறுமுகம்.
11. திரு. எஸ். நாராயணசாமி.

தமிழ்நாடு அரசு ஒரு கோடி ரூபாய் பங்கு மூலதனத் தொகை அளித்ததே இக்கழகத்தின் சொத்து ஆகும்.

1971 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 412 இலட்சம் ஆகும். இதில் 76.46 இலட்சம் அரிசனங்கள் ஆகும். மொத்த மக்கள் தொகையில் 0.8 மலைசாதியினர்கள் ஆகும். ஆனால் அகில இந்திய சராசரியான 14 சதவிகிதம் விட 17.83 சதவிகிதம் ஆகும். தமிழ்நாட்டில் தென்னார்க்காடு, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு முதலிய மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோர் இம்மாநிலத்தின் மக்கள் தொகையில் 46 சதவிகிதம் காணப்படுகின்றனர். மலை சாதியினரில் மலையாளிகளும், இருளர்களும் அதிகமுள்ளனர். 1961 கணக்கெடுப்பின் சராசரியை 1971 கணக்கெடுப்பின் சராசரியாக வைத்துக் கொண்டால் அநேகமாக 14.5 லட்சம் அரிசன வீடுகள் தமிழ்நாட்டில் உள்ளன. எப்படிப் பார்த்தாலும் அரிசன மக்களின் வீட்டு வசதி பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் குறைந்தது 10 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. இந்த நிலையை உணர்ந்து டாக்டர் கலைஞர் கருணநிதி அவர்கள் 1975-76-க்குள் ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்ற அவர்கள் எண்ணத்தை அறிவித்தார்கள். இது தமிழ்நாட்டில் மக்களின் முன்னேற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்தை செயல்படுத்த ஒரு வீட்டின் வரைபடம் தயார் செய்யப்பட்டது. ஒரு வீடு கட்டும் செலவுத் தொகை 3,500 ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் 240 சதுர அடி கட்டடத் தரைப் பரப்பளவு இருக்கும். அதில் புகை அடையா சமையலறையும், சுகாதார வசதிகளும், குளியலறையும் உண்டு. ஐக்கியநாடு சபையின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து நாட்டுக் கட்டடத் தரை பரப்பளவு திட்டமாக 240 சதுர அடியினை பின்பற்றி இந்த வீட்டின் கட்டடத் தரை பரப்பளவு 240 சதுர அடியில் அமைந்துள்ளது. இத்திட்டத்தை அமல்படுத்த 278 கிராமங்கள் தேர்தெடுக்கப்பட்டன. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அங்குள்ள தலைவர்களைக் கொண்டு இக்கிராமங்களை தேர்ந்தெடுத்துள்ளார்கள். ஒரு கிராமத்தில் இக் கழகத்தின் பணிகளைத் துவக்கினல் அக்கிராமத்தில் எந்த ஒரு அரி

சனும் விடுபடாமல் இருக்க வேண்டுமென்பதைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எடுத்துக்காட்டான அரிசன கிராமங்களை உண்டு பண்ணுவதில் வீடுகள் கட்டுவது மட்டுமின்றி, ஒரு சமுதாயக் கூடம், ஒரு குழந்தைகள் காப்பகம், ஒரு நூலகம் மற்றும் கடைகள் முதலியன கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மேல் ஒவ்வொரு கிராமமும் குடிதண்ணீர் வழங்கும் திட்டம், இணைப்புச் சாலை, தெரு, மின்விளக்கு வசதி போன்ற வசதிகளையும் மாநில அரசு செய்துகொடுக்கும். சுருங்கக் கூறின் இக்கழகத்தால் வீடுகள் கட்டப்பட்டு வரும் 278 கிராமங்களும் மாதிரி கிராமங்களாக அமையும். அப்படிப் பட்ட மாதிரி கிராமங்களில் ஒன்ருக அமையும் தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்திலுள்ள தென்னமநாட்டில் முதல்வர் கலைஞர் அவர்கள் அரிசன மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ள இல்லங்களை 11-12-74 அன்று திறந்துவைத்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:

பல ஆண்டுக் காலமாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படாமல்—இன்னும் சொல்லப் போனல், அவர்களது தேவைகளைத் திரும்பிப் பார்க்கக்கூட முடியாத நிலை மாறி, இன்றைக்கு அந்த மக்களின் தேவைகளை அவர்கள் சொன்னலும், சொல்லாவிட்டாலும் வலிய முன் வந்து ஓர் அரசு ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு ஏற்ற முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்று வீடுகள் அமைக்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல், சமுதாய, பொருளாதார உரிமைகள் கிடைக்க வேண்டும் என்ற முறையில் இன்று செயல்பட்டு வருகிரேம்.

இங்கு பேசியவர்கள் எடுத்துச் சொன்னது போல இந்தச் சமுதாயம் தொன்று தொட்டு அடிமைகளாக — மற்றவர்களுக்கு ஊழியம் புரிபவர்களாக உரிமைகளைப் பெற முடியாதவர்களாக — அப்படிப் பெற எண்ணினாலும் அது சட்டப்படியல்ல— சாஸ்திரப்படி குற்றம்— அதை ஆண்டவன் பொறுத்துக் கொள்ள மாட்டான் என்று எழுதப்பட்டு, அல்லது எடுத்துச்சொல்லப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்.

ஆண்டாண்டுக் காலமாக, பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் ''இன்னும் இந்தப் பாவத்துக்கு விமோசனமே கிடையாதா?'' என்ற ஏக்கப் பெருமூச்சையே தங்களின் சொத்து, சுகமாக ஆக்கிக் கொண்டு, வாழ்ந்தும்—வீழ்ந்தும் கொண்டுமிருந்த மக்களைக் கைதூக்கி விடும் ஆட்சியை எங்களை யெல்லாம் ஆளாக்கி விட்ட அண்ணா அவர்கள் உருவாக்கினார்கள்.

அவர் வகுத்த நெறி நின்று பணியாற்றி அவர் விட்ட இடத்திலிருந்து பயணம் தொடங்கியிருக்கிறோம். அந்தப் பணியில் ஒரு கட்டம்தான் இன்று திறக்கப்படுகிற இந்தக் குடியிருப்புகளாகும்.

நண்பர் எல். கணேசன் ஒன்றைச் சொன்னார். ''நந்தனுக்கு விழாவைக் காணவே அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்கு நந்தனுடைய பேரனுக்குப் பேரன் ஆலயம் செல்லவும் ஆண்டவனைத் தொழவும் ஆலய அறங்காவலர் குழுவில் இடம் பெறவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது'' என்றார்.

நந்தன் தில்லைக்குப் போகக் கூடாது என்று அனுமதிமறுத்த வேதியர், பின்னர் அனுமதி கொடுத்தார். நந்தன் தில்லைக்கு வந்த பிறகு ஆலயத்துக்குள் அனுமதி கிடைக்கவில்லை. இந்த நிலையில் ஒரு நாள் தில்லை நடராஜன் தீட்சிதரின் கனவில் தோன்றி ''நந்தன் நேரடியாக வந்தால் நான் மோட்சம் தர முடியாது. அவன் உடம்பில் அழுக்கைப் போக்கி—தீண்டத் தகாத அழுக்கைப் போக்கிக் கொள்ள அவன் தீக்குளித்த பிறகு அழைத்து வாருங்கள்'' என்றார்.

நந்தனும் கனவு காணலாம். ஆனால் ஆண்டவன் தீட்சிதர் கனவில் தான் தோன்றினார். நந்தனின் கனவிலும் வர மறுத்தார். அவன் கனவில் வருவது பாவம்!

தீண்டத் தகாதவன் கனவில் வருவது பாவம் என்று ஆண்டவனே நினைத்தான் என்றால் நாம் குற்றம் சாட்டுவது ஆண்டவனையா? அல்லது ஆண்டவன் பெயரால் மோசடிசெய்து வந்த மனிதர்களையா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நந்தன் கதை நடந்ததா, நடக்காததா என்பது நமக்குத் தெரியாது. கதை எழுதப்பட்டிருக்கிறது. நந்தனைப் போலச் சிலர் துணிந்தால் அப்படித் துணிபவர்கள் அக்கினியில் பிரவேசிக்க வேண்டி வரும் என்று பயமுறுத்தவே இந்தக் கதை எழுதப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களும் ஆண்டவனால் படைக்கப்பட்டவர்களே! அப்படிப்பட்டவர்கள் ஆலயம் செல்ல, ஆண்டவனைத் தொழ, தொட்டு வணங்க அனுமதி மறுக்கப்பட்டது.

இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற பல உத்தமர்கள் ஆற்றிய தொண்டின் அடிப்படையில் அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் வழி நின்று உழைக்கும் நம்மைப் போன்றவர்கள் இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாடுபடுவதால்தான் இவ்வளவு செய்ய முடிகிறது.

'இவ்வளவு செய்கிறோமே நன்றி காட்டுகிறார்களா?' என்று இங்கே நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் காரியங்களைச் செய்வதால் வேறு சிலரின் எதிர்ப்பு வரும் என்றும் குறிப்பிட்டார்கள்.

அந்த எதிர்ப்புகளைக் கண்டு கலங்க மாட்டேன்; நான் என்றும் கலங்கியதுமில்லை. எனக்கிருக்கிற சங்கடமெல்லாம் புள்ளி மானை வேட்டையாடப் புலி வரும்போது, அந்தப் புலியைத் துரத்தி விட்டுப் புன்னகை புரியும் போது—எந்த மானைக் காப்பாற்றினோமோ—அந்த மானே நம்மைக் கொம்பால் குத்த வருகிறதே என்கிற அந்தக் கலக்கம்தான் நமக்கேற்படுகிறது.

மானைக் காப்பாற்றுகிறோம் —புலியிடமிருந்து. புலி கோபிப்பதில் நியாயமிருக்கிறது. ஏன் என்றால், 'எனக்கு வந்த இரையைக் கெடுத்து விட்டானே பாவி!' என்று புலி கோபிப்பது நியாயம்; மானும் கோபித்துக் கொள்கிறதே! ''நான் புலிக்கு இரையாக இருந்தேன். நீ ஏன் வந்து காப்பாற்றினாய்'' என்று கோபித்துக் கொள்கிறதோ? வேறு எதற்காகக் கோபித்துக் கொள்கிறது என்றுதான் புரியவில்லை.

நான் புலியின் எதிர்ப்பைப் பற்றி என்றைக்கும் கவலைப்படவில்லை. எந்த மானுக்காகப் பாடுபடுகிறோமோ அந்த மானும் சமயத்தில் எதிர்க்கிறதே என்றுதான் கவலைப்படுகிறேன். அந்தக் கவலைகளின் காரணமாகச் செய்ய வேண்டிய கடமையில் கிஞ்சிற்றும் குறைக்கப் போவதில்லை.

கட்டப்பட்டிருக்கின்ற இந்த வீடுகளின் சுவரிலே 'கருணாநிதி ஒழிக' என்று எழுதக் கூடும். அப்படி எழுதினால் நான் கவலைப்படமாட்டேன். நம்முடைய பெயரை நினைத்துக் கொண்டிருக்கிறார்களே என்றுதான் ஆறுதல் அடைவேன்!



நண்பர் எல். கணேசன் பேசும்போது 'கார்மேகம்போல் மழை பொழிகிறார் கருணாநிதி' என்றார்.

மழையை அனுபவிக்கும் போது நன்றி சொல்லத்தோன்றுதுதான். ஆனால் நன்றி சொல்லும் நேரத்தில், மேகம் மழை எல்லாம் பொழிந்து விட்ட காரணத்தால் நன்றியை ஏற்றுக் கொள்ள மேகம் ஆகாயத்தில் இருக்காது. அதைப்போல நீங்கள் என்றைக்கு நன்றி சொல்லுகிறீர்களோ-அப்படி நீங்கள் நன்றி சொல்லுகின்றபோது இருக்கிறேனோ, இல்லையோ- கவலை இல்லை!

தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களுக்குச் செய்யும் காரியங்களை அரசுப் பொறுப்பில் இருக்கும்போதானாலும் அல்லது ஆயுள் இன்னும் ஒரு நிமிடம்தான் என்று கணிக்கப்பட்டாலும், அதுவரை இது போன்ற பணிகளைச் செய்து கொண்டே இருப்போம்.

பீடிகைஏன்? என்னுடைய பேர்கேட்டால் புகைஎன்பேன்!
பீடி,கை உடையார்என் பேரறிவார்; சீரறிவார்!
தாத்தா கருஞ்சுருட்டு, தம்பியரின் வெண்சுருட்டு
பார்த்திருப்பீர்; தீநட்பு பாதிக்கும்; நான்எழுவேன்!
தொகையற்ற ஆடவர்முன் தொல்லைதரும் மனைவியர்கள்
நகைஆசை தனைக்கூறி நாளும்கண் கசக்கிடுவார்!
புகைநானே எத்தகைய பூவையரின் பூவிழிக்கும்
பகையாவேன்; கண்கசக்கிப் பார்த்திடுவேன்! இதிலெனக்கு
வெங்காயம் துணை!ஈர விறகெனக்கு மாளிகையாம்!
மங்கையரின் ஊதுகுழல் மந்திரத்தால் பறப்பேன்;நான்
எரிபொருளின் பெருமூச்சு! எண்ணெயுடன் சீப்புதொட
உரிமையின்றி விண்வெளியில் உலவுகருங் கூந்தல்நான்!
கார்மேகம் நீர்மேகம்; கழனிகளின் கொடைவள்ளல்!
நீர்மேகம் கொள்ளாத நிறமலட்டு மேகம்நான்!
பகைபோக்கி வாழ்கின்ற பக்குவம்நீர் பெறவில்லை!
புகைபோக்கி வாழமட்டும் புகைபோக்கி அமைத்துள்ளீர்!
படம்நூறு பார்த்திடுவீர்! பார்த்தாலும் உங்கள்புகைப்
படம்தன்னைப் பார்க்கையிலே பாசமிகக் கொண்டிடுவீர்!
வண்டிபல; நீர்செல்லும் வாகனங்கள் பல;எனினும்
வண்டிக்கென் பெயர்தன்னை வைத்து,புகை வண்டிஎன்றீர்!
வேறிலைகள் இருந்தாலும் வெற்றிலையோ வெற்றிஇலை!
சீருடைய அவ்விலையைச் சேர்ந்தஇலை புகையிலையே!
படம்,வண்டி இலைஇவைமுன் பாங்கான என்பேர்க்கும்
இடம்தந்தே எனைநீங்கள் ஏற்றமுறச் செய்துள்ளீர்!
முகில்புகைபோல் இருந்தாலும் முகில்தன்னை மதியாமல்
அகில்புகையில் கூந்தலினை ஆற்றிடுவர் பழம்பெண்கள்!
'மடச்சாம்பி ராணி!என்பீர் மடையர்களே! மலைப்பெண்டிர்
இடும்சாம்பி ராணிகண்டால் ''என்ராணி நீ!'' என்பீர்!
வத்திவைத்தல் தவறென்பீர்! வாசனைக்கோ நீர்ஊது
வத்திவைத்தால் அதிலிருந்து வரும்புகையை முகர்கின்றீர்!
கரும்பாலைப் புகைதன்னைக் கார்மேகம் என்றெண்ணி
விரும்பிமயில் ஆடியதாம்! வெலவெலத்து மெய்நடுங்கிப்
பாட்டொடுங்கிக் குயிலெல்லாம் பயங்கொண்டு கிடந்தனவாம்!
ஏட்டினிலே—நைடதமாம் இலக்கியத்தில் கவிமன்னன்
அதிவீர ராமன்என்பான் அறிவித்த செய்திஇது!
சதிகாரர் ஏழைஉடல் சாய்க்கின்ற குடிசைக்குத்
தீவைத்தால் உடனடியாய்த் தெரிவிப்பேன் நான்!பிறரைக்
கூவி அழைத்தேநீர் கூடிஅதை அணைத்திடுவீர்!
காயிருக்கும் இடம்மறைக்கும் கலைஅறியும் இலை;நானே
தீயிருக்கும் இடம்மறைக்கத் தெரியாத அப்பாவி!
எரியும் திரிவிளக்கு இருள்விரட்டும்; அவ்விருளோ
கரியநிறம்! நானும்தான் கரியநிறம்! அதனாலே
இருளுடன்நான் உறவுகொள்வேன்; இருள்உறவு கொள்வதனால்
திருடனென என்னைநீர் திட்டித் தொலைக்காதீர்!
தொகையென்றால் பணம்என்பீர்! துயர்என்றால் அழுதிடுவீர்!
நகையென்றால் சிரித்திடுவீர்! நான்என்றால் அழுவீரா?
பகையென்றால் முறைத்திடுவீர்! பாம்பென்றால் நடுங்கிடுவீர்!
புகழ்என்றால் விரும்பிடுவீர்! புகைஎன்னை வெறுப்பீரா?



ஒரு கண்ணில் புரை இருந்தால்....

டாக்டர் ஜி.வெங்கடசாமி

வயதானவர்களுக்கு உண்டாகும் புரை சாதாரணமாக இரண்டு கண்களிலும் உண்டாகும். ஒரே சமயத்தில் இரண்டு கண்களிலும் கொஞ்சங் கொஞ்சமாகப் பார்வை குறைவது வாடிக்கை. முதலில் ஒரு கண்ணில் புரை முற்றிவிடலாம். அப்பொழுது எந்தக் கண்ணில் பார்வை அதிகம் குறைந்திருக்கிறதோ அதற்கு முதலில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். அறுவை சிகிச்சை செய்யப்படாத கண்ணில் நல்ல பார்வை இருந்தால் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட கண்ணிற்குக் கண்ணாடி தேவை இல்லை. கண்ணாடி போடாவிட்டால் அறுவை சிகிச்சை செய்துகொண்ட கண்ணில் பார்வை நன்றாக இருக்காது. பின்னர் எதற்காக அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்று பலர் நினைக்கலாம். முற்றிய புரை கண்ணிற்குள்ளேயே இருந்தால் பல கஷ்டங்கள் ஏற்படும். கண் அழுத்தம் அதிகமாவதற்கு ஒரு முக்கிய காரணம் முற்றிய புரையே. உரிய காலத்தில் புரையை எடுக்காவிட்டால் கண் அழுத்தம் அதிகமாகி வலி உண்டாகும். பலர் இவ்வாறு வலி ஏற்பட்ட பின்னர் வலிபொறுக்க முடியாமல் மருத்துவமனைக்கு வருகிறார்கள். வலி ஏற்பட்டவுடனேயே கண்மருத்துவரிடம் சென்று சிகிச்சை செய்து கொண்டால் பார்வையை காக்கலாம். சிகிச்சை செய்து கொள்வதற்குக் காலதாமதமானால் கண் அழுத்தத்தினால் நரம்புகள் கெட்டு, பார்வையை இழக்க நேரிடும்.

நாம் நடமாடுவதற்குப்பக்கப் பார்வை நன்றாக இருக்க வேண்டும். ஒரு கண்ணில் புரை ஏற்பட்டு பார்வை குறைந்தால் அக் கண்ணிற்கு அருகிலுள்ள பொருள் நமக்குத் தெரிவதில்லை. தெருவில் நடமாடும்பொழுது சைக்கிள், கார் முதலியவை பக்கவாட்டில் வந்தால் அக் கண்ணிற்குத் தெரிவதில்லை அறுவை சிகிச்சை செய்து புரையை எடுத்துவிட்டால் பக்கப்பார்வை நன்றாகத் தெரியும். ஆதலால் ஒரு கண்ணில் புரை இருந்தால் ''அடுத்தகண் பார்வை நன்றாக இருக்கிறது'' ஆதலால் புரை உள்ள கண்ணிற்கு அறுவை சிகிச்சை வேண்டியதில்லை என்று இருத்தல் ஆபத்தாகும்.

பல்வேறு காரணங்களால் ஒரு கண்ணில் மட்டும் புரை உண்டாகலாம். கண்ணில் அடிபடுவதால் புரை உண்டாகலாம். முள், அல்லது ஊசி கண்ணிற்குள் குத்தினால் புரை உண்டாகும். மையோப்பியா (Myopia) அல்லது கிட்டப் பார்வை உள்ளவர்களுக்கு கண்ணில்புரை உண்டாகலாம். கண்ணிற்குள்ளிருக்கும் ரெட்டினா (Retina) என்ற பகுதி கிழிந்தாலும் ஐரிஸ் (Iris) அழர்ச்சி ஏற்பட்டாலும் கண்ணில் புரை உண்டாகலாம். சிறு வயதில் ஒரு கண்ணில் மட்டும் புரை உண்டானால் புரை எதனால் உண்டாயிற்று என்பதை அறிதல் அவசியமாகும். கண்ணின் உட்பகுதி கெட்டுவிட்டால் புரையை எடுத்தாலும் பார்வை சரியாக வராது. ஆதலால் கண்ணை நன்றாகப் பரிசோதித்துக் கண்ணின் நிலையை நன்றாக அறிந்து சிகிச்சை செய்ய வேண்டும்.

புரை அறுவை சிகிச்சை செய்து கொண்ட கண்ணும் அறுவை சிகிச்சை செய்யப்படாத நல்ல கண்ணும் இணைந்து பார்க்க முடியுமா?

உயர்ந்த உத்தியோகத்தில் வேலை செய்யும் நண்பர் ஒருவருக்கு ஒரு கண்ணில் புரை இருந்தது. வயது முப்பது தான் இருக்கும் மற்றொரு கண்ணில் நல்ல பார்வை இருந்தது. புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதும் அறுவை சிகிச்சை செய்து கொண்ட கண்ணிற்கு கண்ணாடி போட்டதால் நல்ல பார்வை வந்தது. ஆனால் அறுவை சிகிச்சை செய்து கொண்ட கண்ணில் உருவங்கள் பெரியதாகத் தெரிந்தது. ஒரு பொருளைப் பார்த்தால் இரண்டு பொருளாகத் தெரிகின்றது. அறுவை சிகிச்சை செய்து கொள்ளாத, நல்ல பார்வை உள்ள மற்றொரு கண்ணில் தெரியும் உருவம் சிறியதாகவும், அறுவை சிகிச்சை செய்த கண்ணில் பெரியதாகவும் இரண்டு வேறுபட்ட உருவங்கள் தெரிந்தன. ஆதலால் கண்ணாடி போடுவது இயலாமல் போய்விட்டது. இப்படிப் பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்குப் பதிலாக 'ஒட்டுக் கண்ணாடி' (Contact Lens) போடலாம். ஒட்டுக் கண்ணாடி கண் கருவிழியில் பொருத்தப்படும். கண்ணாடி போட்டிருப்பது வெளியில் தெரியாது. சுமார் 7 மில்லி மீட்டர் குறுக்களவு இருக்கும். இந்தக் கண்ணாடி பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்டிருக்கும் ஒட்டுக் கண்ணாடி இரு வகைப்படும். கடினமான ஒட்டுக் கண்ணாடி, மிருதுவான ஒட்டுக் கண்ணாடி. கடினமான ஒட்டுக் கண்ணாடியை சில மணி நேரங்கள்தான் போடலாம். மெதுவான ஒட்டுக்கண்ணாடியை நாள் முழுவதும் போட்டுக்கொள்ளலாம். மெதுவான ஒட்டுக்கண்ணாடி வளையும். சுமார் 13 அல்லது 14 மில்லிமீட்டர் அளவு இருக்கும். இந்த இரு ஒட்டுக் கண்ணாடியில் ஏதாவது ஒன்று போட்டுக் கொண்டால் பொருளின் உருவம் நல்ல கண்ணில் தெரிவது போலவே அறுவை சிகிச்சை செய்த கண்ணிலும் தெரியும். அப்பொழுது இரண்டு கண்களும் சேர்ந்து இணைந்து வேலை செய்யும்.

நீரழிவு வியாதி உள்ளவர் ஒருவருக்கு கண்ணில் புரை இருந்தால் என்ன சிகிச்சை செய்யலாம்.

நீரழிவு வியாதி உள்ளவர்களுக்கு மற்றவர்களைவிட புரை எளிதில் உண்டாகும். நீரழிவு வியாதியினால் கண்ணில் பல மாறுதல்கள் உண்டாகும். கண்ணிற்கு பின்னாலிருக்கும் ரெட்டினாவில் (Retina) இரத்த நாளங்கள் உள்ளன. இந்த இரத்த நாளங்களில் மாறுதல் ஏற்பட்டு ரெட்டினாவில் இரத்தம் கசியும், நீரழிவு வியாதி பல வருடங்களாக ஒருவருக்கு இருந்தால் ரெட்டினாவில் மாறுதல் உண்டாகும். இரத்தம் கசிந்தால் பார்வை மங்கும்.

புதிய இரத்த நாளங்கள் தோன்றி ரெட்டினாவிலிருந்து கண் விழிக்குள் வரலாம். இவ்வாறு தோன்றிய புதிய இரத்த நாளங்களிலிருந்து இரத்தக் கசிவு ஏற்பட்டால் பார்வை குறைந்துவிடும்.

ஐரோப்பா அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளில் நல்ல சிகிச்சை முறையினால் நீரழிவு நோய் உள்ளவர்கள் பல வருடங்கள் வாழ்கிறார்கள். பல வருடங்கள் நீரழிவு இருந்தால். ரெட்டினா பாதிக்கப்பட்டு, பார்வை இழக்கிறார்கள். இந்த நாடுகளில் மக்கள் பார்வை இழப்பதற்கு முக்கிய காரணம் நீரழிவு வியாதிதான். நம்நாட்டிலும் இவ்வாறு நீரழிவினால் பார்வை இழப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

ஆதலால் நீரழிவு நோயாளிகளை நன்றாகப் பரிசோதிக்க வேண்டும். அறுவை சிகிச்சைக்கு முன்னாலும் அறுவை சிகிச்சைக்குப் பின்னாலும் சர்க்கரையைக் கட்டுப்படுத்த வேண்டும். இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டோ அல்லது மாத்திரைகள் சாப்பிட்டோ கட்டுப்படுத்த வேண்டும் இவர்களுக்குப் புரை அறுவை சிகிச்சை செய்வது கஷ்டமில்லை ஆனால் ரெட்டினாவின் நிலையைப் பொறுத்தே அவர்கள் இழந்த பார்வையைத் திருப்பப் பெறுவதற்கான வாய்ப்பு அமையும். ரெட்டினா அவர்கள் இழந்த பார்வையைத் திருப்பப் பெறுவதற்கான வாய்ப்பு அமையும். ரெட்டினா அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தால் அதற்கு வேண்டிய சிகிச்சையை உடனே செய்ய வேண்டும். இரத்தம் கசிவதைத் தடுப்பதற்கு புதிய பல கருவிகள் உள்ளன. ஒளிக்கதிர்களை கொண்டு ரெட்டினாவில் இருக்கும் கசியும் நாளங்களை அழித்துவிடலாம். நீரழிவினால் ரெட்டினா பாதிக்கப்படுவதற்கு இதுதான் சிறந்தசிகிச்சை முறை. நீரழிவு வியாதி இருப்பவர்கள் வருடம் ஒருமுறையாவது தகுந்த கண் மருத்துவரிடம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். கண்ணிலுள்ள இரத்த நாளங்களில் ஃபுளோரசின் (Fluorescin) என்ற மருந்தைச்செலுத்தினால் ரெட்டினாவில் இரத்த நாளங்களில் இந்த மருந்து பரவுவது நமக்குத் தெரியும். இரத்தம் கசியும் இடங்களிலிருந்து இந்த (Fluorescin) மருந்து கசியும். எந்த எந்த இடங்களில் கசிவு உண்டாகி இருக்கிறது என்று அறிந்து ஒளிக்கதிர்களைக் கொண்டு அந்த இடங்களை அடைத்துவிட்டால் பார்வையைப் பாதுகாக்கலாம்.

சிலருக்கு ரெட்டினாவில் இரத்தம் அதிகம் கசியும் பொழுது விடரியஸ் (Vitreous) க்கும் பரவிவிடும். பின்னர் விட்ரியஸ் சுருங்கும்பொழுது ரெட்டினாவைப் பற்றி இழுக்கும். அப்பொழுது ரெட்டினா பிரிந்துவிடும். ரெட்டினா பிரிந்ததும் பார்வை குறைந்து விடும். நோயாளிக்கு நீரழிவு வியாதி இருந்தது என்றால் நீரழிவு நோயை கட்டுப்படுத்துவதுடன் ரெட்டினாவின் நிலையை அறிந்து தகுந்த சிகிச்சை செய்ய வேண்டும். நீரழிவு நோயிற்கு என்ன வைத்தியம் செய்தாலும் ரெட்டினா பாதிப்பதை தடுப்பது கஷ்டம். இவர்களுக்கு புரை உண்டாவதனாலும் பார்வை குறையும். இவ்வாறு இருவகையிலும் பார்வை குறைவதால் மருத்துவர்கள் நன்றாக கண்ணைப் பரிசோதித்து ஒவ்வொன்றிற்கும் தகுந்த சிகிச்சை செய்ய வேண்டும். புரைக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். ரெட்டினா பாதிக்கப்படுவதற்கு ஒளிக்கதிர்கள் மூலமாகவும், இதர சிகிச்சையின் மூலமாகவும் குணப்படுத்த வேண்டும். நீரழிவு நோயையும் கட்டுப்படுத்த வேண்டும். பெரும்பாலான நோயாளிகளுக்கு ரெட்டினா பாதிக்கப்படாமலே இருக்கலாம். அவர்களுக்குப் புரை அறுவை சிகிச்சை செய்தால் பூரண பார்வையைத் திரும்பப் பெறலாம்.

கண்ணில்லார்க்குக் கண் கொடுங்கள்!

கண்ணில்லார்க்குக் கண் கொடுக்க மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை கண் சேமிப்புநிலையத்திற்குத் தம்முடையகண்களை அளித்திடக் கடிதம் எழுதியுள்ளார் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரான திரு. எம். டி.தியாகராஜ பிள்ளை அவாகள.

தாம் இறந்தவுடன் தம்முடைய கண்களை எடுத்துக் கண்ணிழந்தவர்களுக்குப் பார்வை அளிக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பொழுது 75 வயதாகியுள்ள திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை 1947-ஆம் ஆண்டுமுதல் 1967-ஆம், ஆண்டுவரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நன்னிலம் தொகுதியின் சார்பில் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினராக இருந்துள்ளார்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் 1931-ஆம் ஆண்டில் ஓராண்டும், 1941-ஆம் ஆண்டில் ஆறுமாதமும், 1942-ஆம் ஆண்டில் இரண்டரை ஆண்டுகளும் சிறைத் தண்டனை அடைந்த தேசபக்தரான இவர் காங்கிரஸ் கட்சியிலும் அறநிலையங்களிலும், கதர் கிராமத் தொழில் வாரியத்திலும் பல பொறுப்புகளை வகித்தவர்.

தமிழக முதல்வரின் கண்ணொளித் திட்டத்தை மிகவும் பாராட்டுகின்ற இவர் தம்மைப் போலவே மற்றவர்களும் இறந்தபிறகு கண்பார்வை இல்லாதவர்களுக்கு பொருத்துவதற்கு "கண்தானம்" செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பழந்தமிழ் நாட்டில் ஹவாய் நடனங்கள்

க.பா.முத்தையன்

மேனாட்டு வண்ணத் திரைப்படங்களிலும் பத்திரிகைகளிலும் இயற்கையின் வண்ண எழில் கொழிக்கும் காட்சிகளைக் கண்டு மகிழ்கின்றோம். பசிபிக் பெருங்கடலில் கண்ணுக்கு இனிமையான இயற்கைக் காட்சிகள் நிறைந்த சிறு தீவுகள் பல உள்ளன. அவற்றில் ஹவாய்த் தீவுகள் மிகவும் புகழ்பெற்றுள்ளன.

ஹவாய்த் தீவுகள் என்றவுடன் ஹவாய் நடனங்களே முதலில் நம் கண் முன் வரும். இயற்கையின் இனிய இனிய சூழலில் நடனமாடும் இளநங்கையர் பெரிய காட்டுப்பூக்களைத் தலையில் செருகிக் கொண்டு, கழுத்திலே சிறு மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை அணிந்திருக்கிறார்கள். அவர்களைப் போலவே இளைஞர்களும் கழுத்திலே பூமாலைகளை அணிந்துகொண்டு அந்நங்கையருடன் கூடிக் குலவிக் கடற்கரைகளிலும் சோலைகளிலும் நடனம் ஆடுகின்றனர். கடலில் அவர்கள் நீந்தி விளையாடுகின்றனர். அவர்கள் மட்டுமில்லாமல் ஹவாய்த் தீவுகளுக்கு வரும் சுற்றுலாக்காரர்களும் அவர்களைப் போல, பூமாலைகளை அணிந்துகொண்டு உலவுகின்றனர். அவர்கள் எல்லாம் ஹவாய் நடனங்கள் ஆடுபவர்களா இல்லையா என்பது தெரியாது.

நம் பழந்தமிழ் நாட்டில் ஹவாய் நடனங்கள் இருந்தன என்றால் வியப்படைவீர்கள். இங்கும் இயற்கைச் சூழலில் ஹவாய் நடனங்கள் நடைபெற்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது. எழில் படச் சித்திரிக்கப்பட்டிருக்கும் இனிய அக்காட்சியைக் காண்போம்.

கடற்கரையில் அமைந்த சிற்றூர் காலை வெய்யில் தன்வெப்பத்தைக்காட்டத்தொடங்குகிறது. ஊரின் ஒரு பக்கத்தில் வயலில் நெல் அறுவடை நடைபெறுகிறது. வேலையின் கடுமையுடன் வெய்யிலின் கொடுமையும் சேர்ந்து கொள்ளவே தாள முடியாமல் அரற்றுகிறார்கள். வேலை முடிந்தபாடில்லை. வெய்யிலோ மேலே ஏறிக்கொண்டிருக்கிறது. அவர்கள் வெய்யில் மீது ஆத்திரப்படுகிறார்கள்; வெறுக்கிறார்கள். நெல்வயல்களிலே வேலை செய்பவர்களுக்கு நிழல் ஏது? ஆத்திரப்பட்டு வெறுப்பதைத் தவிர்த்து அவர்கள் என்ன செய்யமுடியும்?

அதே நேரம் ஊரின் கடற்கரைப் பக்கம். அங்கே என்ன நடைபெறுகிறது? கடல், குளிர்ச்சி மிகுந்த அலைகளை வீசிக் கொண்டிருக்கிறது. அங்கே பரதவ இளைஞர்கள் வருகின்றார்கள். அவர்கள் திண்மையான படகுகளைச் செலுத்துபவர்கள். அதனால் அவர்கள் உடல்களில் தசைகள் திரண்டு உருண்டு சிறந்து காணப்படுகின்றன. அவர்கள் கடலில் பாய்ந்து நீந்தி விளையாட விரும்பினர். கடல்நீரோ குளிர்ச்சியாக இருக்கிறது! குளிர்ந்த நீரில் அவர்கள் நீண்ட நேரம் இன்பமாக எப்படிக் குதித்து விளையாட முடியும்? அதனால் தங்கள் உடலை வெப்பமாக வைத்து முறுக்கேற்றிக் கொள்ள வெப்பமான மதுவை அருந்துகிறார்கள். கழுத்திலே, மழைக்குப் பின்பு தழைத்த, இனிய தேன் திவலைகள் நிறைந்த மெல்லிய புன்னை மலர்க் கொத்துக்களால் ஆன மாலைகளை அணிந்து கொண்டு அவர்கள் புறப்படும் தருணம். அடுத்திருந்த சோலையிலிருந்து இளநங்கையர் குரவைக் கூத்து ஆடத்தொடங்கும் பாட்டொலி கேட்கிறது. இனிய மதுவுடன் மங்கையர் பாட்டொலியும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா? இசையொலி ஈர்த்த இடத்திற்கு விரைகின்றார்கள். ஆகா! என்ன இனிய காட்சி! அங்கே குரவைக் கூத்து ஆடும் இளநங்கையர் கழுத்திலே கழிமுள்ளிப் பூக்களால் ஆன மாலைகளை அணிந்திருக்கிறார்கள். அவர்கள் கைகளில் அணிந்திருக்கும் வளைகள் ஒளிவிடுகின்றன. அவர்கள் எழிலுக்கு எழிலூட்டுகின்றன அவர்கள் அணிந்திருக்கும் ஒளி வீசும் தொடி என்னும் சிறந்த அணிகலன்கள்.

இனிய காட்சியைக் கண்ட இளைங்காளையர் நிலை என்ன? நடனமாடும் நங்கையரின் பாடலுக்குரிய தாளத்துடன் அவர்களுக்குத் தலைக்கை கொடுத்துத் தாமும் ஆடத்தொடங்குகின்றார்கள். பிறகு அவர்கள் நடனத்தைப் பற்றி சொல்ல வேண்டுமோ? நேரம் போவது தெரியாமல் நீண்டநேரம் நடைபெறுகின்றது. நங்கையர் களைப்படைகின்றனர். அதுவோ கடற்கரை! அங்கே விடாய் தீர்க்கும் நீர் ஏது?

அவர்கள் தங்கள் விடாயையும் களைப்பையும் போக்குவதற்குக் கண்டறிந்த வழி என்ன? அது நாம் எவருமே கேட்டிராத புதுமை! அவர்கள் இயற்கை அளிக்கும் மூவகைச் சாறுகளை ஒன்றாகக் கலந்து முந்நீர் என்ற இனிய சுவைநீர்க் கலவை தயாரிக்கிறார்கள். இனி 'முந்நீர்' அவர்கள் எப்படித் தயாரிக்கிறார்கள்? நல்ல பனங்குரும்பையைச் சீவி நுங்குநீரை எடுக்கிறார்கள். அதில் நல்ல மணமும் இனிப்பும் மிக்க கரும்பின் சாற்றினை எடுத்து ஊற்றுகிறார்கள். பின்பு அங்கே ஓங்கி ஒன்றோடொன்று பிணைந்து வளர்ந்திருக்கும் தென்னைகளிலிருந்து வெட்டி வந்த இனிய இளநீரைக் கலவையில் ஊற்றி ஒன்று சேர்வதற்காகக் குச்சியினால் விரவுகிறார்கள். என்ன இனிய கலவை! இச்சுவைநீர்க் கலவையை வேண்டுமளவு அருந்துகின்றனர். அதன் விளைவு என்ன?

நீண்ட நேரம் நடனம் ஆடியதால் ஏற்பட்டிருந்த களைப்பு நீங்குவதுடன் உடலில் புது முறுக்கேறுகிறது. அதன்பிறகு அவர்கள் வாளாவிருக்க முடியுமா? உடனே கடலில் விளையாடுவதற்கு ஓடி, கடல் அலைகளில் பாய்ந்து விளையாடத் தொடங்குகின்றனர். காண்பதற்கு அரிதான என்ன இனிய காட்சி! தாம் கண்ட இக்காட்சியை நமக்குச் சித்திரித்துக் காட்டும் மாங்குடி மருதனாரின் பாடலைக் காண்போம்.

நெல்அரியும் இருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயில்முனையின்
தெண்கடல்திரை மிசைபாயுந்து
திண்திமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூக்குந்து
தூவற்கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல்!
முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் தீஞ்சாறும்
ஓங்குமணல் குவவுத்தாழைத்
தீநீரோடு உடன்விராஅய்
'முந்நீர்' உண்டு முந்நீர்ப் பாய்யும்
தாங்கா உறையுள் நல்லூர்.....

(புறநானூறு 24)

(தொழுவர்-தொழில் செய்பவர்...முனையின்-வெறுக்கின். மிசை-மேல் சீர்தூக்குந்தாளத்தையொட்டி. பாயுந்து-பாயும். திமில்-படகு. மட்டுண்டு-மதுவுண்டு. தூவல்-திவலை. கலித்த-தழைத்த. இணர்-கொத்து. மிலைந்த-அணிந்த. எல்-ஒளியுடைய. தரூஉந்து-தந்து. கானல்-கற்கரைச் சோலை. முண்டகக் கோதை - உப்பங்கழிமுள்ளி மலர் மாலை. இரும்பனை-பெரிய பனை. குவவுத்தாழை-ஒன்றுடன் ஒன்று பிணைந்த தென்னை,. விராய்-வரவி. முந்நீர்-குரும்மைநீர், கருப்பஞ் சாறு, இளநீர் ஆகியவற்றின் கலவை. முந்நீர்-ஊற்றுநீர், மழைநீர், ஆற்றுநீர் கலந்த கடல்)

விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.

அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.

எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS: 269 ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA

இலக்கியங்களுக்கு

இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

வரலாற்றுப் பெருமை
வளர்த்த கலைப்பெருமை
நிலைத்த புகழ்ப்பெருமை
நீள்வனப்பின் தனிப்பெருமை

தமிழ்நிலத்தின்
தன்னேரில்லா
மாட்சியெனக்
காட்டிடும்
காட்சிகள்



வனப்புமிகு
மதுரையில்
வானுயர்
கோபுரங்கள்



காண்பவரை வியப்பில் ஆழ்த்தும் இராமேசுவரம் ஆலயத்தின் உட்பிரகாரம்



கலைமலி காஞ்சியில் கைலாசநாதர் ஆலயம்



தில்லை நடராசரின் திருக்கோயில்



உச்சியில் பறக்கும் ஒரு பறவையின் கண்களுக்குத் தெரியும் உதகையின் தோற்றம்!



பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடம்

வேளாங்கண்ணி மாதா கோவில்



உதகையில் எழில்குலுங்கும் ஏரிக்கரைக் காட்சிகள்





உதகையில் எழில்குலுங்கும் ஏரிக்கரைக் காட்சிக



தஞ்சை சரஸ்வதி மகால்



திருவண்ணாமலை ஆலயத்தின் ஒரு தோற்றம்



தேசிங்குராஜன் ஆண்ட செஞ்சிக் கோட்டை



மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனை ஒரு தோற்றம்



கோலமிகு குற்றாலத்தில் கொட்டும் குளிர்அருவி

நீலத்திரைக் கடல் ஓரத்தில்
நித்தம் தவம் செய்யும் குமரியில்
கடல் நீராடும் காட்சி

கோடைக்கானல் ஏரியின் கொஞ்சும் அழகு



அண்ணா சதுக்கம் அருகிலுள்ள நீச்சல் குளம்



ஏர்க்காட்டு ஏரியின் எழிற்கோலம் இது

இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

சிறு சேமிப்புத் துறையின் சிறிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ	ரூ	ரூ
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	. . .
	10/-	750/-	. . .
வளரும் மாதச் சேமிப்பு	5/-	. . .	825/-
	10/-	. . .	1, 650/-

சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். **இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை.** சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.



தளரா உள்ளத்திற்குத் தங்கப் பதக்கம்

கோயில் திருவிழா!

கூட்டத்துக்குக்குறைவில்லை.

ஆடவர், பெண்டிர், குழந்தைகள் அனைவரும் குழுமியிருக்கின்றனர்.

கூட்டத்துக்கு நடுவே ஒரு ஆடு துள்ளி குதித்து வருகிறது. அதற்குத் தெரியுமா, இன்னும் சிறிது நேரத்தில் நம் உயிர் ஊசலாடப் போகிறதென்று!

கையில் கட்டாரியுடன் இதயத்தை அடகு வைத்து விட்டு காட்சியளிக்கும் மனிதன் எதிரே நிற்கின்றான். பேதை ஆடு அவன் முன்னே நிற்கிறது. போதை தலைக்கேறியவன் போல அவன் கை ஓங்குகிறது. ஆட்டின் தலை வேறு உடல் வேறாகக் கீழே விழுகிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் இரத்த வெள்ளம்.

இந்த அவல நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும் என்று முழு மூச்சுடன் செயல்பட்டார் ஒருவர்.

தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து 'கொல்லாமை' பற்றிப் பிரச்சாரம் செய்தார். வெளியீடுகளை விநியோகித்தார்.

அவர்தான் 'ஜீவபந்து' என்று அழைக்கப்படும் திரு. டி.எஸ். ஸ்ரீபால் அவர்கள்.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்றாரே பாரதி.

'கொல்லான் புலாலை மறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்று சொல்லவில்லையா வள்ளுவர்?

இதனை மக்கள் உணரும் வண்ணம் உயிர்ப் பலிக்கு முற்றுப் புள்ளி வைத்திட இவர் தொடர்ந்து உழைத்து வந்தார். இவரது தொண்டினைப் பாராட்டும் வகையில், 1943 ஆண்டில் நடந்த மகாவீரர் பிறந்த நாள் விழாவில் இவருக்கு 'ஜீவபந்து' என்னும் சிறப்புப் பட்டத்தை சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் வழங்கினார்.

இவரது பெரு முயற்சியால் தமிழக அரசு 1951-ஆம் ஆண்டு கோயில்களில் பலியிடுவதைத் தடை செய்ததை இங்கே நாம் குறிப்பிட வேண்டும்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்பில் திரு. டி.எஸ். ஸ்ரீபால் அவர்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் :

''சில இடங்களுக்கு யான் ஸ்ரீபாலுடன் சென்றிருக்கிறேன். என் தலைமையிலும் அவர் சில இடங்களில் பேசியுள்ளார். ஸ்ரீபால் கூட்டமாவார், கூட்டம் அவராகும். அவர் பேச்சில் உணர்ச்சி ததும்பி வழியும்.

''ஸ்ரீபாலுக்கு 'ஜீவபந்து'

என்னும் பட்டம் சூட்டப்பட்டது. பாராட்டுக் கூட்டம் என் தலைமையில் பிரம சமாஜ மண்டபத்தில் நடைபெற்றது. ‘ஸ்ரீபால்’ என்பது ‘கருணையைக் காப்பது’ என்னும் பொருளுடையது. ‘ஜீவபந்து’ என்பதும் அக்கருத்துடையதே.

‘‘காந்தியடிகள் அறிவுறுத்தும் விழுமிய அறத்தைச் செயலில் ஓம்பி வருவோர் ஸ்ரீபால் என்று கூற யான் தியங்கேன்; சிறிதும் தியங்கேன் . . .’’

சமண சமய சம்பந்தமான 21 நூல்களை இவர் எழுதியுள்ளார். ஆராய்ச்சி, நாடகங்கள், இசை நூல்கள் முதலானவை இவற்றுள் அடங்கும். 74 வயதான இவர் உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல் தொண்டாற்றி வருகிறார்.

மீரட் நகரிலுள்ள வீர நிர்வாண பாரதி சங்கத்தார் மகாவீரர் பிறந்த நாள் விழா நினைவாக, சைன அறிஞர் பெருமக்களைப் பெருமைப் படுத்தும் வகையில் அவர்களுக்குப் பரிசும் பட்டமும் வழங்கி வருகின்றனர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும்...

அக்டோபர்த் திங்கள் 29-ஆம் நாள் புதுதில்லி விஞ்ஞான பவனில் நடந்த இந்தவிழாவில் இந்தியா முழுவதும் இருந்து வந்த பன்மொழி சைன அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ் நாட்டில் அரை நூற்றாண்டுக் காலமாகச் சமய, இலக்கியப் பணி புரிந்து வரும் திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்களுக்கு இந்த விழாவில் ‘சமாஜ ரத்தின’ என்ற விருதினை குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜட்டி அவர்கள் வழங்கினார். இவையன்றி ‘தங்கப் பதக்க’மும், ரூ. 2,500 ரொக்கப் பரிசும், கடியாரமும் வழங்கப் பெற்றன.

நாளும் நற்பணியாற்றி வரும் இவருக்கு விரைவில் ‘பிராணி மித்ரா’ என்ற விருது குடியரசுத் தலைவரால் வழங்கப் படவிருக்கிறது. உயிர்த் தோழனாக விளங்கும் இவருக்குப் ‘பிராணி மித்ரா’ (உயிர்த் தோழன்’) என்ற விருதினை அளிப்பது பொருத்தம்தானே?

—பி.வி.ஜி.

ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

இலவசக் கல்விபோதனை

வகுப்புகள் ஆரம்பம் : 18-1-1975

ஆண்—பெண் இருபாலரும் 1975-76-ம் வருட சர்க்கார்-பல்கலைக் கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B. A., B. Com., B. Sc., March- 1976 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B. L., M. A., M. Com., A. M. I. B. M. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B. A., B. Com., B. Sc., (S. S. L. C. (அ) S. S. C. ஆ, மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபால்-ஆந்திரா-கர்னாடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A. C. B- I. (London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள், 6. Account Text Exmns. (I. M. C., S.S.L.C./S,S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்-டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10. தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட்மென். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-75). 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு [illegible]ம் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER. D. Com., B. Co[illegible] B. Com (Hons) M. Com., S. S. L. C. அல்லது P. U. C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-அக்டோபர் தேர்வில் கலந்து கொள்ளலாம். 2[illegible] பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாசிடர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தே[illegible]VI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் [illegible]த்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

‘தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்’

Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம்—S.O., Pin : 606205. தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு.

கிளைகள் : சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.

கைரேகை

கைரேகை!

இந்த வார்த்தையிலேயே இரண்டு 'கை'கள் அடங்கியிருக்கின்றன. இந்த இரண்டு கைகளின் ரேகைகள்தானே புலனாய்வுக்குப் பெரிதும் உதவுகின்றன!

கொலையோ கொள்ளையோ நடக்கின்ற இடத்தில் ஏதாவது தடயம் கிடைக்கிறதா என்று பார்க்கும்போது, கள்வனின் கால் அல்லது கை ரேகைகள் எதன் மீதாவது பதிந்திருக்குமானால் அவையே அவனைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்கின்றன.

கைரேகையை வைத்துக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பது என்பது ஒரு கலைதான். இக்கலை இன்று நேற்று ஏற்பட்டதல்லவே!

சென்னை மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையில் ஆய்வாளராகப் பணியாற்றி வரும் திரு. வி. எஸ். இராமச்சந்திரன் கூறுகிறார்:

''கைரேகைத் துறையின் (Finger Print Bureau) பிறப்பிடமே இந்தியாதான். வங்காளத்தில் காவல் துறைத் தலைமைஅலுவலராக இருந்த எட்வர்டு ஹென்றி என்பவர்தான் இந்த முறையை முதலில் வகுத்தவர்.

அவர் வகுத்த முறைதான், ஒரு சில மாறுதல்களுடன் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகிறது. பிறகு இவர் இலண்டன் காவல் துறைத் தலைவரான போது அங்கு இருந்த முறையைக் கொண்டு வந்தார்.'' இம்முறையை இந்திய அரசு 1897-இல் நாடு முழுவதும் கொண்டுவந்தது. இதற்கான சட்டம் 1899-ல் திருத்தப் பெற்றது''

இவர் இல்லத்தில் கைரேகை சம்பந்தமான மேலைநாட்டு நூல்கள் நிறையக் காட்சியளிக்கின்றன.

காவல் துறையில் 1940-லிருந்து பணியாற்றி வரும் இவர், கைரேகை பார்த்துக் கணிப்பதில் சிறந்து விளங்குகிறார். இப்போது இவருக்கு வயது 54. சிறு வயது முதற் கொண்டே இத் துறையில் கவனம் செலுத்தத் தொடங்கினார். இக் கலையை இவருக்குக் கற்பித்தவர் இவரது பெரியப்பாவாம்.

கைரேகை மட்டுமல்ல காலடி ரேகை (Foot Print) பிறந்த இடமும் இந்தியாதான்.

இப்போது காவல் துறையில் 'கணக்கிடும் பிரிவு' ஒன்றுக்குத் தமிழக அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. இப் பிரிவில் ஐந்து இலட்சம் குற்றவாளிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இவை பதிவு செய்யப்பட்டுக் குறியீடு இடப்பட்டுள்ளன. இவையன்றி மூன்று இலட்சம் விரல்ரேகைப் பதிவுகளும் இப்போது கணக்கிடப்பட்டு வருகின்றன.

திரு. வி. எஸ். இராமச்சந்திரன்

இவர் மேலும் கூறுகிறார்.

''இலண்டன் காவல் துறையில் கேபிள் மற்றும் கம்பியில்லாத்தந்தி மூலம் கைரேகைகளை அனுப்பும் ஒரு நவீன முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

''ஏறத்தாழ 6.4 கோடிப் பேரில் இருவருக்குத்தான் ஒரே மாதிரியான கைரேகை அமைந்திருக்கிறது.''

மிகப் பழமையான அறிவியல் துறைகளில் ஒன்றாகத் திகழும் கைரேகை ஆராய்ச்சி இன்று காவல் துறைக்கு ஒரு சமய சஞ்சீவியாகத் திகழ்கிறது, என்றால் அது மிகையல்ல!

சிறந்த காவல் நிலையம்

தமிழ்நாட்டில் உள்ள ஆறு காவல் அணிகளில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட 6 காவல் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தமிழ்நாடு காவல்துறைத் தலைமை அலுவலர் திரு. எஃப். வி. அருள் நேரில் சென்று பார்த்து இவற்றுள் மிகச் சிறந்த 3 காவல் நிலையந்தைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

தமிழ் நாட்டின் சிறந்த காவல் நிலயத்துக்கு வழங்குவதற்காகப் பிரிட்டிஷ் தகவல் துறையைச் சேர்ந்த போர்ரான் என்பவரால் வழங்கப்பட்ட சுழற்கோப்பை, இதற்குப் பயன்படுத்தப்படும்.

தமிழ் நாட்டிலேயே சிறந்த முறையில் பராமரிக்கப்படும் காவல் நிலையமாக, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை காவல் நிலையம், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

2-வது காவல் நிலையமாக சென்னை செம்பியம் காவல் நிலையமும், 3-வது காவல் நிலையமாக சேலம் மாவட்டம் சங்ககிரி காவல் நிலையமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் சுழற்கோப்பை, விருத்தாச்சலம் இரயில்வே காவல் நிலையத்துக்கு வழங்கப்பட்டது.

உங்கள் எதிர்காலத்திற்கு ஓர் நற்செய்தி

TNSC BANK

எப்பொழுதும் இல்லாத
அதிகப்படியான வட்டி
இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு
கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

ரூ 100/-ம், அதற்கு மேலும்	வட்டி விகிதம் வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.50%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.00%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.00%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக	8.00%
3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை	9.00%
5 வருடங்களுக்கு மேல்	10.00%

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

379, நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் ரோடு, சென்னை-600001
தந்தி அர்பாங்க் தொலைபேசி 20367 டெலக்ஸ் 7225

என.எல்.ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர்.
குடவாசல் சி.கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர்
ஆர்.கனகசபை, தலைவர்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குப் புதிய திட்டங்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்கத் தமிழ்நாட்டின் எழில் கொஞ்சும் இடங்களும், ஏற்றமிகு சிற்பக்கலை வண்ணமும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளைத் தம்பால் ஈர்க்கின்ற அளவிற்குத் தமிழகச் சுற்றுலாத் துறை நாளும் நல்லபல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

இதனை விளக்குகிறார் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஏ. வி. பி. ஆசைத் தம்பி அவர்கள்.



சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேட்டி

கே : தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எப்போது தோன்றியது? அது ஆற்றிவரும் பணிகள் என்னென்ன ?

ப: தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நடைபெறத் தனி வளர்ச்சிக் கழகம் ஒன்றை 1971 ஜூலையில் தமிழக அரசு உருவாக்கியது. 1971 அக்டோபரில் நான் தலைவராக நியமிக்கப்பட்டேன்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தக்க இட வசதி செய்வதை முதல் பணியாக எடுத்துக் கொண்டு வளர்ச்சிக் கழகம் செயல்படத் தொடங்கியது. திருச்சி, மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, ஊட்டி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள ஆறு சுற்றுலா மாளிகைகளை அரசு எங்களிடம் ஒப்படைத்திருந்தது. இவற்றைத் தற்காலத்திற்கேற்ப நவீன வசதிகளுடன் அதாவது குளிப்பு வசதி அறையோடு இணைத்தும், பொழுது போக்கிற்கான வானொலி வசதியும், சில இடங்களில் தொலைபேசி, குளிர்சாதன வசதியும் எல்லா இடங்களிலும் பயணிகள் உபயோகத்திற்கான

குமார்

துண்டு, சோப்பு ஆகியவை வழங்கும் வசதியும் முதல் பணியாகச் செய்யப்பட்டன.

இரண்டாவது பணியாகக் கொடைக்கானல், ஏர்க்காடு, ஒகேனக்கல் ஆகிய இடங்களில் நவீன வசதிகளுடன் புதிய சுற்றுலா மாளிகைகள் கட்டி முடிக்கப்பட்டன.

மூன்றாவது பணியாக ஊட்டி, திருச்சி, மதுரை ஆகிய ஊர்களில் உள்ள சுற்றுலா மாளிகைகளில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு விரிவாக்கப்பட்டன.

கே : வேறு புதிய சுற்றுலா மாளிகைகள் கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா?

ப: நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய சிறப்பு இயல்புகளைக் கொண்டதாக இருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு மாவட்ட முக்கிய இடங்களிலும் புதிய சுற்றுலா மாளிகை கட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

மகாபலிபுரம், காஞ்சிபுரம், சிதம்பரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, குற்றாலம், கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் சுற்றுலா மாளிகைகள் உருவாக்கத் திட்டமிருக்கின்றன.

மகாபலிபுரக் கடற்கரையில் பெரிய 'பீச் ரிஸார்ட்' ஒன்றைக் கட்ட 44 ஏக்கர் நிலம் ஏற்கெனவே வாங்கப்பட்டு விட்டது. 40 இலட்ச ரூபாய் செலவில் 100 அறைகள் கொண்ட மாளிகை ஒன்றைக் கட்ட திட்டமிருந்தாலும், முதலில் இருவர் தங்கும் 20 குடில்கள் மட்டும் முதல் கட்டமாகக் கட்டி முடிக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 1975 ஏப்ரல் முதல் சுற்றுலாப் பயணிகள் இதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சென்னையில் இராஜாஜி மண்டபத்திற்கு எதிரே கூவத்தினை ஒட்டி 2 ஏக்கர் நிலத்தில் சுமார் 2.5 கோடி ரூபாய் செலவில் இரண்டு நட்சத்திர ஓட்டல் ஒன்று நவீன வசதிகளுடன், 550 அடி உயர சுழலும் உணவு விடுதியுடன் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



பட்டுக் குகை

கே. : தமிழகத்தைச் சுற்றிப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

ப: நிறைய இருக்கின்றன. சுற்றுலா வளர்ச்சிக்கு முதலில் தங்க இடமும், அடுத்து சுற்றி பார்க்க வாகன வசதியும் அவசியமானதாகும். இதை உணர்ந்து சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை நகரிலும், தமிழகத்திலும் சுற்றிப் பார்க்க போக்குவரத்து வசதிகளைச் செய்திருக்கிறது.

முதல் சுற்றுலா: நாள்தோறும் தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகச் சொகுசு பேருந்து காலை 7 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டுக் காஞ்சி, திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் பார்த்து விட்டு மாலை 6 மணிக்குச் சென்னை வந்தடைகிறது. இதற்குக் கட்டணம் ஒரு பயணிக்கு ரூ. 20 ஆகும்.

இரண்டாம் சுற்றுலா: இது 7 நாட்களில் தமிழகத்தின் சில பகுதிகளையும் கர்நாடகத்தின் சில பகுதிகளையும் பயணிகள் பார்த்து வரத்தக்க அளவுக்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த 2-வது சுற்றுலா ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று காலை சென்னையிலிருந்து புறப்பட்டு திருவண்ணாமலை, ஏர்க்காடு, ஊட்டி, முதுமலை வனவிலங்குகள் சரணாலயம், கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர் பிருந்தாவனம், சாமுண்டீசுவரிமலை, பெங்களூர், ஒகேனக்கல், காஞ்சிபுரம், திருத்தணி சென்றுவிட்டு வெள்ளிக்கிழமையன்று ஏழாம் நாள் இரவு சென்னை வந்து சேரும். இந்த 7 நாட்களுக்குத் தங்கும் வசதி உட்பட ஒரு பயணிக்கான கட்டணம் ரூ. 250 ஆகும்.

மூன்றாம் சுற்றுலா: இது ஒவ்வொரு மாதமும் 2-வது சனிக்கிழமை சென்னையிலிருந்து புறப்பட்டு பாண்டிச்சேரி, சிதம்பரம், தஞ்சை, திருச்சி, இராமேசுவரம், மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், குற்றாலம், திருவில்லிப்புத்தூர், கொடைக்கானல், திருவரங்கம், திருவானைக்காவல் பார்த்துவிட்டு 8-வது நாள் சனிக்கிழமை சென்னை வந்து சேரும். இந்தச் சுற்றுலாவுக்குத் தங்கும் வசதி உட்பட ஒரு பயணிக்கான கட்டணம் ரூ. 225 ஆகும்.

இனி சென்னையிலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சுற்றுலா ஊர்திகள் விடுவதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்தச் சுற்றுலாப் பேருந்துகளில் திறமை வாய்ந்த. வரலாறு தெரிந்த வழிகாட்டிகள் உடன் வருவர்.

கே : தாங்கள் அண்மையில் மலேசியா, சிங்கப்பூர் சென்றதன் நோக்கமென்ன ?

ப: மலேசியன் ஏர்லைன்ஸ் சிஸ்டம் (MAS) சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் என்ற முறையில் என்னையும், துணை இயக்குநர் என்ற முறையில் திரு. டி. எஸ். தீனதயாளு அவர்களையும் மலேசியா வந்து போக அன்பழைப்பு விடுத்தது.

மலேசியா தமிழ்நாட்டை விட நிலப் பரப்பிலே மிகச் சிறிய நாடு; சிங்கப்பூர் சென்னை நகரத்தைப் போன்ற நிலப் பரப்புள்ள ஒரு தனிநாடு. இந்த இரு நாடுகளிலேயும் சுதந்தரத்திற்குப் பிறகு அதி அற்புதமான முன்னேற்றங்கள் எல்லாத்துறைகளிலேயும் ஏற்பட்டிருக்கின்றன. இதனை 1968-ல் நான் முதன் முறையாக மலேசியா, சிங்கப்பூர் சென்றபோது கண்டிருந்தேன்.

என்னை, சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் என்ற முறையில் எம்.ஏ.எஸ். நிறுவனம் அழைப்பு விடுத்தவுடன், நம் நாட்டுச் சுற்றுலா வளர்ச்சிக்கு

மலேசியா, சிங்கப்பூர் அவசியம் பயன்படும் என்ற முறையில் அழைப்பை ஏற்று 1974 செப்டம்பர் 30-ஆம்நாள் காலை 11.55 மணிக்கு எம்.ஏ.எஸ். விமானத்தில் புறப்பட்டோம். மூன்றரை மணி நேரப் பயணத்துக்குப்பின் மாலையில் மலேசிய தலைநகரான கோலாலம்பூர் விமானதளம் போய்ச் சேர்ந்தோம்.

கே: அங்குள்ள விமான தளம் வசதிமிக்கது என்று கூறுகிறீர்களே?

ப: ஆமாம். கோலாலம்பூர் விமானதளம் அகில உலக விமானங்கள் இறங்கத்தக்கபடி நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரையில் தில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்கள் அந்த முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதுமட்டுமல்ல மேற்கத்திய, கிழக்கத்திய நாடுகளிலிருந்து எந்த விமானம் இந்தியாவைக் கடந்து சென்றாலும், இந்தியாவிலுள்ள எந்த விமான தளத்திலாவது இறங்கிச் செல்கிற ஏற்பாட்டினை மத்திய அரசு செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

கே.: கோலாலம்பூரில் விமானப் போக்குவரத்துக்கான வசதிகள் நிறைய இருக்கின்றனவா?

ப: ஆமாம். கோலாலம்பூரிலிருந்து மலேசியாவிலே உள்ள பினாங்கு, ஈப்போ போன்ற இடங்களுக்கு அடிக்கடி விமானங்கள் விடப்படுகின்றன. இதைப்போல இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள முக்கிய இடங்களுக்கு நாள்தோறும் விமானங்கள் சென்றுவரக் கூடிய ஏற்பாட்டை ஒன்று 'இந்தியன் ஏர்லைன்ஸ்' நிறுவனமானது செய்ய வேண்டும். அல்லது செய்ய முன்வருகிற தனியாரையாவது ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு செய்ய இந்திய அரசு முன்வந்தால் தமிழகத்தில் உள்ள போர்க்காலத்தில் கட்டப்பட்ட பல விமான தளங்களை இத்தகைய போக்குவரத்துக்கு நாம் பயன்படுத்த முடியும்.

தமிழ்நாட்டில் பாண்டிச்சேரி, வேலூர், சேலம், தஞ்சை, இராமநாதபுரம், கயத்தாறு ஆகிய இடங்களிலுள்ள விமான தளங்களைப் பயன்படுத்தி நாள்தோறும் விமானங்கள் விடப்பட்டால், நாளடைவில்



'பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி' 1975 சனவரி 3ந் தேதி முதல் பிப்ரவரி 26ந் தேதி வரையில், அறிஞர் அண்ணா நகரில் நடைபெறவிருக்கிறது.

அறிஞர் அண்ணாநகர் பொருட்காட்சியையொட்டி, அங்குள்ள கோபுரம் வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும். மத்திய, மாநில அரசுத் துறைகளும் தனியார் நிறுவனங்களும் இந்தப் பொருட்காட்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நிச்சயம் அதிகரிக்கும். மலேசியா இதற்கு உதாரணமாக விளங்குகிறது.

கே: மலேசியாவில் சுற்றுலாப் பயணிகளுக்கான ஓட்டல்கள் இருக்கின்றனவா?

ப: கோலாலம்பூரிலும், பினாங்கிலும், சிங்கப்பூரிலும் ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் ஏராளமாக இருக்கின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் மலேசியா சிங்கப்பூருக்கு நிறைய வருகிறார்கள். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் சுற்றுலா வளர்ச்சியைக் கவனிக்கத் தனி வாரியங்களே இருக்கின்றன.

கே: இங்குத் தங்களைக் கவர்ந்த இடங்கள் என்னென்ன?

ப: கோலாலம்பூரில் ஒருமலையில் பிரம்மாண்டமான குகை ஒன்று உள்ளது. அதைப் பட்டுக் குகை (Batu Caves) என்றழைக்கின்றனர். அது எல்லா நாட்டுப் பயணிகளையும் கவரத்தக்க இடமாக இருக்கிறது. மற்றபடி மசூதி, பொருட்காட்சி, பினாங்கிலுள்ள பாம்புக்கோயில் இவைகள் தாம் அங்குக் குறிப்பிடத்தக்கவை.

2,000 ஆண்டு வரலாறு உள்ள நம்முடைய தமிழ்நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, 200 ஆண்டு வரலாறு கூட இல்லாத மலேசியா, சிங்கப்பூருக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்களென்றால் அதற்குக் காரணம், சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற வகையில் பல்வேறு வசதிகள் அங்கே நிறைய செய்யப்பட்டுள்ளன. அதுமாதிரியான வசதிகளை இந்தியாவில் செய்ய முடியும்; செய்ய வேண்டும்.

கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் கயிற்றில் செல்லக்கூடிய கேபிள் கார் (Cable Car) இருக்கிறது. இதே போல் ஊட்டியில் தொட்டபெட்டாவுக்கும், ஊட்டிக்கும் இம்மாதிரியான கேபிள் கார் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

கே: மலேசியா, சிங்கப்பூருக்கு அதிகமான பயணிகள் வரக் காரணம் என்ன?

ப: மலேசியா, சிங்கப்பூருக்கு அதிகப் பயணிகள் வருவதற்குக் காரணம், அங்கு உலகத்தில் கிடைக்காத எல்லா வகையான சாமான்களும் குறைந்தவிலையில் கிடைப்பது தான்!

கே: தமிழ்நாட்டுச் சுற்றுலா வளர்ச்சிக்கு வேறு ஏதேனும் புதிய திட்டங்கள் உள்ளனவா?

ப: உண்டு. நாங்கள் மலேசியா, சிங்கப்பூர் போய் வந்த பிறகு மூன்று வகையான சுற்றுலாக்களைத் தயாரித்திருக்கிறோம்.

மலேசியா, சிங்கப்பூரிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகிறவர்கள் 8 நாட்கள், 15 நாட்கள், 29 நாட்களில் சொகுசுப் பேருந்துமூலம் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்த்து விட்டுச் செல்கிற அளவுக்கு மூன்று வகையான சுற்றுலாக்களை உருவாக்கவிருக்கிறோம். மலேசிய சிங்கப்பூரிலுள்ள டிராவல் ஏஜென்ட்டுகள் மூலமாக இதற்கான ஏற்பாடுகளைச் செய்யவிருக்கிறோம். இந்தத் திட்டம் செயல்பட ஆரம்பித்தால், அந்நியச் செலாவணி நமக்கு அதிகம் கிடைக்கும்.

—பேட்டி: பி. வி. ஜி.

பிளாட்பாரம் காந்தி

செல்வி ஃ.பெப்ரீஷியா

நீட்டப்பட்டிருந்த என்னுடைய கையில் இருந்த அந்தப் பத்து ரூபாய் நோட்டைத் தன் விழிகளை நெருப்பாக்கிக் கொண்டு பார்த்தாள் அவள்.

''இந்த பணத்துக்காக அதை நான் எடுத்துக்கொண்டு வரவில்லை, ஐயா!''

வேகமாக அவளுடைய வாய் வீசியெறிந்த அந்தச் சொற்கள் என் இதயத்தைக் குற்றக் வாளியாக்கி விலங்கிட்டன. என்னிடமிருந்து எந்தவித பதிலையும் எதிர்பார்க்காதவள் போல வந்தவழியே திரும்பி நடந்தாள்.

எதிர்பாராத சூழ்நிலையில் வாழ்வில் எனக்கேற்பட்ட முதல் ஏமாற்றம் என்னை எல்லையற்ற உயரத்திலிருந்து வீசி எறிந்ததுபோலத் தோன்றியது. நான் நிதானமடைய நெடு நேரம் பிடித்தது.

நடந்தது இதுதான்—இப்படியெல்லாம் நடக்கும் என்று நான் எண்ணிப் பார்க்காததால் ஏற்பட்டன அந்த நிகழ்ச்சிகள்.

திருவண்ணாமலைக்கு அலுவல் காரணமாக வந்திருந்தேன். காத்திருக்க மனமில்லாமல் ஓடத் தொடங்கிய அந்தப் பேருந்தில் எப்படியோ தொத்தி உள்ளே நுழைந்தேன். உட்கார ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டு பணம் எடுக்கப் பைக்குள் கைவிட்டேன். என்னுடைய சட்டைப்பை எனக்கு ஏமாற்றமளிக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் காணமற்போன 'பர்சை'த் தேடிக் கொண்டிருந்தேன் — காசு வாங்கக் கையை நீட்டிக் கொண்டிருந்த 'கண்டக்டர்' என்னுடைய முகத்தில் எதையோ தேடிக்கொண்டிருந்தார். நானே கீழே இறங்கிவிட்டேன் நாணயமாகப் பேருந்தை நிறுத்தச்சொல்லி !

புழுதியைக் கிளப்பி விட்டுக் கொண்டே அந்தப் பேருந்து பறந்தது. இழந்த 'பர்சை'யும் அதனால் ஏற்பட்ட அவமானத்தையும் எண்ணி, வந்த வழியைத் துழாவிக் கொண்டே நடந்தேன்.

எதிரே ஓடிவந்த எவளோ ஒருத்தி என்னைக் கண்டது நின்றாள். அவளுடைய கையில் அந்தப் 'பர்ஸ்' இருந்தது. திரும்பிப் பார்த்தேன்—அந்தப், புழுதிகூட மறைந்திருந்தது.

''பஸ்ஸிலே நீங்க ஏறும் போது இது உங்க பையிலிருந்து விழுந்துச்சுங்க''

மூச்சும் பேச்சும் ஒன்றையொன்று முண்டியடித்துக் கொண்டு வெளிவந்ததால் அவளால் சரியாகக்கூட எதையுப் சொல்ல முடியவில்லை.

அதை வாங்கிக் கொண்டு அவளை ஆராய்ந்தேன். அழகைக் கூந்தல் ஒன்றினால்தான் அடையமுடியும் என்று நம்பும் ஆரணங்குகளுக்கு அறைகூவல் விடுப்பதைப்போல எண்ணெய் காணாத அவள் தலையைப்பற்றிக் கவலையே கொள்ளாமல் எழில் மலர்ந்திருந்தது. அளவெடுத்து உருவாக்கப்பட்ட அங்கங்கள் ஒருங்கிணைந்து உயிர் பெற்று நின்றன. பல இடங்களில் கிழிந்திருந்த அவளுடைய ஆடை அந்தப் பருவமேனிக்குப் பலகணிகளை அமைத்திருந்தது.

ஒரு பிச்சைக்காரிக்கு நன்றி கூற என் வாய் தயங்கியது— என் கண்களோ வெட்கமோ விவஸ்தையோ இல்லாமல் அவளைச் சுற்றி வேலியமைக்கத் தொடங்கின-என் கையோ ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் நோட்டுகளை எல்லாம் ஒதுக்கி விட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவள் முன் நீட்டியது.

அதிர்ச்சியும் ஒரு உணர்ச்சி தான்; அது அறிவுக்கு வழி கோலும் என்பதை அப்போது தான் புரிந்துகொண்டேன்.

என் அலுவல்களை எல்லாம் முடித்துக்கொண்டு ஊர்போகத் திரும்பினேன். தொடக்கத்தில் ஏற்பட்ட அந்த அவமானத்தை இடையில் குறுக்கிட்ட சிலபல நிகழ்ச்சிகள் துடைத்து அகற்றிவிட்டன; அதன் அடை

பாளங்கள் மட்டும் என் இதயத்தில் பதிவாகி இருந்தன.

அந்தக் காரிருளில் கனத்த மழை பெய்து கொண்டிருந்தது. திருவண்ணாமலை இரயில் நிலையத்தில் காலை 4.30 மணிக்குப் புறப்படும் விழுப்புரம் பேசஞ்சருக்காகக் காத்திருந்தேன்.

கருங்கொண்டல்கள் விண்ணில் குமுறிக்கொட்டின. வண்டி வருவதற்கு ஏறத்தாழ மூன்று மணிநேரம் இருந்தது. சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தேன். கையில் வைத்திருந்த லெதர் பேக்கை சிமெண்ட் பெஞ்சின் கைப்பிடியின் மீது, சரிவாகக் கிடத்தி, வலது கரத்தை அதன் மீது ஊன்றிச் சாய்வாக உட்கார்ந்து கொண்டேன். இரயில் நிலையத்தின் உள்ளே குழல் விளக்கொளி, சுற்றிச் சூழ்ந்த கும்மிருட்டில் ஒளிப்படலம் செய்திருந்தது. வெள்ளிக் கம்பிகளாக மழை உதிர்வது விளக்கொளியில் தெரிந்தது. குளிர்காற்று சில்லென்று வீச ஆரம்பித்தது. ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தேன். சற்று இதமாக இருந்தது.

நான் அமர்ந்திருந்த இருக்கையின் பின்புறத்தில் கீழே 'பாலிதீன் பேப்பரை' விரித்து நான்கைந்து உருவங்கள் முடங்கிக் கிடந்தன. பல துணிகளைத் தைத்து ஒட்டுப்போட்ட 'பின்னி கம்பெனி' 'நைன் ஓகிளாக்' போர்வைக்குச் சம அந்தஸ்தில் ஒரே போர்வையாகச் சற்றுச் நீள அகலத்துடன் அத்தனை பேரையும் ஒருசேரத் தழுவிக் கிடந்தது அந்த விரிப்பு. தலைமாட்டில் மூட்டை முடிச்சுகள், சிறிதும் பெரிதுமான சில அலுமினியக் குவளைகள்; பிளாட்பாரம் வாசிகள் போலும்.

கீழே முன்புறம் காலடியில் மூன்றரை அடி நீள அழுக்குத் துண்டில் ஒரு ஆறடி மனிதன் அடக்கமே உருவாக 'மரவட்டை'யாகச் சுருண்டுகிடந்தான். தீப்பெட்டியும் பீடிக்கட்டும் தலைக்குப் பக்கவாட்டில், சொந்த வீட்டுத் திண்ணையில் படுத்திருப்பதுபோன்று அந்தப் பக்கத்தில் இரும்பு வேலியை ஒட்டினாற்போன்று மூன்று நான்கு குடும்பங்கள்.

ஆக இப்படியாக அந்த வெயிட்டிங் ஹால் முழுவதும் மனித உருக்கள் சிதறி ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்துகிடந்தன. தூங்கும் போதுதான் மனிதன் எவ்வளவு பரிதாபமாகக் கிடக்கின்றான்? இந்த நேரத்தில் ஜன்ம விரோதியைக் கூடத் தாக்கத்தோன்றாது — மேலே இரும்புக் கிராதியில் பொருத்தியிருந்த குழல் விளக்கொளியில் நல்ல காலை வெய்யிலில் உலர்த்தப்பட்டிருக்கும் மணிலாக் கொட்டைகளென மனித உருக்கள்.

" ஐயோ....ம்...ம்..ஆ..ஆ என்ற சன்னமான வேதனைக் குரல் டிக்கட் கவுன்ட்டரின் கீழேயுள்ள இரண்டு இரும்புக் கம்பிகளுக்கு நடுவிலிருந்து அந்த மயான அமைதியைக் கலைந்து கொண்டிருந்தது. ஏறிட்டுப் பார்த்தேன். அவன் பச்சையான கலரில் ஒரு சட்டை போட்டிருந்தான். கவிழ்ந்

திருந்த தலையையும் உடலையும் ஒரு கிழிந்த அழுக்கு வேட்டி மூடிக்கொண்டிருந்தது. கைகால்களெல்லாம் ஒரே 'பேண்டேஜ்' மயம் — ஒரு குஷ்டரோகி. முனகல் ஒலி ஓய்ந்து முடிந்தது. ஆனால் அழுகிய தோலை நகங்களால் கீறும் ஒலிமட்டும் ஓயவில்லை. ஒரு பீடியை எடுத்துப்பற்ற வைத்தான். சர்ரென்று ஒரு புகைக் கம்பியை வெளியில் விட்டான். ஒரு மலர்ச்சி முகத்தில். எப்படி இந்த இரண வேதனையை இவ்வளவு விரைவில் மறந்துவிட்டான்? பீடியின் மகிமையோ?

அந்தக் கூட்டத்தில் விழித்திருந்தவர்கள் இருவர். ஒருவன் நான், அடுத்தவன் குஷ்டரோகி. அவனால் தூங்க முடியவில்லை. எனக்குத் தூக்கம் வரவில்லை. இந்தப் பக்கம் பெண்கள் கூட்டத்தில் பார்வையைத் திருப்பினேன். வரிசையாகப் படுத்திருந்த பெண்கள் வரிசையில் அந்தக் கடைசியிலிருந்து மூன்றாவது பெண்—!! அவளேதான்! காலையில் என் உள்ளத்தில் கனலைக் கொட்டியவள்!

ஜாக்கெட் பட்டன்களெல்லாம் தெறித்திருந்தன. வாழைக்குருத்தென வளமுடன் செழித்த தோள்கள் குழல் ஒளிக்கு எதிர்ப்போராட்டம் நடத்திக் கொண்டிருந்தன. எனக்குப் பகீர் என்றது.

உள்ளங்கால் முதல் உச்சிமுடி வரை ஏதோ ஒரு எலக்ட்ரிகல் ஷாக் என் உடலில் புகுந்தோடியது. செக்சிப் படங்களைப் பார்த்த உணர்வு, ஏதோ நிழற்படம் போன்று மீண்டும் நினைவுகளை ஆக்கிரமித்தது. என் விழிகள் காட்சியில் நிலைக்குத்தி நின்றன. எனக்கொரு குற்ற, உணர்வு—சே! ஒரு பெண்ணின் உறுப்புகளை-அதுவும் அவள் தன்னை மறந்து தூங்குகின்ற நிலையில்—இப்படி வெறித்துப் பார்ப்பது எவ்வளவு பேடித்தனம்? என் தலையைப் படார் என்று திருப்பிக் கொண்டேன். திரும்பின வேகத்திலேயே குஷ்டரோகியும் தலையைத் திருப்பியதைப் பார்க்க நேரிட்டது. அவனும் என்னைப்போல—சே! சே! அப்படி இருக்காது. என் குற்ற உணர்வு பேதலித்தது. அழுகிய இந்தச் சதைப் பிண்டத்திற்கே இன்னும் இன்பவெறி சாகவில்லை. அதற்குள் எனக்கு எப்படி? நான் இன்னும் ஒரு பெண்ணைக்கூடச் சார்ந்ததில்லையே!

சில நியாயங்களுடன் மீண்டும் அந்தக் காட்சியில் லயித்தேன். 'ம்..ம்..ஹூம்..' பீடி இருமல்தான். திரும்பிப் பார்த்தேன். குஷ்டரோகி இங்கேதான் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான். எனக்குப் போராட்டமாகிவிட்டது. இவனுடைய வியாதியும் வயதும்கூட

இந்தக் கள்ள வெறியை உருக்குலைக்கவில்லையா? அவன் என் ஆய்வுக்குக் கருவானான். அவன் மேற்கொண்டு என்ன செய்வான்? காலை நீட்டி லெதர் பேக்கில் தலையை வைத்துத் தூங்குவது போன்று நடித்தேன். என் கணிப்புத் தவறவில்லை.

அவன் மெதுவாக எழுந்தான், வேகமாகக் கிந்திக் கிந்திக் என்னைக் கடந்து சென்றான். அந்தப் பெண்கள் கூட்டத்தின் தலைப்புறம் சென்று நின்றான், குனிந்தான்.

''அடப்பாவி! இவனை இப்படியே தூக்கிப்போட்டு எத்தினால் என்ன ?'' என் மனம் நெருப்பாய்க் கனன்றது.

அவன் 'காந்தி' யானான் ! ஆம், குழல் விளக்கொளியில் சுடர்விட்ட தளிர்ப்பகுதியை விலகிக் கிடந்த முன்றானையால் மூடினான். திரும்பி நடந்தான்.

ஒரு மனிதனுக்கு நான் கொடுத்த மதிப்பீடு—அவ்வளவுதான்...! என் எ்திர்பார்ப்பு-அவன் செய்கை—எவ்வளவு முரண்பாடு? அவனோடு பேசிவிட வேண்டும்.

அவன் என்னைக் கடக்கும் போது நான் எழுந்து கொண்டேன். அவன் சற்றுத் தயங்கினான்.

''ஐயா...கொஞ்சம் நிக்கி நீங்களா-நான் அவனுக்குச் சமூக அந்தஸ்து அளித்தேன். ''சாமி என்னையா?.....இந்தா வாரேன் சாமி'' என்னை நெருங்கி வந்தான்.

நான், அவனைப் பக்கத்தில் ஆராய்ந்தேன். முதுமைக் கோலம் முடியில் தடம்பதித்து வெள்ளிக் கம்பிகளாகச் சுருண்டு கிடந்தன. இரத்தக் கறை நடுவில் தெரியும் எண்ணற்ற பஞ்சு ஒட்டுகள் கிழிந்து, நைந்துபோன கபிலைச் சாலுக்கு ஒட்டுப் போட்டது போன்று. கால் விரல்கள் புடலங்காயெனச் சுருண்டு கிடந்தன. பெருவிரலுக்கு அடுத்த விரல் வெம்பி விழுந்து தடங்காட்டியிருந்தது. மேல் உதட்டில் வெடிப்பு பாளம் பாளமாக....பாசத்திற்கு அப்பாற்பட்ட அந்த நாற்றம்...சகித்துக் கொண்டு உரையாடினேன்.

''கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தான் என் நெஞ்சில் நீங்கள் இடம் பிடித்தீர்கள்-பெண் சமூகத்தின்மேல் கொண்ட மதிப்பு - அப்படித்தானே?''

''சாமி...சாமி... எனக்குச் சமூகம் அது இதுன்னு பெரிய வார்த்தைகளெல்லாம் தெரியாது...அவ, எம்புள்ளை சாமி ....புள்ளை''. வரண்ட அவன் கண்ணிமைகள் பனித்தன.

எனக்கு அவன் செய்கையின் நியாயம் புரிந்தது. மகளின் மானத்தை ஒரு தந்தை காப்பது அதிசயமில்லையே! அவன் தொடர்ந்து பேசினான்.........

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு திருவண்ணாமலைக் கார்த்திகை தீபத்திற்கு வந்த கூட்டத்தில் இந்தப் பொண்ணு தவறிட்டா. தேடுவார் இல்லாத நிலையில் என்னுடனேயே ஒட்டிக் கொண்டாள். எனக்கு, அப்போது இந்த ரோகம் ஆரம்ப நிலை. உறவினர்கள் உதறித் தள்ளிய நிலையில், ஒட்டிக் கொண்ட இந்த உறவோடு ஊர் ஊராய்ப் பிச்சை எடுத்து வயிறு வளர்த்தேன். என் மாமிசம் உருக்குலைந்த நேரத்தில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பழைய இருப்பிடத்திற்கே வந்து அடைந்து கொண்டோம்? பாவாடை கட்டிக் கொண்டு பருவம் எய்திாத வரைக்கும் இவள் எனக்குச் சுமையாகப்படவில்லை....ஹூம்

> தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் குடியிருப்புத் திட்டங்களுடன் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்க்கு 100 இல்லங்களும், பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு 50 இல்லங்களும், கட்டத் திட்டமிட்டுள்ளது. 50,75,100,150, 200 மற்றும் 250 எண்ணிக்கையுள்ள மாணவர் அல்லது மாணவியர்களுக்கான தனித்தனி மாதிரி வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவ மாணவியர் இல்லங்களுக்கான மாதிரி வடிவமைப்புகளில், பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைபடி ஒரு மாணவருக்கு 36 ச. அடி தள பரப்பு அமைக்கப்பட்டுள்ளது. இல்லங்களில் முற்றங்கள், நடைவழிகள், உணவகம், கழிப்பிடங்கள், குளியலறைகள், கிடங்கு ஆகியவைகளின் தளப்பரப்பு இல்லத்தின் மொத்த தளப்பரப்பில் பாதிக்கும் அதிகமாக இல்லாமல் இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு வேதனைப் பொருமல், அவனால் தொடர்ந்து பேச முடியவில்லை. அந்த அளவுக்குத் துயரங்கள், அவன் உடல் இரணத்தைவிட அவனைக் கொடுக்காய்க் கொட்டியிருக்கின்றன.

சில உறவுகள் இப்படி இடையில் வந்தாலும், பழக்கமும் பாசமும், ஜீவ உறவுகளைத் தந்துவிடும் போலும். வளர்த்த பாசம் அவள் மானத்திற்கு தாய்ப்பணி செய்தது—என் சிந்தனையை இடைவெட்டுவது போல் அவன் பேச்சைத் தொடர்ந்தான்.

'' இவ என்னிக்குப் பூப்பெய்தினாளோ அன்றிலிருந்து அந்த மங்கல நிகழ்ச்சியினையே மறக்கடித்துவிட்டன இவளைத் தொடர்ந்த துன்பங்கள். குஷ்டரோகியின் மகள்தானே என்ற நினைப்பு இங்கு வரும் 'எல்லாத் தரப்பினருக்கும். கடைத்தேங்காயாகக் கணித்தனர் காமுகர் பலர். வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு காலம் தள்றேன்....எவனாவது ஒரு கூலிக்காரன் இவளைக் கட்டிக்க மாட்டானா? அது வரைக்கும் இந்தத் தங்கத்துக்கு மாசு ஏற்படக் கூடாதே! —இதுவே என் பிரச்சினைகளாக எனக்கு விசுவரூபமெடுத்துள்ளன.

''போன வாரம். இராத்திரியில் உங்களைப்போல ஒருத்தர் இப்படித்தான் முழிச்சிக்கிட்டிருந்தாரு. இவ என் பக்கத்திலேயே படுத்திருந்தா.......... எனக்குத்தான் இராத்திரி ஆயிட்டா ஒரே அரிப்புத் தானே! தூக்கமேது? இவளைக் காவல் காத்துக்கிடுவேன். அதிகாலையிலே லேசா தூக்கம் சொக்குச்சி....அப்படியே உட்கார்ந்து தூங்கியிருக்கேன்..... திடீர்னு எம்புள்ளை அலறி அடிச்சி எழுந்ததோ இல்லையோ நானும் பதறீட்டேன். அந்த ஆள் விலகி ஓட நின்னுக்கிட்டான். என்னங்க செய்யறது.

''அந்தரங்கமாகக் காப்பாத்த வேண்டிய பருவத்தை, வெளியே பிளாட்பாரத்திலே கடைவிரிச்சா-யாரைக் கொறை சொல்ல முடியும்? அல்லது யார்கிட்டேயும் ஓங்கிப் பேச இந்த வியாதிக்குத்தான் அந்தஸ்து இருக்கா. ஏழை எளியவன் துயரங்களெல்லாம் ஊமையன் கண்ட கனவுகள் தானே''

''நீங்க எதுவரைக்கும் படிச்சிருக்கீங்க?'' அவரின் தெளி

வான பேச்சைக் கேட்டதால் கேள்வி போட்டேன்.

''ஸ்கூல் ஃபைனலுங்க'' சுருங்கச் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான்.

''அதிலேயிருந்துங்க இவளை என் மகளாக இரவு நேரங்களில் யாருக்கும் அடையாளம் காட்டக் கூடாதுன்னு தீர்மானிச்சுட்டேன். பொழுதடைஞ்சாலே பொல்லாப்பு இங்கு நிறைய நடக்குதுங்க. சூரியன் அடைஞ்சிட்டாப் போதும் பொம்பளைங்க கூட்டத்தில் இவளைக் கலந்திடச் சொல்லிடுவேன்..என் பார்வையிலேயே அவளை மறைச்சி வைச்சி வாழ்றேன். எல்லா நாளுமா ஒன்றுபோல இருக்கு? சில நாள்ல பொம்பளைங்க இல்லாம பூடுது.....அதெல்லாம் எங்களுக்குச் சோதனைதான். பஞ்சவாடியிலே இராகவனும் சீதாப் பிராட்டியும் தூங்கும் போது இலக்குவன் காவல் காத்தானுமே! அந்தக் காவல் தான் எனக்கும்.....ஹூம்..... இது என்னைக்கு ஒருத்தன் பாதுகாப்புக்கு வரப்போவுதோ!.... அந்த ஒரு நாள்தாங்க இந்த உயிருக்குக் கெடுநாள்........ மற்றப்படி இத்தனை இரயில்களும் குட்ஸ்களும் ஓடுற இடத்திலே எனக்குச் சாகவா தெரியாது?..ஹூம்..என் உயிருக்கு இப்படியாயொரு இழுபறி.... அதைத்தொடர இப்படி ஒரு ஜீவன். சாமி நீங்க தூங்குங்க மகாராசன்! எங்க கதைதான் பிளாட்பாரத்திலும் ரோட்டிலும் எப்போதும் கிடைக்குமே ...எம்புள்ளையை நீங்க பார்த்தது என் உடலெல்லாம் நடுங்கிட்டுது...அதான் மானத்தை மூடினேன்.'' எனக்குச் சுருக்கென்றது!

அவன் எழமுயன்றான். ''பார்த்தீங்களா? நீங்க சாக நினைத்தும்...சாக விடாம தடுத்திட்டில்ல இந்த உறவு? அந்தப் பச்சைக் கொடிக்கு ஒரு பற்றுக் கொம்பு ஏற்படுத்தின பிறகில்ல...நீங்க தலைசாய்க்கணும்...அதுக்குள்ளாற மனந்தளர்ந்திட்டா எப்படி ?'' ஏதோ என்னாலான சிறு ஆறுதல் வார்த்தைகள்.

ஆமாங்க..சாமி.. ஆமாங்க அவர் பலமாகத் தலையை ஆட்டினார். கொட்டை கொட்டையாகத் தடித்திருந்த விரல்களால், பாகற்காயாகச்சுருண்டு கிடந்த காது மடலிருந்து ஒரு துண்டுப் பீடியை எடுத்துப் பற்ற வைத்தார். வியாதி முற்றியிருந்தது.

டிக்கட் ரூமில் கடிகாரம் மூன்றுமுறை ஒலித்தது. இரயிலுக்கு இன்னும் ஒரு மணிக்கு மேலே இருந்தது.

குஷ்டரோகியின் சந்திப்பு ஆக்ஸிடென்ட்டலாக நிகழ்ந்த ஒன்றுதான். ஆனால் அது ஒரு திரில்லிங்காக இருந்தது. சாக்கடையைக் கிளறும் கோழிக்கு நெல்மணி கிடைத்ததைப் போன்று, அசிங்கத்தைக் கிளற இருந்த எனக்கு.....இவர்கள் நெல்மணிகளெனக் கிடைத்துள்ளார்கள்...என் எண்ணம் இப்படியெல்லாம் சென்றது.

நிதரிசனமான இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிக்கோளுடனாவது வாழ்வான் போலும்! நான் ? — வெறுமை. நாளை சாகப் போகும் இந்த குஷ்டரோகியின் ரணத்தில்கூட எவ்வளவு பெரிய குறிக்கோள் புதைந்து கிடக்கின்றது?..என் வெறுமை எனக்கும் புரிய ஆரம்பித்தது.

படித்தேனே, பட்டம் பெற்றேனே, ஒரு பிழைப்பைத் தேடிக் கொண்டேன். நானும் என் சுற்றமும் தழைத்தோங்குவதற்கான வாழ்வுத் தளத்திற்கு உத்யோகத்தைக் கான்கிரீட்டாக்கிக் கொண்டேன்— என் சிறிய சரித்திரத்தின் எல்லைகள் அவ்வளவே.

ஆனால் இந்தச் சமுதாயம் புறக்கணித்த ஒரு நாற்றமெடுத்த சதைப் பிண்டம் இன்று எனக்கு ஒரு சவால் அன்றோ! என்னால், திறந்து கிடந்த அவள் அங்கங்களைப் பார்க்க முடிந்ததேயன்றி .... அவரைப்போல் மூடத் தெரியவில்லையே..... குஷ்டரோகியை விட நான் எத்தனைபடிகள் தாழ்ந்தவன். மனப்போராட்டங்கள் என்னுள் பின்னி மாய்த்தன.

தென்மேற்கிலிருந்து வீசிய பருவக்காற்று வேகமாக மழைச் சாரலுடன் சீறிப் பாய்ந்தது. பையிலிருந்த சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டேன்.

இதற்குள் என்முன்னால் உட்கார்ந்துகொண்டே அவர் தூங்கி விட்டார்.

'' ஏங்க.....ஏங்க.....என்ன தூக்கமா?'' நான் தட்டி எழுப்பாத குறையாக எழுப்ப முயன்றேன்.

''என்ன சாமி....ஆமா கொஞ்சம் தூக்கம்தான். ஆகா தூக்க கலக்கத்திலும் என்ன மரியாதை இவருக்கு ?''

''ஐயா என்னை இனி நீங்க சாமீன்னு கூப்பிடக்கூடாது தெரிஞ்சுதா ? சும்மா தம்பீன்னே கூப்பிடுங்க'' அதிகாரமும் அன்பும் தொனிக்கக் கட்டளையிட்டேன்.

''சரி தம்பி.....பேசுங்க..'' அவரால் எதையும் எளிதில் ஜீரணித்துக் கொள்ள முடிகிறது. வறுமையும் வியாதியும் அவரை அந்த அளவுக்குப் பக்குவப்படுத்தியிருந்தன.

''இந்த நோயை இப்படி வைச்சுக்கிட்டு அலையறதுக்கு அரசாங்க குஷ்டரோக நிவாரண விடுதியில் சேர்ந்திருக்கலாமே.

''தம்பி நான் எப்பவோ போய்ச் சேர்ந்திருப்பேன். என் கூட்டாளிகளெல்லாம் அங்க போய்ச் சேர்ந்திட்டாங்கல்ல...போய்க் கடிதாசு எல்லாம் போட்டிருக்காங்கல்ல... நல்ல கவனிப்பாம். நல்ல வசதி தானாம்..ஆனால் நான் குடிக்கிற கட்டைப்பீடி சுகம் தான் கிடைக்கலையாம்.'' — இதைச் சொல்லிவிட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான். பல்லெல்லாம் தெரிய வாயைப் பிளந்து சிரித்தான். எனக்குப் பயமாக இருந்தது.

இந்த இரணவேதனையில் இருக்கும் இவனுக்கும் சில விஷயங்கள் சிரிப்பதற்கு என இருக்கிறது. சிரிப்பு எல்லா

கதை, கட்டுரை, கவிதை எழுதுவோர் கவனத்திற்கு....

'தமிழரசு' இதழுக்கு, எழுத்தாள நண்பர்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை ஏராளமான அளவில் வந்து சேருகின்றன. தகுதி பெற்றவை அவசியம் வெளியிடப்பெறும்; வெளியிடப் பெறாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே எழுத்தோவியங்களை அனுப்புவோர், படி எடுத்துக் கொண்டு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ருக்கும் ஒன்றுதானே.....இந்த ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கின்றான். ''அண்ணா இஸ் கரெக்ட்'' நான் இவ்வாறு மனத்திற்குள் எண்ணிக்கொண் டேன்.

''பிறகு ஏன் நீங்க சேரலே'' விஷயங்களைக் கிரகித்தேன்.

''என்ன தம்பி நீங்க...நான் போய்ச் சேர்ந்திட்டா மட்டும் ஆயிற்றா..இந்தப் பொண்ணு கதி..என் வாழ்வு பெரிசில்லே தம்பி..இந்தப் பிஞ்சு வெம் பிடக்கூடதே? அது ஆயிரங் காலத்துப் பயிர்! அதான் ராசா நான் வெளியிலே இருக் கேன்'' வார்த்தைகள் தொண் டையிலேயே சிக்கிக் கரகரத் தன. அந்த அளவுக்கு துயரக் கேணியின் ஆழத்தில் அந்த ஜீவன் தத்தளித்து நின்று கலங் கியது.

''இந்தப் பொண்ணுக்கு ஒரு வாழ்வு கிடைச்சிட்டா விடுதி யிலே சேர்ந்திடுவீங்கல்லே.... இல்லாட்டி... சாகணுமுன்னு நினைப்பீங்களா''—அவர் மனோ லயத்தை எடை போட்டேன்.

''தம்பி, தம்பி, என்னைக் கோழைன்னு நினைச்சிடா தீங்க..எனக்கு என் வாழ்வைப் பற்றிய வெறுப்பில் தான் அப் படிச் சொன்னேன். ஆனா என் ஆதங்கத்தை உங்ககிட்டே சொல்லித்தான் ஆகணும்.... இது போன்ற நல்ல பெண் களுக்கு வாழ்வு கொடுக்க எந்த காந்தி தம்பி இந்த பிளாட் பாரத்துக்கு வரப்போறான்?''

''உங்களுக்கு ஒரு வழியும் இந்தப் பெண்ணுக்கு ஒரு வாழ்வுந்தானே ?'' என்றேன்.

வேதனையோடு பேசிக்கொண் டிருந்த அவர் உடனே என்னை வேடிக்கையாகப் பார்த்தார்.

''நம்பிக்கையோடு என்னோடு வாருங்கள்! நான் அந்த ஏற் பாட்டைச் செய்கிறேன்!''

என்னுடைய அந்தச் சொற் களிலே எப்படிப்பட்ட பிடிப்பு அவருக்கேற்பட்டதோ தெரிய வில்லை. மூவருமே, வந்து நின்ற இரயில் வண்டியில் ஏறி னோம்.

அந்தத் தொழுநோய் இரவ லர் இல்லத்துக்குள் நுழையும் போதே வழியில் குறுக்கிட்ட வர்கள் அனைவரும் எனக்கு வணக்கம் செலுத்துவதை அவர் பார்த்து,

''தம்பி ! நீங்க......?''

''நான்தான் இங்கே அதி காரி!'' அதற்குமேல் அவர் வரவில்லை; நின்றுவிட்டார்.

''சும்மா வாங்கய்யா!''

''நீங்க யாருன்னு தெரி யாமே ஏதோதோ பேசிட்டேன். தப்பு ஏதாவது இருந்தால் மன்னிச்சிடுங்க, சார் !''

நெறியைப் பொறுத்தது நிலை என்றில்லாமல் நிலைக்குப் பணிந்து நிற்க வேண்டிய அள வுக்கு நெறி தாழ்ந்து போன தைத் தன் செயலால் உணர்த் திய அந்த மனிதரை வேதனை யோடு பார்த்தேன்.

''இப்போது நீங்கள் நோ யாளி, நான் அதிகாரி. பேசா மல் என்னோடு வாருங்கள்,'' என்று அதட்டி அழைத்துச் சென்றேன்.

அனுமதிச் சடங்குகள் எல் லாம் ஒருவிதமாக முடிந்தன.

''நீங்கள் இப்போது உங்கள் படுக்கைக்குப் போகலாம்'' என்று, அங்கிருந்த வேலையா ளிடம் அழைத்துச் செல்லும் படிச் சொன்னேன்.

என்னையும் அந்தப் பெண்ணை யும் பரிதாபமாகப் பார்த்தார் அவர்.

''அவள் என்னோடு இருப் பாள்'' என்று குறிப்புணர்ந்து கூறினேன்!''

பரிதாபமான தோற்றத்தை உடனே பயங்கரமாக மாற்றி னார்.

''தனியாக அல்ல, எனக்கு மனைவியாக !''

''தம்பீ.....! வேண்டாம் தம்பீ ! உங்கள் அந்தஸ்து என்ன ! குலமோ கோத்திர மோ தெரியாத இந்தப் பெண்ணை......''

''குடும்பம் நடத்தக் குலம் தேவையில்லை; குணந்தான் தேவை ! ''

எப்படிப்பட்ட பதிலையும் ஏற்றுக்கொள்ளுகிற நிலைக்கு ஏற்கனவே அவர் தன்னைத் தாழ்த்திக் கொண்டதால் என்னை எதிர்த்துப் பேசத் தயங்கினார். எண்ணங்கள் பல அவருடைய இதயத்தைவிட்டு வெளியேறத் துடித்துக்கொண் டிருக்கின்றன என்பதை அவ ருடைய விழிகளின் வழியே உணர்ந்தேன் நான்.

''ஐயா, பெரியவரே! உங் களைப் பிடித்திருக்கும் நோய் போலச் சமுதாயத்தைப் பிடித் திருக்கும் பெருநோய்தான் ஜாதி, குலம் என்பதெல்லாம் இரண்டையுமே குணப்படுத்த வழி இருக்கிறது''

''எப்படி?''

வழக்கம்போல வாய் பேச வில்லை; விழிகளே வினாக்குறி களாயின.

''ஒன்றுக்கு மருத்துவமனை; இன்னொன்றுக்கு கலப்புமணம். இரண்டையுமே செய்தவர்கள் ....''

சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு வாழ்ந்த அவருக்கு இதெல் லாம் புரியுமோ என்ற நினை வால் முடிக்கத் தயங்கினேன்.

''யாருங்கய்யா அவர்கள்?''

சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்த மூன்று படங்களையும் சுட்டிக் காட்டினேன்.

பகுத்தறிவுத் தந்தை பெரி யார்-பேரறிஞர் அண்ணா— டாக்டர் கலைஞர்! எங்கள் மூவரையும் அந்த மூவரும் கண்காணித்துக் கொண்டிருந்த னர்.

தன் வாழ்வின் எந்த முனை யிலும் குறுக்கிடாத அந்த மூவரையும் பயத்தோடும் பக்தி யோடும் பார்த்துக்கொண்டே நின்றார் அவர்.

அவனை நோக்கித் திரும்பிய பார்வைக்குப் பணிந்தது அவ ளுடைய தலை. பற்றிய என் கைகளைக் கண்களிலும் ஒற்றிக் கொண்டாள்.



பயன் மிகு முருங்கைப் பயிரிடுவீர்!

முருங்கை வெப்ப நாடுகளில் வளரும் மிகச் சாதாரணமான மரங்களுள் ஒன்று. மேற்கு இந்தியத் தீவுகளில் இது காட்டு மரமாய்க் காணப்படுகிறது. இந்தியா முழுவதிலும் உணவுச் சத்துமிக்க இலைகளுக்காகவும், காய்களுக்காகவும் இது பயிர் செய்யப்படுகிறது. இதன் இலைகளும், காய்களும் அனைவரும் விரும்பும் காய்கறிகளாகும். இம்மரத்தின் ஒவ்வொரு பாகமும் மருந்தாகவும் பயன்படுகிறது. வேரின் தனித்தன்மை வாய்ந்த சுவை காரணமாக இது 'குதிரை முள்ளங்கி மரம்' எனவும் அழைக்கப்படுகிறது. இதன் காய்களின் நீண்டு உருண்ட வடிவின் காரணமாக 'கொட்டுக்குச்சி' (Drumstick) எனவும் அழைக்கப்படுகிறது.

தலைசிறந்த காய்கறியாய் இருப்பினும் வீட்டுப்புறங்களில்தான் பொதுவாக வளர்க்கப்படுகிறது. அதைப் பெரும் அளவில் பயிரிடக் காண்பது அரிது. பயிரின் பரப்பு அளவுகளைக் குறித்த திட்டமான தகவல் ஏதும் கிடையா.

இனங்கள்

காய்களின் குணங்களில் முருங்கை இனங்கள் ஒன்றிற்கொன்று வேறுபடுகின்றன. பொதுவாக, காய்கள் இளம் அல்லது கட்டி பச்சை நிறமாகக் காணப்படும். சில இனங்களில் இளங்காய்கள் பழுப்பு நிறமாகக் காணப்படுகின்றன. சில இனங்களில் காய்கள் குட்டையாகவும், வேறுசில இனங்களில் காய்கள் நீளமாகவும் உள்ளன. காயின் சதைப்பற்று மிக முக்கியமான குணமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் சுமார் 45 இனங்கள் உள என அறியப்படுகிறது. இலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட 'யாழ்ப்பாணம்' (Jaffna) என்னும் இனமானது மிகுந்த விளைச்சல், நீண்டகாய், சமையலுக்குச் சிறந்த குணங்கள் முதலியன உடையதாக விளங்குகிறது.

இனவிருத்தி

கிளைகளை வெட்டி நடுவது சாதாரணமாகக் கையாளும் முறையாகும். சுமார் 1 முதல் 2 அடி நீளம் உள்ள குச்சிகளை 30 செ.மீ. ஆழத்தில் குழிகளில் நட்டு, அவை தழையும் வரை தண்ணீர் வார்க்க வேண்டும். மழைக்காலத்தில் தண்ணீர் ஊற்ற வேண்டியதில்லை. 'செராடிக்ஸ். 2' என்ற மருந்தில் தோய்த்து நட்டால், குச்சிகள் 28 நாட்களில் எடுத்து நடப்பட தயாராவதுடன், 100 சத வெற்றி பெறுகின்றன. தலைப்பாகம் நீக்கிய அடிமரத்தைச் சுற்றி மண் உயர்த்தி பதியம் போடும் முறையையும் கையாளலாம். விதைகளை நாற்றங்காலில் விதைத்தும் நாற்றுக்கள் தயாரிக்கலாம். காய்கள் முதிர்ந்தபின் நெற்றாக மாறுகின்றன. நெற்றியிலிருந்து எடுத்து சுமார் 25 மாதங்களுக்கு பிறகும் கூட 83 சதவீதம் விதைகள் முளைத்தன என சோதனை மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே, தூரமான இடங்களுக்கு அனுப்ப விதைகளையும், அருகாமையிலுள்ள இடங்களுக்குக் குச்சிகளையும் பயன்படுத்தலாம்.

பின் கவனிப்பு

மண்ணில் போதிய ஈரம் இருக்கும் மழைக்காலம் செடி நடவும், அல்லது விதை விதைக்கவும் ஏற்றது. காய் பறிக்கப்பட்ட பின் நடுவதற்கான கிளைகளை வெட்டுவது வழக்கம். இதற்கு ஒழுங்காக எவ்விதமான சாகுபடிகளும் செய்யப்படுவதில்லை. சோதித்துப் பார்த்ததில் தழைச்சத்தை தொழு உரம் மூலமோ அல்லது அம்மோனியம் சல்பேட் மூலமோ இட்டபோது உரமிடப்படாத மரங்களைவிட, அதிக விளைச்சல் கொடுப்பதாக அறியப்பட்டது. மழைக்காலத்தில் மரத்தினடியில் எருப்போட்டு, அதை கொத்தி மண்ணுடன் கலந்துவிட வேண்டும்.

முருங்கை மரத்திற்கு ஒழுங்காகத் தண்ணீர் கட்டப்படுவதில்லை. மேலும் தண்ணீர் பாய்ச்சுதல் மகசூலைக் குறைக்கும் எனவும் கருதப்படுகிறது.

'முருங்கையை முறித்து வளர்' என்பது பழமொழி. சில கிளைகள் கொழுத்து நீண்டு வளரும். இவைகள் உறுதியாய் இரா. எனவே, காய்த்த பின் காய்களின் பளுவால் குறிப்பாக பலத்த காற்றடிக்கும்போது ஒடிந்துவிழும். இவ்வாறு மகசூல் குன்றுவதுமன்றி காய்களை அறுவடை செய்வதும் எளிதல்ல. காய்களை அறுவடை செய்த பின்னர் முதிர்ந்த கிளைகளை விட்டுவிட்டு தரையிலிருந்து சுமார் 3 அல்லது 4 மீட்டர்கள் உயரத்தில், கவாத்துச் செய்துவிடுவது நலம். இவ்வாறு வெட்டப்பட்ட கிளைகளை நடுவதற்குப் பயன்படுத்தலாம்.

அறுவடையும் விளைச்சலும்

முற்றிய காய்கள் சாரமற்று தக்கை போலாகி சமையலுக்குப் பயனற்றதாகிவிடும். எனவே, முழுவளர்ச்சி அடைந்த இளங்காய்கள் அறுவடை செய்யப்படுகின்றன. காய்களை நீண்ட கொக்கி உள்ள குச்சிகளால் அறுவடை செய்கின்றனர். காய்கள் தரையில் விழுந்து உடைந்தோ ஒடிந்தோ சேதமுறாதவாறு கவனத்துடன் பறித்தெடுக்க வேண்டும். காயமுற்ற காய்களை சந்தையில் ஒதுக்கி விடுவர். மரம் ஒன்றுக்கு சுமார் 400 காய்கள் கிடைக்கும். சுமார் 20 ரூபாய் வருமானம் அடையலாம். (ஒரு எக்டேருக்கு ரூபாய் 5,000) காய்கள் நீளத்திற்கேற்றவாறு சின்னக் கட்டுகளாகக் கட்டி சந்தைக்கு அனுப்பப்படுகின்றன.

பூச்சிகளும் நோய்களும்

முடிப்புழுக்கள்: இவைகளை 'கம்பளிப்புழுக்கள்' என்றும் கூறுவர். இவை செடி வளர்வதை முக்கியமாகப் பாதிக்கின்றன. இலைகளைத் தின்று சேதப்படுத்துகின்றன. அடி மரத்தில் அடர்த்தியாகக் காணப்படும் இப்புழுக்கள் இடம் பெயரும்போது மரத்தடியில் வீழ்வதாலும், ஒருவித நூலில் தொங்கிக் கொண்டிருக்கும் போதும் அவ்வழியே செல்வோரின் உடம்பில் ஒட்டிக்கொள்ளும்.

அதன் முடி நம் உடலில்பட்டால் அரிப்பும், வீக்கமும் உண்டாகும். தீச்சுடரினுல் கருக்கியோ, தண்ணீரில் கலக்கப்பட்ட கட்டியான சாணக் கலவையை அடிமரத்தில் தெளித்தோ இப்புழுக்களைத் தடுக்கின்றனர். ஒரு மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதால் இதைக் கட்டுப் படுத்தலாம்.

பச்சைப்புழு: இது முருங்கையை அதிகமாகப் பாதிக்கக் கூடிய பூச்சி. பாரத்தியான் 50 சத இ.சி. மருந்தில் 2 மி.லி. லிட்டரை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தால் இப் பூச்சி கட்டுப்படும்.

மொட்டுப்புழு: இது பூக்களைத் தாக்குவதால் ஏராளமான பூக்கள் உதிர்ந்து விடும். கள்ளிப்பூச்சி, பேன் முதலியன சிலகால் காணப் படுகின்றன. பொதுவாக இவற்றிற்கான தனிப்பட்ட சிகிச்சை செய்யப்படுவதில்லை.

அழுகல் நோய்: (Diplodia Sp) : போர்டோ கரைசல் 1 சதம் தெளிக்கவும்.

மருத்துவக் குணங்கள்

வேர் : வாதநோய், விட்டுவிட்டு வரும் காச்சல், காக்காய் வலிப்பு, முதலியவற்றிற்கு மருந்தாக பயன்படுகிறது. இருதயத்திற்கு சத்துமிக்க மருந்தாகவும், தலைச் சுற்று, பைத்தியம், வயிற்றுவலி முதலியவற்றிற்கு மருந்தாகவும் பயன்படுகிறது. வேரின் பட்டை சுருக்கு வலிக்கு ஒத்தடம் இட பயன்படுத்தப்படுகிறது.

பட்டை : கருச் சிதைவு உண்டாக்கக் கூடியது.

காய் : மண்ணீரல், கல்லீரல் நோய்கட்கும், மூட்டு வலிகளுக்கும், காய ஜன்னிகளுக்கும், வாத நோய்க்கும் மருந்தாகிறது.

பூக்கள் : சிறுநீர், பித்தநீர் இவற்றை அதிகமாய்ச் சுரக்கச் செய்கிறது. உற்சாகமூட்டுகிறதும், பாலுணர்ச்சியை எழுப்புகிறதுமாயிருக்கிறது.

விதைகளின் எண்ணெய் : வாத நோய்க்கு வெளிப்பூச்சாக பயன் படுகிறது.

பசை : பல், காது இவற்றில் உண்டாகும் நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது.

விதை : மேக நோய் சிகிச்சைக்காகப் பயன்படுகிறது. கடிகாரங்களுக்கு மசகுப் பொருளான 'பென்' எண்ணெய் தயாரிக்க உதவுகிறது.

பிசின் : காலிக்கோ அச்சடிப்புக்கு உதவுகிறது.

உணவுச் சத்துக்கள்

முருங்கை இலைகளும், காய்களும் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளில் 100 கிராமில் என்னென்ன சத்துக்கள் உள்ளன என்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து		முருங்கை இலை	முருங்கைக் காய்
உண்ணும் பகுதி (சதவீதம்)	...	75	83
ஈரம் (கிராம்)	...	75.9	86.9
புரதம் (கிராம்)	...	6.7	2.5
கொழுப்பு (கிராம்)	...	1.7	0.1
உப்புச்சத்து (கிராம்)	...	2.3	2.0
நார் (கிராம்)	...	0.9	4.8
மற்ற சத்துக்கள் (கிராம்)	...	12.5	3.7
சக்தி (கலோரி)	...	92	26
சுண்ணும்பு (மில்லி கிராம்)	...	440	30
மக்னீசியம் (மில்லி கிராம்)	...	24	24
ஆச்சாலிக் அமிலம் (மில்லி கிராம்)	...	101	101
எரியம் (மில்லி கிராம்)	...	70	110
இரும்பு (மில்லி கிராம்)	...	7	5.3
உவரம் (மில்லி கிராம்)	...	—	—
சாம்பரம் (மில்லி கிராம்)	...	259	259
செம்பு (மில்லி கிராம்)	...	0.62	0.6
கந்தகம் (மில்லி கிராம்)	...	137	137
குளோரின் (மில்லி கிராம்)	...	423	423
விட்டமின் ஏ (அளவு ஐ.யு.)	...	11,300	184
தயமின் (மில்லி கிராம்)	...	0.06	0.05
ரைபோஃப்ளேவின் (மில்லி கிராம்)	...	0.05	0.07
நிக்கோடியானிக் அமிலம் (மில்லிகிராம்)		0.8	0.2
விட்டமின் சி (மில்லி கிராம்)	...	220	120

டி. பவுலஸ்,
தோட்டக்கலைத்துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை. 3.

வறட்சியைத் தாங்கி வளரும் ரகங்கள்

"புன்செய் விளையின் பஞ்சம் தீரும்!" என்ற பழமொழியின் உண்மையை உணர்ந்தே, இன்றைய தமிழ் நாடு அரசு, புன்செய் நிலங்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும், புன்செய்ப் பயிர்களின் உற்பத்தியில் உழவர் பெரு மக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்காக, புன்செய் நிலங்களுக்குரிய நில வரியையும் நீக்கியது!

தமிழ் நாட்டில் பயிரிடப் படும் மொத்த நிலப்பரப்பில் 60 சத அளவிற்கு மேற்பட்ட பரப்பு புன்செய்நிலங்களாகவே உள்ளன! அதாவது, தமிழ் நாட்டில் பயிரிடப்படும் 160 இலட்சம் ஏக்கர் பரப்பளவில், 100 இலட்சம் ஏக்கர் பரப்பளவு புன்செய் நிலங்களாகவே உள்ளன. தமிழ் நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தியில், ஏறத்தாழ 48 சத அளவினை மானாவாரியாகச் சாகுபடி செய்யப்படும் புன்செய் நிலங்களே அளிக்கின்றன! தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களாக உள்ள புன்செய் நில உழவர் பெருமக்கள், தங்கள் வயிற்றுக்கும், வாழ்வுக்கும், கால்நடைகளுக்கும் புன்செய் நிலங்களையே நம்பியுள்ளனர்! அவர்களில், அநேகர் தங்கள் வயிற்றுக்கும், வாய்க்கும் பற்றாத நிலையிலேயே புன்செய் நிலங்களில் பயிரிட்டு வருகின்றனர்.

இப்படிப்பட்ட நிலை இனியும் இருக்கக் கூடாதென்பதற்காகவே, புன்செய் நிலங்களுக்கு ஏற்ற—வறட்சியைத் தாங்கிக் கொண்டு வளரக் கூடிய—புதிய ரகங்களை ஆராய்ச்சி மூலம் உருவாக்கிக் கொடுப்பதில் இன்றைய தமிழ் நாடு அரசு பெருங் கவனம் செலுத்தி வருகிறது. அந்த ரகங்கள் வறட்சியைத் தாங்கிக் கொண்டு வளர்ந்து விட்டால் மட்டும் போதாது, குறுகிய காலத்தில் விளையக் கூடியதாகவும், அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்ததாகவும், இருக்க வேண்டும் என்பதில் இன்றைய தமிழ் நாடு அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. ஏனெனில், வறட்சியைத் தாங்கிக் கொண்டு வளரும் ரகங்கள், குறுகிய காலத்தில் அதிக மகசூல் தர வல்லதாக இருந்தால்தான், பல பயிர் சாகுபடிக்கு வழி கோலுவதுடன், பருவ மழை பொய்த்திடும் காலத்திலும்— அந்த ரகங்கள் சாதாரண ரகங்களை, விட விரைவாக வளர்ந்து — ஓரளவிற்கேனும் நல்ல மகசூல் தந்திடும்! எனவேதான், புன்செய் நிலங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு உதவிடும்— வறட்சியைத் தாங்கி வளரும், குறுகிய கால, அதிக மகசூல் தரும்— ரகங்களை (Drought resistant, short duration high yielding and hybrid varieties) உருவாக்குவதில் தமிழ் நாடு அரசு முனைப்பாக உள்ளது.

மானாவாரி சாகுபடிக்குஏற்ற —வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய— குறுகிய காலப் பயிர்களை உருவாக்குவதில் தமிழ்

நாடு சிறந்த சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது! அச் சாதனைகளை உருவாக்க தமிழ் நாடு வேளாண்மைத் துறையும், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் அயராது ஆராய்ச்சி செய்து வந்துள்ளதுடன், தொடர்ந்து செய்து வருகின்றன! இதுவரை நடைபெற்று வந்துள்ள ஆராய்ச்சிகளும், அதன் பயனைக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ரகங்களும், அவைகளின் மகசூல் திறனும் கீழே விளக்கப்பட்டுள்ளன.

வறட்சியைத் தாங்கி வளரும் ரகங்கள் *

நெல்

வறட்சியைத் தாங்கக்கூடிய நெல் ரகங்களை உருவாக்கும் திட்டம் ஒன்று 1954 முதல் 1964 வரையிலும் செயல்பட்டதின் மூலம், 1963—64-ல், 'கோ. 31' என்ற நடுத்தரகால நெல் ரகம் வெளியிடப்பட்டது.

நான்காவது திட்ட காலத்திற்குள் அதாவது 1973-ல், 'டி. கே. எம். 7' (குள்ளக்கார்) என்கிற குறுகிய கால, வறட்சியைத் தாங்கக் கூடிய நெல் ரகம் வெளியிடப்பட்டுள்ளது. அதோடு ஒரு சிறந்த 'கல்சர் 1251' (டி. கே. எம். 6 × டி. என். 1)-ம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'டி. கே. எம். 7' என்கிற ரகம் 108 நாட்கள் வயதுடையது; சொர்ணவாரி, சம்பா, நவரை ஆகிய 3 பருவங்களுக்கும் ஏற்றது.

நம் மாநிலத்தின் வட, தென் பகுதிகளில் 'கல்சர் 1251' அனுசரணை ஆராய்ச்சியில் சோதனை செய்யப்படுகிறது. இது வரை கிடைத்த விவரங்களின் மூலம், நேரடி விதைப்பில் திருநெல்வேலி மாவட்டத்தில் சராசரியாக 108 நாட்களில் எக்டேருக்கு 4,684 கிலோ நெல் தந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இதுவன்றி, ஆடுதுறை மண்டலவேளாண்மைஆராய்ச்சி நிலயத்தில் மிகவும் குறுகிய கால 'கல்சர் 7711' (ஐ. ஆர். 262 × எ.டி.டீ. 27) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் வயது 85 முதல் 90 நாட்கள் ; இது இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி செங்கற்பட்டு, வடஆர்க்காடு முதலிய மாவட்டங்களில் பரிசோதனையில் இருக்கின்றது. இதன் மகசூல் சில இடங்களில் எக்டேருக்கு ஆறு டன்னுக்கும் அதிகமாகவும், சாதாரண சூழ்நிலைகளில் சராசரியாக எக்டேருக்கு 3.9 டன்னும் கிடைத்துள்ளது.

'கல்சர் 1251' (டி.கே.எம். 6 × டி.என். 1) உழவர்களின் வயலில் நிலையான ரகங்களுடன் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது. புதிதும், உயர்ந்த உயர்ப்படிவ (Genotypes) ரகங்களைக் கொண்டு, புது கரு ஒட்டுச் சேர்க்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சோளம்

தென் மாவட்டங்களில் பயிரிட 'சி.ஓ.எச். 2' என்றவீரியச் சோளம் வெளியிடப்பட்டுள்ளது. இதனை 'கோவில்பட்டி உயரச் சோளம்' என்று வழங்குவர். இச் சோளம் 90 நாள் வயதுடையது ; சராசரியில் எக்டேருக்கு 44 குவிண்டால் தானியமும், 120 குவிண்டால் தீவனமும் கொடுக்கிறது. இது, முந்தைய உயர்வித்தான 120 நாள் வயதுடைய 'கே. 3' என்ற சோள வகையை விட 42 சதவிகிதம் அதிக தானிய விளைச்சல் அளிக்கக் கூடியது. தீவன விளைச்சலிலும் இந்த ரகம் சுமார் 19 சதவிகிதம் அதிகம் கொடுக்கிறது.

இதே போல், 'பெரிய மஞ்சள் சோளம்', 'தலைவிரிச்சான் சோளம்' ஆகியவை பயிரிடப்படும், கோவை மாவட்டப் பகுதிகளிலும், சேலம், வட ஆர்க்காடு வட்டாரங்களிலும் பயிரிடப் பொருத்தமான 'சி. ஓ.எச். 1' என்ற சோளம் உருவாக்கப்பட்டுள்ளது. இது 100—105 நாட்கள் வயதுடையது. இது ஆனி—ஆடிப் பட்டத்தில் எக்டேருக்கு 63 குவிண்டால் தானியமும், 124 குவிண்டான் தீவனமும் அளிக்கக்கூடியது.

இவை தவிர மேலும் சில குறுகிய கால புது வகைகளை உருவாக்கச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

கம்பு

குறுகிய காலக் கம்பு இனங்கள் தமிழ் நாட்டில் ஆறேழு ஆண்டுகளாக பயிரிடப் பட்டு வருகின்றன. இவை 80 முதல்



பி.ஓ.எல்.2

90 நாட்களில் பலன் அளிப்பன. சாதாரணமாக மானாவாரியாகப் பயிராகும் நாட்டுக் கம்பு இனங்களும் 90 முதல் 95 நாட்களில் பலன் அளிப்பன. எனவே, குறுகிய வயது என்பது, கம்பு பயிரில் ஒரு பெரும் பிரச்சினையாக இல்லை. 'எச். பி. 3' என்ற வீரியக் கம்பு மட்டும் வறட்சி நிலையிலும் 75 நாட்களுக்குள் எக்டேருக்கு 15 குவிண்டால் வரை தானிய மகசூல் தருவதாகும்.

'எச். பி. 3' வீரியக் கம்பினை விட உயர்ந்த வகைகளையும், பூசண நோய்கள் தாக்காதப் புதிய இனங்களையும் உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

கேழ்வரகு

சில ஆண்டுகளுக்கு முன் வரை 'கோ. 1', 'கே. 2' என்ற 120 நாட்கள் வயதுடைய இனங்கள் மானாவாரி கேழ்வரகு வட்டாரங்களுக்கு (சேலம், தர்மபுரி, வடஆர்க்காடு முதலிய பகுதிகள்), பரிந்துரை செய்யப்பட்டன. தற்போது 'கோ. 10', 'சாரதா', 'பி.ஆர். 202' முதலிய இனங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. இவற்றில் 'கோ. 10' என்பது 90—95 நாட்களில் அறுவடைக்கு வரும்; மற்றும் இரண்டும் 100—105 நாட்களில் பலன் தருவன. மானாவாரியில் இவற்றின் தானிய விளைச்சல் சராசரியாக எக்டேருக்கு 20 குவிண்டால் ஆகும்.

வரகு

மானாவாரியில் மட்டும் பயிராகும் இச் சிறு தானியம்சாதாணமாக 140 நாட்கள் வயது உடையது. தற்போது, பயிரிட பரிந்துரை செய்யப்பட்டு உள்ள'கோ. 2' என்ற இனமும் 140 நாட்கள் வயதுடையதே. குறுகிய கால வயதுடைய வகைகளுக்கு இப் பயிரில் தேவை ஏற்பட்டதில்லை. எனினும், தற்போதுள்ள 'கோ.2' வித்தினை விட சுமார் ஒரு மாதம் வயது குறைந்த அதிக விளைச்சல்திறன் படைத்த சில வகைகளை உருவாக்க ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது.

பருத்தி

மானாவாரி பருத்தி பயிர் சாகுபடியின் பின் பருவத்தில் நிலவும் வறட்சியைத் தவிர்க்க, குறுகிய கால ரகங்கள் சாகுபடி செய்வதே சிறந்தது! இதனைக் கருத்தில் கொண்டு, கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தீவிர ஆராய்ச்சி நடத்தப்பட்டதில் ''பாரதி'' (எம்.சி.யு. 6) என்னும் புதிய ரகம் வெளியிடப்பட்டது. இது தற்போது மானாவாரியில் சாகுபடி ஆகும் கம்போடியா ரக ''லட்சுமி'' பருத்தியை விட 15 நாட்களும், கருங்கண்ணி பருத்தி ரகமான 'கே. 8'-ஐ விட 30 நாட்களும் வயதில் குறைந்தது.

''பாரதி'' எக்டேர் ஒன்றுக்கு 693 கிலோ கிராம் பருத்தி மகசூல் அளிக்க வல்லது ; 140 நாள் வயது உடையது ; பஞ்சு மகசூல் எக்டேருக்கு ஏறத்தாழ 253 கிலோ கிராம் ஆகும்.

''கே. 8' பருத்தி 180 நாள் வயதுடையது ; பருத்திமகசூல் எக்டேர் ஒன்றுக்கு 315 கிலோ கிராம் ஆகும்; பஞ்சு மகசூல் எக்டேருக்கு 113 கிலோ கிராம் ஆகும்.

நிலக்கடலை

நான்காம் திட்டக்காலத்துக்கு முன் நிகழ்ந்த ஆராய்ச்சியின் பயனாக 'டி.எம்.வி. 2', 'டி.எம்.வி.7' என்னும் இரண்டு குறுகியகால கொத்து நிலக்கடலை வகைகள் வெளியிடப்பட்டன. 'டி.எம்.வி. 2' வடஆற்காட்டில் உள்ள குடியாத்தம் கடலை வகையிலிருந்து தேர்வு செய்யப்பட்டது. இதன் வயது 100 முதல் 105 நாட்கள் ஆகும். இதை இறைவையிலும், மானாவாரியிலும் எல்லா பகுதிகளிலும் பயிரிடலாம். ஆனால் இவ்வகைக்கு விதை மந்தகாலம் இன்மையால், பயிர் முற்றிய பிறகு மழை பெய்தால் ஈரத்தில் விதைகள் முளைக்கும் தன்மை உண்டு. மேலும் இந்த ரகம் ''டிக்கா'' இலைப்புள்ளி நோயால் எளிதில் பாதிக்கப்படுகிறது. இக்குறைகளை நீக்கும் பொருட்டு, ''டென்சி வெள்ளை'' என்னும் அமெரிக்க கொத்து தினுசு வகையிலிருந்து ''நேர்வழித் தேர்வு'' மூலம் 'டி.எம்.வி. 7' என்னும் கொத்து ரகம் உருவாக்கப்பட்டது. இது 'டி.எம்.வி. 2' கடலை வகையைவிட 20 சதம் கூடுதல் விளைச்சலும், முற்றிய பின் 10 நாளைக்கு விதை உறக்ககாலமும் கொண்டது. இதன் வயது 105 நாட்களே. இது 'இலைப்புள்ளி' நோயால் அதிக சேதம் அடைவதில்லை. இது எக்டேருக்கு 1.32 டன்கள் மகசூல் தரும்.

நான்காம் ஐந்தாண்டுகாலத் தொடக்கத்தில் 'புரோமி' 3' என்னும் ஆப்பிரிக்க ரக நிலக்கடலையையும், 'பாசி' என்னும் ஆப்பிரிக்க ரகக் கடலையையும் இனச்சேர்க்கை முறையில் இணைத்து 'டி.எம்.வி. 9' என்னும் உயர் விளைச்சல் ரகம் உருவாக்கப்பட்டது. இந்தரக நிலக்கடலை 'டி.எம்.வி. 7' என்னும் ரகத்தைப் போன்று குறுகிய வயதுடையது. இதற்கு பயிர் முற்றிய பிறகு 15 நாட்களுக்கு விதைமந்த காலம் உள்ளது. இதன் மகசூல் எக்டேருக்கு 1.38 டன்கள். இதனை 'டிக்கா' என்னும் இலைப்புள்ளி நோய்த் தாக்குவதில்லை. இது மானாவாரி, இறைவை ஆகிய இருவகை நிலங்களிலும் பயிர் செய்யப் பயன்படுகிறது.

அகில இந்திய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் திண்டிவனத்தில் பல்வேறு கொத்துகடலை வகைகள் பரிசோதனை செய்யப்பட்டு முடிவாக நான்கு கடலை தினுசுகளான '14-4', 'டி.ஜி.3', 'இ.எக்ஸ். 1.1', 'ஏ.எச். 8180.' என்பன தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றை 'டி.எம்.வி. 7' கொத்து ரகத்துடன் சோதிக்கப்பட்டு எந்த ரகம் மிகக் கூடுதல் விளைச்சல் கொடுக்கும் என ஆராயப்பட்டு வருகிறது.

ஆமணக்கு

நான்காம் ஐந்தாண்டு திட்டத்திற்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவாக 'எஸ்.ஏ. 1', 'எஸ்.ஏ. 2' என்ற இரண்டு குறுகியகால உயர்விளைச்சல் ஆமணக்கு ரகங்கள் உருவாகின. 'எஸ்.ஏ. 1'ஐ காட்டிலும். 'எஸ்.ஏ. 2' ஒரு மாதம் குறைவான வயது கொண்டது. இது வறட்சியைத் தாங்கக் கூடியது. குறைவான மழை உள்ள இடங்களிலும் இதனை இலாபகரமாகப் பயிர் செய்யலாம்.

எள்

மானாவாரியில் குளிர்கால சாகுபடிக்கு (நவம்பர்-டிசம்பர் முதல் பிப்ரவரி-மார்ச்சு வரை) இரண்டு குறுகிய கால எள் தினுசுகளான 'டி.எம்.வி. 2' 'டி.எம்.வி. 3' என்பன ஆராய்ச்சியின் பயனாக வெளியிடப்பட்டன. இரு வகைகளும் 80 நாட்கள் வயது கொண்டவை. எண்ணெய் இருப்பு 50 முதல் 52 சதம் உடையவை.

சூரியகாந்தி

கோவில்பட்டியில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி பண்ணையில் சூரியகாந்தி மேம்பாட்டுத் திட்டத்தில் அனேக சூரியகாந்தி வகைகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு, ரஷ்யநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 'இ.சி. 68414' என்னும் உயர் விளைச்சல் ரகம் 'கே. 1' என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இதன் வயது 90 நாட்கள். இன்னும் குறுகிய கால வயதுடையதும், உயர்விளைச்சல் தரக்கூடியதுமான ரகங்களை வெளியிட இனச்சேர்க்கை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீவிர ஆராய்ச்சியின் பலனாக மானாவாரி இயற்கைச் சூழ்நிலையில் பயிரிடுவதற்குத் தகுந்த, குறைந்த காலத்தில் பலனளிக்கக் கூடிய கீழ்க்கண்ட பயிர் வகைகளைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

சோளம் 'சி.ஓ.எச். 2'

கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் உள்ள மானாவாரி நிலப்பகுதியில் பயிரிடுவதற்கு ஏற்ற 'டௌனிமைல்ட்யூ' என்னும் நோயினால் பாதிக்கப்படாத, 100 முதல் 105 நாட்களில் பலன் தரக்கூடிய உயரமான கலப்பினச் சோளம்.

'771' சோளம்

குட்டையான நடுத்தர சோள வகை; பயிர்ப் பூச்சித் தாக்குதலையும், நோய்களையும் தாங்கக்கூடிய சக்தி வாய்ந்தது ; வறட்சி நிலைமையிலும் வளரக் கூடியது. இதில் அதிக அளவு 'செரிட்டோன்' சத்து தங்கியுள்ளது.

சி.ஓ.4 தினை

மழைகாலங்களில் கலப்பினப் பயிருக்கு ஏற்ற 65 நாட்கள் வயதுடைய குறுகிய கால அளவில் பலன் தரக்கூடிய தினை வகையாகும்.

'சி.ஓ. 2 சாமை, சி.ஓ. 10 கேழ்வரகு

இவ்விரு ரகங்களும் குறுகிய காலப் பயிர்களாகும்; பலன் தர சுமார் 90 நாட்களாகும்.

'சி.ஓ. 2' உளுந்து

மானாவாரி நிலைமையில் எல்லாப் பருவங்களிலும் பயிரிடக் கூடிய உளுந்து; இதை மற்ற பயிர்களுடன் கலந்தும் பயிரிடலாம்.

'சி.ஓ. 1' துவரை

தனித்துப் பயிரிடுவதற்கும், கலப்புப் பயிராகப் பயிரிடுவதற்கும் 'சி.ஓ. 1' துவரை ஏற்றதாகும். பயிர்க்கால அளவு 135 நாட்களாகும்.

'சி. ஓ. 2' பச்சைப்பயறு

எல்லாக் காலங்களிலும், பயிரிடக்கூடிய 60 முதல் 70 நாட்களில் பலனளிக்கக்கூடிய பச்சைப்பயறு. இதில் 80 சதவீதம் ஒரே சமயத்தில் பூத்துக் காய்க்கிறது.

'சி.ஓ. 1' காராமணி

எல்லா மாவட்டங்களிலும் மானாவாரிப் பயிராகப் பயிரிடக்கூடிய — 100 நாட்களில் பலன் தரக்கூடிய—காரமணிப் பயறு.

'சி.ஓ. 6, சி.ஓ. 7, சி.ஓ.8'

ஒரு எக்டேருக்கு 4 டன்கள் மகசூல் தரக்கூடிய, 120 நாட்களில் பலன் கொடுக்கும் 'அவரை' வகைகள்.

பி.ஓ. எல். 2 நிலக்கடலை

இது 105 நாட்களில் பலன் தரக்கூடியது; ஒரு எக்டேருக்கு 1,500 கிலோ கிராம் விளைச்சல் தரக்கூடியது.

மேற்கூறிய வறட்சியைத் தாங்கும் குறுகிய கால ரகங்களைப் பயிரிட்டால், புன்செய் நிலங்களில் பலபயிர் சாகுபடி செய்ய, வழிபிறக்கும். மேலும் இந்த ரகங்களைப் பயன்படுத்தி கலப்புப் பயிர் செய்தால் (Mixed Farming) பருவமழை பொய்த்திடும் காலத்தில் ஒரு பயிர் பொத்து விட்டாலும் மற்றொரு பயிர் மூலம் பயன் பெறலாம்.

எனவே, வாயிற்றுக்கும், வாய்க்கும் பற்றாத நிலையில் உற்பத்தி செய்து வரும் புன்செய் நில உழவர்கள், மேற்கூறிய ரகங்களைப் பயிரிட்டு, பயன் மிகக் கண்டிட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

[* குறிப்பு: தமிழ்நாடு சட்டப் பேரவையில் 13-12-74 அன்று உடுக்குறியிட்ட 2831-ஆம் வினாவிற்கு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு சி.பா ஆதித்தனார் அவர்கள் அளித்த விடையில் கண்டுள்ள விவரங்கள்.]

கிணறுகளிலும் மீன் வளர்க்கலாம்!

ஒரு நாட்டின் கொடி அந்நாட்டின் நோக்கத்தையும், பண்பையும் எடுத்துக் காட்டுகிறது. பண்டைத் தமிழகத்தில், மூவேந்தர்களுள் பாண்டியர்கள் கயல்வடிவம் எழுதிய கொடியினைக் கொண்டிருந்ததால், மீன் அந்நாட்டின் பொருளாதாரத்தை எவ்வளவு மேம்படச் செய்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது. எனவே, தமிழகம் வளம்பெற மீன்வளத்தைப் பெருக்கிடுவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

மீன் ஒரு சத்துள்ள உணவு. அதில் உலர்ந்த அடிப்படையில் 60-80 சதவீதம் புரதச்சத்துள்ளது. புரதச்சத்து நமது உடலுக்கு வேலை செய்வதற்கு வேண்டிய சக்தியைக் கொடுப்பதுமல்லாமல், தசைகள் வளரவும், புதுப்பிக்கப்படவும் உதவி செய்கின்றது.

ஒரு தனி நபருக்கு ஒரு கிலோ கிராம் எடைக்கு நாள் ஒன்றுக்கு ஒரு கிராம் புரதச்சத்து இன்றியமையாதது என்று கணக்கிட்டுள்ளனர். மகப்பேறு எய்தியிருக்கும் பெண்களுக்கும் இளஞ்சிறார்களுக்கும் இக்குறைந்த அளவைவிட அதிகப் புரதச்சத்து தேவைப்படுகிறது.

புரதச்சத்தை பருப்புத் தானிய வகைகளிலிருந்து சிறிதளவு பெற்றுக் கொள்ளக்கூடுமாயினும், முக்கியமாகப் பால் முட்டை, மாமிசம், மீன் இவைகளிலிருந்தே அதிகம் பெற முடியும். மீன் புரதத்தில் தசைகள் வளர்வதற்கு அத்தியாவசியமான 'அமினோ அமிலங்கள்' அதிக அளவில் இருப்பதால் அது தரமுள்ளதாக அமைந்துள்ளது. மேலும் மீன்புரதம் எளிதில் செரிக்கக்கூடியதாக உள்ளது. மற்றப் புரதப் பண்டங்களை விட, மீன் மலிவான விலையில் கிடைக்கிறது.

நம் நாட்டில் புரதப் பற்றாக்குறையினால் பலர் 'க்வாஷயார்கோர்', 'பெரிபெரி' முதலிய நோய்களினால் பீடிக்கப்படுகின்றனர். நாம் நபரொன்றுக்கு ஆண்டொன்றுக்கு சராசரி 2.5 கி.கிராம் அளவே மீன் உட்கொள்கின்றோம். ஆனால் பொருளாதாரம் மேம்பட்ட நாடுகளில் 25 முதல் 40 கி.கிராம் அளவு மீன் உபயோகிக்கிறார்கள்.

நமது தமிழ்நாடு அரசு மீன் உற்பத்தியைப் பெருக்க பல முயற்சிகளை எடுத்துள்ளது. தற்பொழுது தமிழ் நாட்டில் சராசரி மீன் உற்பத்தி 3 இலட்சம் மெட்ரிக் டன். இதில் உள்நாட்டு நீர் நிலைகளில் இருந்து 1.2 இலட்சம் மெட்ரிக் டன் மீன் கிடைக்கிறது. குறைந்த பட்சம் 3.0 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தியைப் பெருக்க நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உள்நாட்டு நீர் நிலைகளில் பொதுவாக 'ரோகு', 'மிர்கால்' 'கட்லா', முதலான மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இவ்வகை மீன்கள் குறுகிய கால அளவில் நல்ல வளர்ச்சியடைகின்றன. இவை வட இந்திய நதிகளிலிருந்து காவிரி நதியில் புகுத்தப்பட்டு, இப்பொழுது தமிழ் நாட்டின் எல்லா நீர்த் தேக்கங்களிலும் பெருகியிருக்கின்றன. இந்த மீன் வகைகள் நீரோட்டமுள்ள நதிகளிலும், நீர்த்தேக்கங்களில் நதிகள் தோன்றும் இடங்களிலுமே, இனப்பெருக்கம் அடைகின்றன. எனவே, இவ்வகை மீன் குஞ்சுகளை ஆண்டுதோறும் சேகரித்து மற்ற ஏரிகளிலும், குளங்களிலும் விட்டு வளர்க்க வேண்டியதாயுள்ளது.

இதை தவிர சாதா கெண்டை (Common Carp) என்றழைக்கப்படும் 'பாங்காய்' வகை மீன்கள் தற்பொழுது எல்லா நீர் நிலைகளிலும் புதிதாக புகுத்தப்பட்டிருக்கின்றன.

எனினும், கிணறுகளில் மீன் வளர்க்க இதுகாறும் தீவிர முயற்சிகள் எடுக்கப்படவில்லை தமிழ்நாட்டில் 11 இலட்சம் கிணறுகள் உள்ளதாக மதிப்பிட்டுள்ளனர். இவை பெரும்பாலும் பாசனத்துக்காகவே உபயோகப் படுத்தப்படுகின்றன. ஆண்டுக்கு 6 முதல் 12 மாதம் வரை இக்கிணறுகளில் தண்ணீர் இருக்குமாயின், மீன் வளர்க்கலாம்! கிணறுகள் 50 அடிக்கு மேல் ஆழமாயிருக்குமாயின், அவற்றில் மீன் விடவும், பிடிக்கவும் சாத்தியக் கூறுகள் இரா. கிணறுகளில் மீனுக்குத் தேவையான உணவுகள் இயற்கையாகக் கிடைக்காதாதலின் தவிடு, பிண்ணாக்கு பருத்திக்கொட்டை, மற்றும் காய்களின் கழிவுகளைப்போட்டு அதற்கு வேண்டிய ஊட்டச் சத்தை அளிக்க வேண்டும். மீன் குஞ்சுகளின் மொத்த எடைக்கு 10 சதவீதம் அளவு நாம் தீனி போட வேண்டும்.

கமலைக் கிணறுகளில் தண்ணீர் அடிக்கடி கலக்கப்படுவதால், மீன் சுவாசிப்பதற்கு வேண்டிய உயிர்வளி (பிராண வாயு) நீரில் அதிகம் இருக்கும். மின்விசைக் கருவிகள் உபயோகப்படுத்தப்படும் கிணறுகளில், மீன்உறிஞ்சி இழுக்கப்படாதபடி கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கிணறுகளில் 100 சதுர மீட்டர் பரப்பளவுக்கு 500 முதல் 1,000 மீன் குஞ்சுகள் (பல வகைகள்) விடுவதனால் அவை விரைவில் வளர்வதற்கு வேண்டிய சூழ்நிலையைக் கொடுக்கலாம். மீன் குஞ்சுகள் ஓராண்டு முடிவுக்குள் 0.75 அல்லது 1 கிலோ கிராம் எடைக்கு வளர்ந்துவிடும். முதலில் கூறப்பட்ட மீன்வகைகளைத் தவிர, விரால் மீன்களையும் கிணறுகளில் தக்க முறையில் வளர்க்கலாம். ஆனால் விரால் மீன்கள் மற்ற மீன் குஞ்சுகளை சாப்பிட்டு விடுமாதலால், மற்றவை ஓரளவு வளர்ந்தவுடன், விரால் மீன்களை கிணறுகளில் விடவேண்டும். விரால் மீன்கள் கிணறுகளிலுள்ள பூச்சிகள், புழுக்களை உணவாகக் கொண்டும் வளரும்.

எனவே, ஆங்காங்கேயுள்ள மண்டல மீன்துறை உதவி இயக்குநர்களை அணுகுவதன் மூலம், இவ்வகை மீன் குஞ்சுகளை உழவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மீன்வளம் பெருகவும், தமிழகம் வளரவும் பாடுபடுவோமாக!

தகவல்:

பா. ஜெயச்சந்திரன்,
துணைப்பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்
பல்கலைக் கழகம்,
கோவை.